www.padippakam.com

# கலாதீபம் 99




வேலணை மத்திய மகா வித்தியாலயம்
பழைய மாணவர் சங்கம் - கனடா
VELANAI MADYA MAHA VIDYALAYAM
OLD STUDENTS' ASSOCIATION - CANADA

படிப்பகம்

www.padippakam.com




# KUMAR'S SHOP

# குமார்ஸ்

தரமான ஆடைத் தெரிவுகளுக்கும்
நகைத் தெரிவுகளுக்கும்

**KUMARS SHOP**
80, bd Barbes, 75018 Paris
Tél: 01 42 59 35 10
Fax: 01 42 59 35 00

**K.T.C Jewellery**
193, rue Fg. st. Denis
75010 Paris
Tél: 01 42 05 41 36

கொமிஷன் இல்லாத நாணய மாற்றுக்கு

**SINGAPORE EXCHANGE CO.**
38, rue de Saint Quentin 75010 Paris
Tél: 01 48 74 48 21
Fax: 01 49 70 06 32

**SINGAPORE EXCHANGE CO.**
90 Bd Rochechouart, 75018 Paris
Tél: 01 42 23 03 10


படிப்பகம்

www.padippakam.com



# கருணை ஒளியே வழிகாட்டு



கல்லூரி ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும்
சிவகாம சுந்தரி சமேத நடராஜப் பெருமான்

## வேலணை மத்திய மகாவித்தியாலயம்
## பழைய மாணவர் சங்கம்-கனடா

கலை கலாச்சாரப் பிரிவினர் வழங்கும்

# கலாதீபம் 99



படிப்பகம்

www.padippakam.com



றொரன்ரோவில்
முதல்முதலில் புடவை
வியாபாரத்தை ஆரம்பித்த
முன்னோடிகள்

# 6 Kumars SILK HOUSE

என்றும் புதிய வெளியீடுகள்...

- உயர்ந்தரக தூய காஞ்சிபுரம் திருமண கூறைப் புடவைகள் பட்டுப் புடவை கூறைகள்!
- **Scotch Guard** பனாரஸ் சற்றின் புடவைகள் (குஞ்சம் கட்டியபடி) கோலம் ரங்கோலி, அபூர்வா, அனுராகா
- கோலம், ரங்கோலி, அபூர்வா, அனுராகா
- மதுராவின் புதிய வெளியீடுகள்: **Golden Tissue, Centre Brocade Turning Border** சாறிகள்
- கௌரி, காயத்திரி, மைசூர் சில்க், காஷ்மீர் சில்க் சாறிகள்.
- மாப்பிள்ளைக்குத் தேவையான சர்வாணி சூட், தலைப்பாகை, உத்தரியம் வாடகைக்கும் விற்பனைக்கும் (சகல அளவுகளிலும்)
- **Gold Coverd** பரதநாட்டிய நகைகள், ஆடைகள் பஞ்சாபி உடுப்பு வகைகள், நக்மா சூட், ரம்பா சூட், சிறுவர் சிறுமியருக்கான ஆடைகள்.
- அனைத்து வகையான எவர் சில்வர் பொருட்கள், பித்தளைப் பொருட்கள்.
- ஆண்களுக்கான Denim Trousers, Shirts, T-Shirt, Underwear, Kurtha with pijama, Kibs Lungies சால்வை, மாறுகரை பட்டு வேட்டி சால்வைகள்..



**1400 Gerrard Street East**
**Toronto ON M4L 1Z4**
**Tel: (416) 465-7131**



படிப்பகம்

www.padippakam.com



# தமிழ்த்தாய் வாழ்த்து



வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே!

வான மளந்த தனைத்து மளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன் மணம் வீசி
யிசை கொண்டு வாழியவே!

எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே!

சூழிகலி நீங்கத் தமிழ் மொழி யோங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே!

**சி. சுப்பிரமணிய பாரதியார்**



படிப்பகம்

www.padippakam.com




# Neelam Silk

உயர்ந்த ரக
திருமண கூறைப்
புடவைகள்

தூய காஞ்சிபுரம்
தர்மாவரம்
மணிப்புரி, பனாறஸ்

பஞ்சாபி சூட்ஸ்
நக்மா சூட்ஸ்
புதிய Design Lengha's

அனைத்து வகையான
கொட்டன் சாறிகள்
பிளவுஸ், துணிகள்
ரெடிமேட் பிளவுஸ்கள்!




1453 Gerrard Street East
Toronto Ontario

(416) 778-7455 / 778-8484




படிப்பகம்

www.padippakam.com



# கல்லூரிக்கீதம்

வாழ்த்துவோம் வாழ்த்துவோம் வாழ்த்துவோம்
வாழ்க பாடசாலையென்று
வணங்கிக் கூடி வாழ்த்துவோம்

ஆழி சூழும் ஏழு தீவும்
அறிவு காணும் சாலையாம்
ஊழி ஊழி ஓங்கும் சேவை
உயர்வு காணும் சாலையாம்
வாழி வேலணை மத்திய மகா
வித்தியா சாலையாம்
வாழி ஊழி ஊழி யென்று
வணங்கிக் கூடி வாழ்த்துவோம்
அன்பு ஒளியைக் காட்டும் வழியே
ஆய சின்னம் அதுவாய்க்
கொண்டு ஓங்கும் கொள்கை வழியே
குலாவும் சிறார்கள் வாழ்கவே
நன்று கல்வி நாளும் நல்கி
நல்லொழுக்கம் வளர்க்குமே
நின்று நாமும் நாடும் வாழ
நிலைக்கும் சேவை போற்றுவோம்
ஞானம் சீலம் நாடு எங்கும்
நல்கி மல்கிப் பெருகவே
மான வீர மாணவர்கள்
வளர்த்தெடுக்கும் தாயிவள்
ஆயகலைகள் அறிவியல்கள்
அள்ளி அள்ளி ஊட்டுவாள்
தேனருந்து வண்டு எனத்
திளைத்து நாங்கள் போற்றுவோம்
அன்பு ஆசார் அதிபர் கூடி
ஆக்கம் காட்டும் கோவிலாம்
இன்பத் தமிழோடாங்கிலத்தை
ஏந்திப் போற்றும் கோவிலாம்
நன்று ஆட நயந்துபேச
நமக்கருள் செய் கோவிலாம்
நின்று நாமும் நாடும் வாழ
நிலைக்கும் சேவை போற்றுவோம்
போற்றுவோம் போற்றுவோம்
வாழ்த்துவோம் வாழ்த்துவோம் வாழ்த்துவோம்.



படிப்பகம்

www.padippakam.com



# Canada's National Anthem

O Canada
O Canada! Our home and native land!
True patriot love in all thy sons command.
With glowing hearts we see thee rise,
The True North strong and free!
From far and wide, O Canada,
We stand on guard for thee.
God keep our land glorious and free!
O Canada, we stand on guard for thee.
O Canada, we stand on guard for thee.



படிப்பகம்

www.padippakam.com



# அறிமுகவுரை



வேலணை மத்திய கல்லூரியின் மாணவர்கள் இந்த உலகம் முழுவதும் பரந்து வாழ்கின்றார்கள். ஐம்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட கல்விச்சேவையின் பங்களிப்பு இது எனலாம். இம்மாணவர்கள் உலகத்தின் பிரதான நகரங்களில் எமது கல்லூரியின் பழைய மாணவர் அமைப்புக்களை உருவாக்கி ஈன்றபொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக்கேட்டதாயின் நிலையினை கல்லூரிக்கு அளித்துவருகின்றார்கள்.

எமது தாயகத்தில் ஏற்பட்ட இடையூறு காரணமாக எமது கல்லூரி இடம்பெயர்ந்து செயற்பட வேண்டியதாயிற்று. அண்மையில் மறுபடியும் தாயகத்தில் கல்வி ஒளியினை வீச ஆரம்பித்தமை எமக்கெல்லாம் மட்டற்ற மகிழ்ச்சிதரும் விடயமாகும். இதற்கு கல்லூரியை இயக்கும் அதிபர், ஆசிரியர் அவர்களின் அயராத உழைப்பும், பழையமாணவர் சங்கத்தினர், பெற்றோர், கல்வி நிர்வாகத்தினர், நலன் விரும்பிகள் ஆகியோரின் பங்களிப்பு காரணமாகும். ஆயினும் அதிபர் தம்பு அவர்களின் பொற்கால நிலையினை *(Golden Age)* எப்போது அடைவோம் என்பதில் பெரும் ஆவல் உண்டு. போதுமான மாணவர்கள் இல்லை. தொண்ணூறுவீதமான மக்கள் இடம் பெயர்ந்துவிட்டார்கள். செறிந்த வாழ்விடமாக இருந்த வீடுகளும் நெற்பயிர், தோட்டப்பயிர் நிலங்களும் காடுமண்டிக் காணப்படுகின்றன. இந்நிலையில் இனிவரும் சந்ததியினர் இங்கு வருவார்களா? என்பது கேள்விக்குறி. நாமும் ஒருசமயம் இங்கிலாந்தில் இருந்தோம். ஆனால் எப்போது தாயகம் போகலாம் என்ற ஆவல் இருந்தது.ஆனால் இப்போது அப்படியல்ல. வந்து கஷ்டப்படுவதிலும் பார்க்க வெளிநாட்டில் இருப்பதே மேல் என்ற எண்ணம்தான் மேலோங்கியிருக்கும்.

இந்தயோசனையின் பிரதிபலிப்புத் தான் ‘கலாதீபம்’ வெளியீடு. இச்சொற்றொடர் இரு கருத்துக்கொண்டது. ஒரு கருத்தின்படி கலைகளை ஒளிரச்செய்யும் தீபம் எனலாம். மறு கருத்தின்படி கலைகளை ஒளிரச்செய்யும் தீவகம் என்று கூறலாம். இன்று கனடாவில் இயங்கும் எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினர் எடுக்கும் விழா அனைவருக்கும் உந்துசக்தியைத் தரவல்லது. இவர்கள் வெளியிட இருக்கும் மலருக்கு ஒருபெயர் சூட்டுமாறு என்னைக்கேட்டபோது துறைசேர்ந்த சிலருடன் கலந்து பேசி ‘கலாதீபம்’ என்ற பெயரினைக் கூறினேன். இப்பெயர் அனைவரினதும் ஏகோபித்த ஆதரவை பெற்றபொது நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

ஆண்டவன் சந்நிதானத்தை வழிபடுவது போல எனக்கு கல்வியூட்டிய அறிவு ஆலயங்களையும் வணங்கும் வழக்கம் உண்டு. இதேபோன்று எமது கல்லூரியின் பழைய மாணவர்கள் இப்படியான நிகழ்வுகள் மூலம் அறிவாலயத்தை வணங்குகின்றார்கள். எதிர்காலம் வெற்றிகரமாக அமைந்து நம்பிக்கையூட்டும் வாழ்க்கை மலர இவை நல்ல வழிகாட்டட்டும்.

எமது கல்லூரியின் பொன்விழாதிட்டமிட்டபடி நடைபெறமுடியவில்லை. ஆயினும் பொன் விழாவுக்கான கால் கோள் விழாக்கள் நடைபெற்றுவருகின்றன. இந்தவகையில் திரு.சி. இளஞ்செழியன் தலைமையில், நடைபெற இருக்கும் விழா இனிதே நிகழ எமது உள்ளம் கனிந்த ஆசிகளும் வாழ்த்துக்களும் உரித்தாகுக.

**பேராசிரியர் செ. பாலச்சந்திரன்**

தலைவர், புவியியற்துறை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

இலங்கை



படிப்பகம்

www.padippakam.com




ௐ

# ஸ்ரீ கௌரி மங்கள சேவை

அனைத்து இந்துமத கிரியைகளுக்கும்
கனேடிய திருமணப் பதிவு அதிகாரி, இந்து மதகுரு

## பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள்(ஐயாமணி)

(புங்குடுதீவு - 10)



அனைத்து இந்து மத கிரியைகளுக்கும், திருமணம் போன்ற மங்களகரமான வைபவங்களுக்கும் வேண்டிய அனைத்துத் தேவைகட்கும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். இத்துடன் குறைந்த வாடகையில் ஸ்காபரோ, ரொறன்ரோ இடங்களில் 200பேர் முதல் 600பேர் வரை கொள்ளக்கூடிய கார் தரிப்பு வசதியுடன் கூடிய அழகான மண்டபங்களை பெற்றுக்கொள்ள எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

## (416) 266-3333


## 628 Birchmount Road, Scarborough, Ontario M1K 1P9



படிப்பகம்

www.padippakam.com





PRIME MINISTER · PREMIER MINISTRE

*I am delighted to convey my warmest greetings and congratulations to the members of the Old Students' Association of Madya Maha VIdyalayam as you take part in "Kalatheepam99."*

*One of the strengths of the Canadian social fabric is the degree to which the many groups which make up our cultural diversity maintain their individual characteristics, while at the same time contributing to a strong and harmonious Canada. Our country has grown and prospered largely due to the fact that it made welcome men and women from all parts of the world. They joined together in a common cause -- to make Canada their home -- and it is their skills, hard work and vitality which have created a flourishing and vibrant country.*

*Please accept my best wishes for a most enjoyable event. May you have every success in meeting the challenges of the future.*

*OTTAWA*
*1999*



படிப்பகம்

www.padippakam.com





The Premier
of Ontario
Legislative Building
Queen's Park
Toronto, Ontario
M7A 1A1

Le Premier ministre
de l'Ontario
Hôtel du gouvernement
Queen's Park
Toronto (Ontario)
M7A 1A1

Ontario

*Greetings from the Premier*

# KALATHEEPAM99

## VELANAI MADYA MAHA VIDYALAYAM
## Old Students' Association - Canada

On behalf of the Government of Ontario, I am pleased to extend greetings to everybody attending Kalatheepam99.

This celebration of music and culture is an ideal way to reflect on your history and on your contribution to our province. The quality of life we enjoy in Ontario comes from those who make a positive difference in their communities. Your organization's dedication to providing social and cultural opportunities for former students and their families is an opportunity to share in the rich blessings of tradition and heritage.

Please accept my best wishes for an enjoyable event.

**The Honourable Michael D. Harris**
**Premier of Ontario**

October 9, 1999




படிப்பகம்

www.padippakam.com



TORONTO

# Mel Lastman



**Mayor**
City Hall, 2nd Floor
100 Queen Street West
Toronto, Ontario M5H 2N2

**Tel:** (416) 395-6464
**Fax:** (416) 395-6440
mayor_lastman@city.toronto.on.ca

A Message from Mayor Mel Lastman

I am delighted to send greetings on behalf of Toronto City Council and the more than 2.3 million people of our great City, to everyone attending the Kalatheepam99.

As the most culturally diverse City in the world, Toronto is home to people from 169 lands speaking more than 100 languages. Throughout Toronto's history our people have learned from each other by sharing their rich and varied traditions and heritage and celebrating their differences. This desire from the people of Toronto to share their cultural legacies, contributes to the growth and prosperity of this truly unique and vibrant City.

Congratulations to the Velanai Madya Maha Vidyalayam Old Students' Association - Canada for organizing this event. To all those attending, please accept our best wishes for a most enjoyable day.

Cordially,

Mel Lastman

Mel Lastman
Mayor

October 9, 1999



படிப்பகம்

www.padippakam.com



**ஒரே பிளாசாவில் எஸ்பியின் மூன்று ஸ்தாபனங்கள்**

SP

# IMPORTERS

உங்களுக்குத் தேவையான

## காரியாலய, வீட்டுத் தளபாடங்களை

**நாகரீக வடிவங்களில் திறமையாக செய்து பெற்றுக் கொள்வதற்கும்**
**மொன்றியல், ஒட்டாவா இடங்களிற்கான**
**வாகன ஒழுங்குகளும் செய்து தரப்படும்.**

- *Sofa*
- *Bedroom Set*
- *Dining Set*
- *Coffee Tables*
- *Computer Desks*
- *Office Furniture*

**Tel: (416) 266-3077**



**2861 Lawrence Ave. East**



**(Lawrence & Brimley) Scarborough**



**Tel: (416) 266-3077**



படிப்பகம்

www.padippakam.com



# போஷகரின் வாழ்த்துச் செய்தி...



வேலணை மத்தியமகா வித்தியாலய (கனடா கிளை) பழைய மாணவர் சங்கத்தால் அறிவுச்சுடராய் ஒளிவீசும் கலாதீபம்; அகில உலகம் எங்கும் அறிவுக்களஞ்சியமாகப் பிரகாசிக்க எனது மனம் கனிந்த நல்வாழ்த்துக்கள்.

வேலணை மத்திய மகாவித்தியாலயம், சப்ததீவுகளையும் யாழ்ப்பாணப் பகுதியின் பல ஊர்களையும், கல்விப்பணியால் ஒன்றுசேர்த்த கலைக்கோயில். நாம் உலகின் எந்த நாட்டில் வாழ்ந்தாலும், எம்மை ஒருதாயின் பிள்ளைகளாக அன்புணர்வுடன் சேர்ந்த பாசப்பிணைப்பைத் தருவது நாம் பயின்ற கல்லூரி.

அறிவுக்கண்ணைத் திறந்து, அகில உலகமெல்லாம் பல்கலை வல்லவர் களாக, தனது மாணவ மணிகளைத் திகழச்செய்து, மகிழ்ந்து நிற்பவளும் அவளே!ஆகவே நாம் எல்லோரும் ஒன்றுசேர்ந்து, பிரிவினை இல்லாப்பிணைப் புடன் நேசஉணர்வுடன் எமதுகல்லூரியின் எழில் வளர்ச்சிக்கு கலாதீபம் மூலம் அறிவுச்சுடர் பரப்பி ஆனந்தம் கொள்வோமாக. எங்கள் கலைக்கோயிலின் வளர்ச்சியில் அல்லும் பகலும் அயராது உழைக்கும் உலகளாகவிய பழைய மாணவர் சங்கங்களின் பணியும் மகத்துவமானது.

சித்த வைத்தியகலாநிதி, சைவப்புலவர்

**வேலணையூர் கதிரவேலு சிற்றம்பலம்**



படிப்பகம்

www.padippakam.com




**No Body Can't Beat Our Selection & Prices**

# ASIAN TEXTILE

**& GIFT SHOP LTD.**

அனைத்து உடைகளும் 1999ம் ஆண்டிற்கான புதிய நவீன டிசைன்களில்

## 1999 இற்கான எமது புதிய தெரிவுகள்

**பூஜா சூட், சிம்ரான் சூட், V.I.P. சூட், தேவயானி சூட், விஜெய் சூட், சூர்யா சூட்**

## அணிந்து மகிழ விரைந்து வாரீர்! வாரீர்!

கூறைச் சேலைகள்
டிசைனர் பனாறஸ் சேலைகள்
கோல்ட் & சில்வர் சேலைகள்
மைசூர் சில்க் சாறிகள்
அபூர்வா சேலைகள்
கௌரி, காயத்திரி சேலைகள்
அபூர்வா றங்கோலி சேலைகள்
கோலம் சேலைகள்
டெல்லி குயின்சேலைகள்
ஜப்பான் சில்க் சேலைகள்
நூல் சேலைகள்
V.I.P சேலைகள்
குப்தா சேலைகள்
I Love India சேலைகள்
காதலா? காதலா? சேலைகள்
U.S.A. Shirts & Pants
Suit 1-20 Size



T. Shirts (Men)
Pants & Shirts(men)U.S.A
Pants & Shirts(boys)U.S.A
பட்டு வேட்டி சேட்
குருதா சூட்
சாரம் (கிப்ஸ் & பற்றிக்)
House Coat
Maternity Dress
Battik Gown for Ladies
Pants Blouses
Sarees & Blouses
Skirt & Blouses
Frock & Blouses
U.S.A. Party Frocks
Fancy Items

இவை மட்டுமா? உங்கள் சமையலறைப் பாத்திரங்கள், பூச்சாடிகள் பாதணிகள், சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருட்கள் அன்பளிப்புப் பொருட்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் வாங்குவீர்!

**3601 Lawrence Ave. East**
**#23, Scarborough ON**

**TEL: (416) 438-6568**
**(416) 438-5549**




படிப்பகம்

www.padippakam.com



# தலைவரிடமிருந்து...



எமது சங்கத்தின் கலை கலாச்சாரப் பிரிவினரால் நடாத்தப்படும் கலை விழாவான கலாதீபம்-99 இற்காக வெளியிடப்படும் இம்மலருக்கு செய்தி வழங்குவதில் பெருமையும் பெருமகிழ்ச்சியும் அடைகின்றேன்.

வேலணை மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் கனடாவில் 1995ஆம் ஆண்டு ஆவணி மாதம் 2ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு கடந்த நான்கு வருடங்களாக எமது பாடசாலைக்கும் தாயகத்தில் இன்னலுறும் எமது உடன்பிறப்புக்களுக்கும் இயன்றவரை சிறப்பாக சேவையாற்றி வருவதனை யாவரும் அறிவீர்கள். இந்த வகையில் எங்கள் சங்கம் அடைந்துள்ள வளர்ச்சியைக் கவனத்தில் கொள்ளும் இடத்து கடந்த காலங்களில் ஒவ்வொரு நிர்வாக சபையினரும் தங்கள் கடமைகளை மிகவும் கண்ணியமாகவும் கட்டுப்பாட்டுடனும் பொறுப்புணர்வுடனும் நிறைவேற்றியிருக்கின்றார்கள் என்பது வெளிப்படை. அன்று எமக்கு அறிவையும் ஒழுக்கத்தையும் ஒருங்கே ஊட்டி வளர்த்து ஆற்றலில் சிறந்தோர்கள் ஆக்கிய எமது கல்லூரி அன்னையின் மகிமையே இதற்குக் காரணம் என்றுகூறினால் மிகையன்று. சங்கத்தின் வளர்ச்சிக்காக தன்னலமற்ற சேவைகள் புரிந்த முன்னாள் தலைவர்கள், நிர்வாகசபை உறுப்பினர்கள் அனைவரையும் இவ்வரிய சந்தர்ப்பத்தில் நன்றியுணர்வுடன் பாராட்டுவதோடு அடுத்துவரும் நிர்வாக சபையினரும் இச்சீரியபணிகள் தொடரும்வண்ணம் செயலாற்றுவார்கள் என்று நம்புகின்றேன். அதுவே எனது அவாவும் ஆகும்.

மேலும் தீவகமும் அதன் தலைசிறந்த அறிவாலயமான வேலணை மத்திய மகாவித்தியாலயமும் இன்று எதிர்கொள்ளும் சவால்களில் வெற்றியீட்டுவதற்கு எமதுசங்கம் தன்னாலான அனைத்து உதவிகளையும் வழங்க வேண்டுமெனவும் அதற்கான முயற்சிகளில் அனைத்துப் பழைய மாணவர்களும் ஒற்றுமையுடன் ஒரு குடையின்கீழ் செயலாற்ற முன்வர வேண்டுமெனவும் அன்புரிமையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

'வாழிய வேலணை மத்திய மகா வித்தியாலயம்'

**சி. இளஞ்செழியன்**

B. Sc (Jaf), B. Eng (C)

பழைய மாணவன் (1975-1982)



படிப்பகம்

www.padippakam.com



# செயலாளரிடமிருந்து......



வேலணை மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம்-கனடா கடந்தநான்கு ஆண்டுகளாக கல்லூரி நிர்வாகத்தினதும் வேலணையில் இயங்கும் தாய்ச்சங்கத்தின் ஆதரவுடனும், இங்குள்ளமக்களின் நன்மதிப்புடனும் நமது கல்லூரிக்கும் தாய்நாட்டில் இன்னலுறும் மக்களுக்கும் பல நல்ல சேவைகளை ஆற்றிவருகின்றது என்பதனை இப்பொன்னான நன்னாளில் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த ஆண்டுகளைவிட இவ்வாண்டு பலமுக்கிய நிகழ்ச்சிகளை செய்து முடித்தது மல்லாமல் சங்கத்தின் நிதி இருப்பையும் உயர்த்தி உள்ளோம். இதற்குக் காரணமான நிர்வாகசபை உறுப்பினர்கள், எமது பழைய மாணவர்கள் மற்றும் முன்னாள் ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் பாராட்டுவதோடு நன்றி கூறவும் கடமைப்பட்டுள்ளேன்.

## எமது செயற்பாடுகள்

**1. போஷாக்கு உணவுத்திட்டத்திற்காக...... ($3500.00)**

இடப்பெயர்வினாலும், நெருப்புக்காய்ச்சல், மலேரியா போன்ற நோய்களினாலும் பாதிக்கப்பட்டு உற்சாக மிழந்து கல்விகற்கக்கூடிய வசதியற்றிருக்கும் மாணவர்களுக்குப் போஷாக்குணவு வழங்குவதற்கு நிதியுதவி செய்யும்படி அதிபர் திரு.கு.கணேசலிங்கம் அவர்கள் விடுத்தவேண்டுகோளுக்கிணங்க முதற்கட்ட நிதியுதவியான $1175.00 Sept.02,98இலும் அடுத்த கட்டமாக $1200.00 Jan.12.99இலும் மீண்டும் May 22.99இல் $1125.00அனுப்பிவைத்ததுடன், தொடர்ந்தும் இத்திட்டத்தை நடை முறைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.

**2. திரு. நா. ஆனந்தராஜா நினைவு நிதிக்காக..... ($860.00)**

எமது கல்லூரியின் இரவுக்காவலாளியாகவிருந்து கடமைநேரத்தில் சுட்டுக்கொல்லப் பட்ட திரு.நா. ஆனந்தராசா அவர்களின் வயோதிபத் தாய்தந்தையர்க்கு நிதியுதவியளிக் கும்படி அதிபர் திரு.கு.கணேசலிங்கம் அவர்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்று $860.00ஐ அனுப்பிவைத்துள்ளோம். (Feb. 26, 98)

**3. அதிபர் தம்பு ஞாபகார்த்த புலமைப்பரிசில் நிதிக்காக.... ($1000.00)**

எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளையினரால் நடாத்தப்படும் அதிபர் தம்பு ஞாபகார்ந்தநிதியத்திற்கு உதவியளிக்கும்படி கொழும்புக்கிளைத்தலைவரும் ஞாபகார்த்த நிதியத்தின் ஸ்தாபகர்களில் ஒருவருமான திரு.இ.சுந்தரமூர்த்தி அவர்களின் வேண்டுகோளை ஏற்று$1000.00களை அனுப்பி வைத்துள்ளோம். (Sept. 28, 98)

**4. வன்னியில் இன்னலுறும் மக்களுக்காக..... ($2100.00)**

வன்னியில் உணவு, மருந்துத்தடையால் பட்டினிச்சாவை எதிர்நோக்கி இன்னலுற்றிருக்கும் எமதுஉடன் பிறப்புக்களுக்காக 'சந்திப்போமோ' திரைப்படக்காட்சி மூலம் $2100.00களைத் திரட்டி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினூடாக அனுப்பி வைத்துள்ளோம். (Oct. 24, 98).

**5. சங்கத்தின் தொடர்வலைச் செய்தியகம்...**

உலகில் ஆங்காங்கே பரவியிருக்கும் எமது கல்லூரியின் பழைய மாணவர்களை ஒன்றுசேர்க்கும் நோக்கிலும் மற்றைய நாடுகளிலுள்ள பழைய மாணவர் சங்கங்களுடன் இலகுவாகத் தொடர்புகொள்ள வசதியாகவும் எமது சங்கத்திற்கு ஓர்Home Pageஐ உருவாக்கியுள்ளோம்.
**Website Address: http:// www.vmmvosa.on.ca**

## எமது கல்லூரியின் இன்றைய நிலை

கடந்த வருடம் ஆவணிமாதம் 18ஆம் நாள் எமது பாடசாலை தனது சொந்தக் கட்டிடங்களில் இயங்க ஆரம்பித்துள்ளது. ஆண்கள், பெண்கள் விடுதிகளில் கடற்படையினர் முகாமிட்டுள்ள இக்கட்டான சூழ்நிலையில் கடந்தஒருவருடமாக பாடசாலை இயங்கிவருகிறது. கடந்தவருடத்தைவிட இவ்வருடம் மாணவர்களின் வரவு அதிகரித்துள்ளதுடன் தற்போது ஏறத்தாழ 450 மாணவர்கள் கல்வி கற்பதோடு சுமார் முப்பதிற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றார்கள். 02-09-98முதல் கல்விபயிலும் மாணவர்களுக்கு எமதுசங்கத்தின் சார்பில் மதிய உணவுவழங்கி வருகின்றோம். இங்குவாழும் எமதுபழையமாணவர்கள் கல்லூரியின் வளர்ச்சிக்கு அளிக்கும் உதவிகள் எமதுமாணவத் தளிர்களின் வளர்ச்சிக்கும் கல்லூரியின் விருத்திக்கும் வழிவகுக்கும் என்பதை குறிப்பிட்டே ஆகவேண்டும். எதிர்காலத்தில் உங்கள் உதவிகளும் ஒத்துழைப்பும் பெருக வேண்டுகின்றேன்.

ஒன்பது ஆண்டுகளின் பின்னர் கடந்தபங்குனி மாதம் இல்ல விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றமை எமக்கு மகிழ்ச்சிதரும் விடயமாகும்.



படிப்பகம்

www.padippakam.com



## வருடாந்த ஒன்றுகூடல் 99'

இவ்வருடம் ஆடிமாதம் 24ம் திகதி ரொறன்ரோவில் உள்ள சணிபுறூக் பூங்காவில் சங்கத்தின் நான்காவது வருடாந்த ஒன்றுகூடலையும் விளையாட்டுப் போட்டிகளையும் மிகச் சிறப்பாக நடாத்ததியுள்ளோம்.

## 'கலாதீபம்-99'

எமது சங்கத்தின் வரலாற்றில் மிகச்சிறந்த நிகழ்வாக 'கலாதீபம்-99' கலைவிழா அமைகின்றது. இது எம் கன்னி முயற்சியானாலும் புலம்பெயர்ந்து வாழும் இந்த மண்ணில் 'கலாதீபம்-99' பொன்னெழுத்தால் பொறிக்கப் படுகிறது. இந்த விழாவிற்காக எமது முன்னாள் அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், அவர்களது பிள் ளைகள், மற்றும் நலன் விரும்பிகள் படைத்த பலஆக்கங்களுடன் சங்கத்தின்செயற்பாடுகள், கல்லூரியின் இன் றைய நிலைஎன்பவற்றை உள்ளடக்கி 'கலாதீபம்' என்னும் எமது சிறப்பு மலரை வெளியிடுகின்றோம். இம் மலர் இங்குள்ள பழைய மாணவர்களுக்கும் மற்றும் வெளிநாடுகளில் வாழும் பழைய மாணவர்களுக்கும் மேலும் உற்சாகத்தைக் கொடுத்துக் கல்லூரி அன்னையின் வளர்ச்சிக்காகத் தொடர்ந்தும் அவர்கள் ஈடுபடுவ தற்கு உந்துசக்தியாக அமையும் என நம்புகின்றோம்.

## சங்கத்தின் எதிர்காலத் திட்டங்கள்

எமதுசங்கம் மேலும் சிலநல்லதிட்டங்களை எதிர்காலத்தில் நடாத்த எண்ணியுள்ளது. இத் திட்டங்களை அடுத்து வரும் நிர்வாக சபையினரும் நடைமுறைப் படுத்துவார்களென நம்புகின்றோம். அத்திட்டங்களாவன.

1) எமது கல்லூரியில் தமிழ், கணிதம், பொது அறிவுப் போட்டிகளை நடாத்தி வெற்றிபெறும் மாணவர் களுக்கு பரிசில்கள் வழங்குவதுடன் வெற்றிபெற்றவர்களது ஆக்கங்களை அடுத்துவரும் கலாதீபம் இதழ் களில் பிரசுரித்து மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஊக்கமளித்தல்.

2) சங்கத்தின் பெயரில் ஒரு நீண்டகால நிரந்தர வைப்புத் திட்டத்தை உருவாக்கி அதில் வரும் வட்டியை பாடசாலை அபிவிருத்தித் திட்டத்திற்குப் பயன்படுத்தல்.

3) மாணவர்களுக்கு போஷாக்கு உணவு வழங்கும் திட்டத்தை தொடர்ந்து நடாத்துதல்.

4) பாடசாலைக்கு வேண்டிய நவீன வசதிகளையும் வளங்களையும் வழங்குவதோடு கல்லூரியின் நூல் நிலையத்தினைப் புனரமைப்பதற்கு வேண்டிய நிதி உதவியையும் வழங்குதல்.

5) வட அமெரிக்காவிலுள்ள அனைத்துப் பழைய மாணவர்களையும் எமது சங்கத்தில் அங்கத் தவர்களாக இணைப்பதற்கு ஆவன செய்தல்.

## அன்பான வேண்டுகோள்

பழைய மாணவர்களாகிய நாம் ஒற்றுமையுடனும் பொறுப்புனர்வுடனும் ஒன்றுசேர்ந்து எமது சங்கத்தைக் கட்டிக்காக்கும் அதேவேளையில் மேலும் சளைக்காமல் எமது கல்லூரிக்கும் எமது உடன் பிறப்புக்களுக்கும் உதவ வேண்டும். இதை எமது முக்கிய கடமைகளில் ஒன்றென நினைத்து செயற்படுமாறும் சங்கத்தின் எதிர் வரும் நிகழ்ச்சிகளில் பழையமாணவர்கள் அனைவரையும் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**எண்ணிய முடிதல் வேண்டும்.**
**நல்லனவே எண்ணல் வேண்டும்.**
**திண்ணிய நெஞ்சம் வேண்டும்.**
**தெளிந்த நல்லறிவு வேண்டும்.**

**க. பாஸ்கரன்**
கௌரவ செயலாளர்



படிப்பகம்

www.padippakam.com



# பொருளாளரின் சிந்தனையிலிருந்து...



மனிதர்களிடையே மதிப்பிற்குரியவர்கள் மாதா, பிதா, குரு, தெய்வம் ஆகியோராவர். மாதா, பிதா வாழுமிடம் இல்லம், தெய்வத்தினிடம் ஆலயம். குருவின் இடம்கல்விக்கூடம். இல்லத்தையும், ஆலயத்தையும் எவ்வளவுதூரம் நினைவு கூருகின்றோமோ அவ்வாறே நாம் கல்விகற்ற கல்விக்கூடமும் நினைவுகூரத்தக்கது.

நம் கல்விக்கூடமாம் வேலணை மத்திய மகா வித்தியாலயம் இதுவரை காலமும் பல்துறை வல்லுனர்களை உருவாக்கி வெற்றிப்பெருமிதத்தில் மிகுந்திருந்தவேளை இன்றுஅன்னியர் ஆக்கிரமிப்பால் கலையிழந்து, பொலி விழந்து கண்ணீர் வடித்திருக்கும் இவ்வேளையில் கலைக்கூடத்தால் பயன டைந்த நாம் வெறுமனே பார்த்துக்கொண்டிருக்காது எம் பங்களிப்பைக் கட் டாயமாகச் செய்யவேண்டிய காலகட்டமிது.

வேலணை மத்திய மகா வித்தியாலயத்தின் நான்காம் ஆண்டு ஒன்று கூடலை வெற்றிகரமாகச்செய்து முடித்த நாம் இன்று 'கலாதீபம் 99' என்ற கலைநிகழ்வு மூலம் எம்மவரின் கலைத்திறனையும் வெளிக்கொணர்ந்து அதன் மூலம் எமது கூடிய பங்களிப்பை எம் கல்லூரிக்கு வழங்க முன்வந் துள்ளோம்.

'ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு' யாவரும் அறிந்த உண்மை. கல்லூரி மேல் பற்றுக்கொண்ட அனைவரும் ஒன்றுபட்டு வருங்காலத் தலைவர்களா கிய இன்றைய மாணவர்களுக்கு எமதுசங்கம் வழங்கும் சத்துணவுத் திட் டத்தை மேலும் உயர்வடையச் செய்யவும், மற்றும் கல்லூரியின் தேவைகளை எம்மால் முடிந்தவரை நிறைவேற்ற ஒவ்வொருவரும் முன்வரவேண்டும் என்று கோரி எமது முயற்சிகள் வெற்றிபெற்று எதிர்காலத்தில் மிகச் சிறப்புடன் எமது கல்லூரிக்கு உதவ வேண்டுமென உரிமையுடன் வேண்டுகின்றேன்.

**பொன் பஞ்சலிங்கம்**

பொருளாளர்



படிப்பகம்

www.padippakam.com



# பிரதம விருந்தினரின் வாழ்த்துச்செய்தி...

**Dr. சு. சிவகணேசன்**
**B. SC (SL), M. SC (U. K), Ph.D (U.S.A)**
**Professor, University of Cincinnati, U.S.A**

எமது கல்லூரியின் பொன் விழாவையொட்டி சங்கம் வெளியிடும் இச்சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தி அனுப்பவும் சங்கக்கலைவிழாவில் பங்குபற்றவும் வாய்ப்புத்தந்தமைக்கு சங்கத்திற்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

இளமைக்கால வளர்ச்சியில் கல்லூரியில் பெற்ற, அனுபவம் எமது வாழ்க்கையில் நாம் எத்தகையமனிதர்களாக வாழ்வோம் என்பதை நிர்ணயிக்கிறது. வேலணை ம.ம.வி கல்லூரியில் படித்த பழைய மாணவராகிய நாம் பெரும் பாக்கியசாலிகள். நான் அங்குபெற்ற படிப்பறிவும் பண்புமுறையும் எனதுவாழ்க்கையின் முக்கிய வழிகாட்டியாக இருந்து வருகின்றன. ஏனைய சகபழைய மாணவர்களும் இவ்வாறே தமதுகல்லூரி அநுபவம்பற்றி உணர்வார்களென்பதில் சந்தேகமெதுவுமில்லை. இவ்வாறாக மிகவும் போற்றி மெச்சத்தக்க கல்வி கலாச்சார அறிவை எமக்கூட்டி சுயநலமற்ற சேவைசெய்த எமதுபழைய ஆசிரியர்களின் சிறப்பும் மேன்மையை சொற்களால் வர்ணிக்க முடியாது.

எமது கல்லூரி வாழ்க்கை அநுபவத்தை மேற்கத்தைய நாடுகளில் வாழும் எமது பிள்ளைகளின் கல்லூரி அனுபவத்துடன் ஒப்பிட்டால் மிகவும் பரிதாபமாகவும் கவலையாகவும் உள்ளது. பொதுவாக உலகெங்குமே பாடசாலைகளில் கலாசாரம் மனிதப்பண்பு குறைந்துகொண்டே போவதாகக் கூறலாம். ஆனால் குறிப்பாக எமது பிள்ளைகள் அன்னிய நாட்டில் கலாச்சாரம், இனம், சமயம் போன்றபல வகைகளில் மிகச் சிறுபான்மையராக இருக்கிறார்கள். இதனால், நாம் யார் இங்கு என்ன செய்கிறோம் என்ற விரக்தியும் குளப்பமும் அவர்களுக்கு ஏற்படுகிறது. அது அவ்வாறிருக்கப் பெற்றோரும் யந்திரம் போல் வேலை செய்வதால், பிள்ளைகளுக்கு ஆதரவும் ஊக்கமளிக்கப் போதிய வாய்ப்புக் கிடைக்காமலிருக்கிறது. இதனால், பிள்ளைகளுக்குப் படிப்படியாக மனவிரக்தியும், தம்மைப்பற்றியும் தமது சமுதாயம் பற்றியும் ஒரு கீழ்மையான உணர்வும் ஏற்படுகிறது. ஆராச்சியாளர்களின் கருத்துப்படி, ஒருசிறுபான்மையினரின் வளற்சிக்கு, தமக்கென்றொரு சொந்தமான பெருமைப்படக்கூடிய மொழி கலாச்சாரமிருப்பது முக்கியமாகும். இதனை மனத்திற்கொண்டு, தமிழினத்தின் மொழி கலாச்சாரம் பற்றிய பெருமைமிக்க வரலாற்றுச்சிறப்பைப் பெற்றோர் பிள்ளைகளுக்கு அடிக்கடி கூறுவதன் மூலம் அவர்களுக்கு உற்சாகத்தையும் தன்னம்பிக்கையையும் ஏற்படுத்தலாம். அத்தோடு, மேற்கத்தைய நாடுகளில் அளவில்லா மதிப்புப்பெற்ற கணித வல்லுனர் ராமானுயன் போன்ற தமிழர்களின் பெருமையையும் கூறலாம்.

இதன் தொடர்பாக, பெற்றோராகிய நாங்கள் எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் முயற்சிகளில் பங்கெடுத்து ஆதரவு செய்வதால் அது எமது கலாச்சாரத்தில் நாம் வைத்துள்ள நம்பிக்கையை பிள்ளைகளுக்கு செயலளவில் எடுத்துக்காட்டுவதாக அமைவதுடன்,அதுகல்லூரியின் மாணவர்கட்கு மட்டுமன்றி எமது பிள்ளைகளுக்கும் பயனுள்ளதாக இருக்கும்.

எமது கல்லூரி அண்மையில் பல இன்னல்கட்குட்பட்டு, தற்போது மீண்டும் தனது உரிய இடத்தில் பல இடையூறுகள் மத்தியில் இயங்கி வருகிறது. இந்நிலையில், கல்லூரியின் அன்றாடத் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு எமது கனடா சங்கம் தனது உறுப்பினர்களின் ஆதரவுடன் ஆற்றிவரும் பல சேவைகள் மிகவும் போற்றத்தக்கவை. எமது கல்லூரியின் கல்வி கலாச்சார தேவைகளைப் பூர்த்திசெய்து அதனை இலங்கையில் உள்ள சிறப்பான கல்லூரிகளுள் ஒன்றாக முன்னேற்றுவது பழைய மாணவர்களாகிய எங்களது கடமையாகும்.

கனடா பழைய மாணவர் சங்கம்தமது சென்றவருட ஒன்றுகூடல் வெளியீட்டின் மூலம் உலகத்தின் பல பகுதிகளிலும் பரந்துள்ள எமது கல்லூரியின் முன்னைய ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் எண்ணக் கருத்துக்களை வெளியிட்டமை மிகவும் பாராட்டுக்குரியது. கல்லூரிக்கு அவர்கள் செய்யும் சேவைகள் மேலும் மேலும் பெருகவும், சங்கத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் ஆதரவும் பன்மடங்கு வளரவும், 'கலாதீபம்' விழா மிகச்சிறப்பாக நடைபெறவும், எனது அன்பு நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.



படிப்பகம்

www.padippakam.com


# FAMILY DENTIST

குடும்ப பல் வைத்தியர்

## DR. VIJAYAKALA SIVATHEVAN

டாக்டர் விஜயகலா சிவதேவன்

☆ சகல விதமான பல்வைத்திய சேவைகளும்...

☆ All Insurance Accepted







வாரத்தில் ஏழு நாட்களும் திறந்திருக்கும்

- Cosmetic Dentistry (பற்களை அழகுபடுத்துதல்)
- Gum Treatment (முரசு சிகிச்சை)
- Surgery (வாய் சத்திரசிகிச்சை)
- Crown and Bridge (நிரந்தரமாகப் பல் கட்டுதல்)
- Root Canal (வேர் அடைத்தல்)
- Dentures (பல் கட்டுதல்)
- Othodontic Appliance (கிளிப் போடுதல்)

**1200 MARKHAM ROAD, SUITE 119**
**(Markham & Ellesmere)**
**SCARBOROUGH, ONTARIO**

**Tel: (416) 491-7987**
**Cell: (416) 892-0987**
**Fax: (416) 289-7948**







படிப்பகம்

www.padippakam.com



## அதிபரின்

# வாழ்த்துச் செய்தி



எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்கங்கள் உலகின் பல்வேறு நாடுகளிலும் இயங்கி பாடசாலையின் முன்னேற்றத்திற்கென ஆக்கபூர்வமாக செயற்பட்டுவருகின்றன. கனடா, பிரான்ஸ், சிட்னி, மெல்போர்ன் ஆகிய இடங்களில் செயற்படும் பழைய மாணவர் சங்கச் செயற்பாடுகள் பெரிதும் பாராட்டுதற்குரியவை.

இன்றைய மாணவர்கட்கு புலமைப்பரிசில் வழங்குதல் நூலக விருத்திக்கு உதவுதல், மொழித்திறன் விருத்திக்கான மேலதிக கற்பித் தல் செயற்பாடுகள், மதியபோசனம் அளித்தல் எனஇவை பரந்துபட்டு நடைபெறுகின்றன.

கனடாவில் உள்ள எமது பழைய மாணவர் சங்கம் எமது பாடசாலை மாணவர்கட்கு கடந்த ஒரு வருட காலமாக இலவசமாக சத்துணவு வழங்கும் திட்டத்தைப் பொறுப்பேற்று மிகச் சிறப்பாக செயற்படுத்தி வருகின்றனர். இன்றைய மாணவர்களின் பொருளா-தாரநிலை போர்க்காலச்சூழ்நிலையினால் பெரிதும்பாதிப்புற்றுள்ள இன் றைய காலகட்டத்தில் சத்துணவு வழங்கும் திட்டம் பெரும்வரப்பிரசா தம் ஆகும். இதற்கான நிதி முழுமையாக் கனடா பழைய மாணவர் சங்கமே வழங்குகின்றது. பாடசாலைச் சமூகம் இதனைப் பெரிதும் பாராட்டுவதுடன் உற்சாகத்துடன் பாடசாலையை முன்னேற்ற உதவும் ஊக்கியாகவும் கருதுகின்றது.


கனடா பழைய மாணவர் சங்க வருடாந்த ஒன்றுகூடல் வைபவமும் கலை நிகழ்ச்சிகளும், 'கலாதீபம்' எனும் சஞ்சிகை வெளியீடும் மிகச்சிறப்பாக நடைபெற எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரும்மகிழ்ச்சி அடைகின்றோம்.

'வாழ்க கனடா பழைய மாணவர் சங்கம், வளர்க அதன் பணிகள்'


**திரு. கே. கணேசலிங்கம்**
B.A, Dip-in Ed, M.A



படிப்பகம்



# SP IMPORTERS



# FRESH FISH MARKET

## உப்புக்கடல் மீன் வகைகளை இறக்குமதி செய்து விற்பனை செய்வதில் முன்னோடிகள்

★ பத்தியத்துக்குத் தேவையான பால்சுறா, விறாத்துக்குஞ்சு விற்பனைக்கு உண்டு.

★ கூழுக்குத் தேவையான பொருட்கள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

★ மொத்தமாக மீன்கள் வாங்குவதற்கு நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

| | | | | |
|---|---|---|---|---|
| ※ ஒட்டி | ※ ஒரா | ※ விளைமீன் | ※ உடன் நீலக்கால் நண்டு | ※ கெளுத்தி மீன் |
| ※ திருக்கை | ※ வாழைமீன் | ※ கயல் மீன் | ※ உடன் இறால் | ※ உயிர் நண்டு |
| ※ முரல் | ※ கருந்திரளி | ※ சூடை | ※ தலையில்லாத இறால் | ※ சீலா |

தரமான கடலுணவு, உடன் இறைச்சி வகைகளுக்கு

**2853 LAWRENCE AVE. EAST**

(Brimley & Lawrence) Scarborough ON

Tel: (416) 261-4737 Fax: (416) 261-5483

**இறைச்சி வகைகள்**

உடன் மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி
உடன் காட்டுப்பன்றி, மரை இறைச்சி
ஆட்டுக்கால், கோழிக்கால்
உடன் கோழி.......

## ஒரே பிளாசாவில் எஸ்பியின் மூன்று ஸ்தாபனங்கள்

TEL:
(416)
261-3881

24 HOUR
FAX:
SERVICE

(416)
261-5483


# SP IMPORTERS

# Fresh Vegetable & Grocery

★ உங்களுக்குத் தேவையான அனைத்து உணவுப் பொருட்களையும்

★ உடன் மரக்கறி வகைகளையும், மற்றும் வீடியோ, ஓடியோ நாடாக்களை வாடகைக்கும், விற்பனைக்கும் பெற்றுக்கொள்ளவும், அத்தோடு பிரதிமாற்றம் செய்துகொள்ளவும் நாடுங்கள்......





**2863 LAWRENCE AVE. EAST**

(Brimley & Lawrence) Scarborough ON

www.padippakam.com



# பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி



'எங்கள் வாழ்வும் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு' என்று கூவினான் புரட்சிக் கவிஞன் பாரதி தாசன். தமிழன் செல்லுமிடமெல்லாம் தமிழ் விளங்க வேண்டும். தமிழர் ஒன்றாதல் வேண்டும். எமதுகல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கனடாக் கிளையினர் ஒன்றுபட்டு விழாவொன்று எடுத்து 'கலாதீபம்' என்ற சஞ்சிகையை வெளியிடுகின்றனர். இதனால் எம் கல்லூரி அன்னை பெருமிதம் அடைகிறாள். கனடாக்கிளையினர் மதிய உணவுத்திட்டம் காலமறிந்து செய்யும் உதவி. இது ஞாலத்தின் மாணப்பரிதாகும். இவர்கள் தாமும் உயர்ந்து, தம்மைச் சார்ந்தவர்களையும் உயர்த்தி, வீரத்தமிழையும் விண்ணுற வளர்த்து, மீண்டும் விழாக்களெடுத்து வீறுடன் வாழ வாழ்த்துகிறேன்.

வாழ்க கனடா பழைய மாணவர் சங்கம்.
வளர்க அதன் நற்பணிகள்.

**பொன்னம்பலம் ஈசன்**, B.Sc



படிப்பகம்

www.padippakam.com




# மஞ்சுளா பஷன்

மறந்துவிடாதீர்கள் மலிவின் மறுபெயர்

இலங்கை, இந்தியா,
இந்தோனேசியா,
இங்கிலாந்து, சிங்கப்பூர்,
தாய்லாந்து, அமெரிக்கா
ஆகிய நாடுகளில் இருந்து
நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட சகல
வயதினருக்கும் உரிய
சகலவிதமான உடுப்பு
வகைகள்.

ஒரிஜினல் எவர் சில்வர்
பாத்திரங்கள், அலங்காரப்
பொருட்கள், அன்பளிப்புப்
பொருட்கள் அனைத்தையும்
மலிவு விலையிலும்,
மணமகனுக்குரிய சர்வாணி
சூட் வாடகைக்கு பெற்றுக்
கொள்ளவும்
நாடவேண்டிய இடம்...

*Texteles. Jewellery, Fancy, Utensils etc....*

## *Manchulaa Fashion*

**5635, Finch Ave East Unit #3**
**Scarborough - Ontario**
**M1B 5K9 Canada**

*Tel: (416) 297-9875* *Fax: (416) 297-7595*



## BUYING SELLING OR LEASING

**வீடுகள் வாங்க விற்க அல்லது**
**வாடகைக்குப் பெற்றிட**
**இதற்கான இலவச ஆலோசனைகள் பெற்றிட**

**குறைவான வட்டிவிகிதத்தில் அடமான**
**ஒழுங்குகள்செய்திட இன்றே**
**அழைக்கப்பட வேண்டியவர்...**



**NADA G. NADARAJAH B.V. Sc**
**SALES REPRESENTATIVE**
**AWARD WINNER**

## நடா G. நடராசா

HOMELIFE

**HOME LIFE METRO**
**Realty Inc.**
**REAL ESTATE BROKER**

**5200 Finch Ave. East**
**Suite 206 Scarborough**
**Ontario M1S 4Z4**

**Res: (416) 291-9036**
**Bus: (416) 293-5093**
**Fax: (416) 293-5237**




படிப்பகம்

www.padippakam.com



# தீவகம் மீண்டும் சிறப்புப்பெற___

**கா. பாலகிருஷ்ணன்**
உபதலைவர் வே.ம.ம.வி. பழைய மாணவர் சங்கம்-வேலணை
உதவித் திட்டமிடல் பணிப்பாளர்-யாழ்ப்பாணம்



ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் இயற்கைவளம், சமூக பொருளாதார கட்டுமானங்கள் ஆகியனவற்றின் பற்றாக்குறை காரணமாக தீவகம் மிகமிக பின்தங்கிய நிலையில் காணப்பட்டது. அதன்பின்னர் அந்நிலையில் இருந்து படிப்படியாக விடுபட்டு சமூக-பொருளாதார நிலையில் முன்னேறத்தொடங்கியது. ஐம்பதுகளில் ஆரம்பிக்கப்பட்ட இம் முன்னேற்றம் அறுபதுகளில் மிகவும் விரைவாக்கப்பட்டு எழுபதுகளில் எண்பதுகளில் பல-துறைகளில் அதாவது விவசாயம், கடற்தொழில், கல்வி, சுகாதாரம், சமூக சேவை ஆகியவற்றில் பெருமுன்னேற்றம் பெற்றுவிளங்கியது. இங்குபிறந்த வளர்ந்த, பலர்தம் நாட்டிலும், பிறநாடுகளிலும் சிறந்துவிளங்கிய விளங்குகின்ற காரணத்தினால் தீவகம் யாழ். குடாநாட்டில் தனித்துவம் சிறப்பும் கொண்ட ஒருபகுதியாக விளங்குகின்றது.

இத்தகைய வளர்ச்சிக்கான காரணிகளை ஆராய்கின்றபோது அதன்பிரதான காரணிகளில் ஒன்றாகத் தற்பொழுது சேர்.வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயம் என அழைக்கப்படுகின்ற வேலணை மத்திய மகா வித்தியாலயத்தின் சேவைவிளங்குகின்றது. நாற்பது ஆண்டுகளின் பிற்பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி ஐம்பதுகளில் தற்காலிக கொட்டகைகளில் இருந்து சகல வசதிகளும் கொண்ட நிரந்தரக் கட்டிடத்துக்கு மாற்றப்பட்டு இயங்கி வந்தது. அக்காலத்தில் சிரேஷ்ட பாடசாலை தராதரப் பரீட்சையில் நல்ல பெறுபேறுகளைப்பெற்றது. புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைகின்றவர்கள் இலவசமாகத் தங்கி கல்வி கற்கக்கூடிய விடுதி வசதியுடைய கல்லூரியாக இக்கல்லூரி இருந்ததினால் தீவகம் முழுவதிலும் இருந்து சிறந்தமாணவர்களை இங்குவந்து கல்வி கற்கக்கூடியதாக இருந்ததினால் இக்கல்லூரி தீவகம் முழுவதிலும் உள்ளமாணவர்கள் கல்வி கற்பதற்கு ஆர்வத்தினை ஏற்படுத்திக்கொடுத்தது. அதுஅங்குள்ளவர்கள் தமது சமூக பொருளாதார முன்னேற்றம் பற்றிச் சிந்திக்கவும் செயல்படவும் வழி வகுத்தது.

அறுபதுகளில் இக்கல்லூரி பலதுறைகளிலும் விரைவான வளர்ச்சிகண்டதினால் பலர் இக்கல்லூரியில் இருந்து பல்கலைக்கழகம் சென்றார்கள். வேறுபலர் இங்கு இடைநிலைக் கல்வியை கற்றுவிட்டு பல்கலைக்கழக புகுமுகபரீட்சையின் வேறுகல்லூரிகளின் மூலம் தேறி பல்கலைக்கழகம் சென்றார்கள். இன்னும் பலர், நாட்டின் பலபாகங்களுக்கும் சென்று தாம் கைக்கொண்ட தொழிலை விரைவான முன்னேற்றம் கண்டார்கள். இது தேச, சர்வதேசரீதியான சமூக பொருளாதார அமைப்புக்களை இப்பகுதி மக்கள் தெரிந்து அதன் பங்கு தாரர்களாக அவர்கள் மாறிக்கொள்ளவழிவகுத்தது. இதன் பயனாக எழுபது எண்பதுகளில் இக்கல்லூரி நன்முறையில் செயல்பட்டது போல இப்பகுதி மக்களும் சமூக பொருளாதார நிலையில் உயர்ந்து தமது பிரதேசத்திலும் பிற இடங்களிலும் சிறப்புடன் வாழலானார்கள்.

இந்நிலை தொண்ணூறுகளில் தொடர்ந்து நீடிக்கவில்லை. பெருந்தொகையான மக்கள் இடம்பெயர்ந்தவர்களாக அகதிகளாக தங்களின் இடங்களில் இருந்து வெளியேறினார்கள். அவர்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. சேதமாக்கப்பட்டன. இதேகதி கல்லூரிக்கும் ஏற்பட்டது. இடம்பெயர்ந்து வந்த மாணவர்கள் யாழ்ப்பாண நகரத்தில் பெரிய கல்லூரிகளில் சேர்ந்துகொள்ள வாய்ப்பு கிடைத்ததினால் அங்கு சேர்ந்தார்கள். இதனால் கல்லூரியை தற்காலிக இடத்தில் ஆரம்பிக்கவேண்டும் என்பதற்கான அழுத்தங்கள் இருக்கவில்லை. சிதறுண்டு போன தீவகமக்களை ஒன்றுசேர்க்கவும் அவர்களின் தனித்துவப் பண்பினைத் தொடர்ந்து பேணவும் வேண்டுமானால் இக்கல்லூரி தற்காலிகமாக யாழ்.நகரத்தில் இயங்குவது அவசியம் எனஉணர்ந்து பழைய மாணவர்கள் சங்கமும் பெரியோர்களும் இக்கல்லூரியினை இயங்க 1992இல் இயங்கவைத்தார்கள். அப்பொழுது கொழும்பு பழையமாணவர் சங்கமும் வெளிநாடுகள் சேர்ந்தவர்கள் ஒன்றுகூடி சங்கங்கள் மூலம் கல்லூரியின் தேவைகளை நிறைவு செய்யத்தாமாக முன்வந்து உதவினார்கள். இக்கட்டான சூழ்நிலை கல்லூரிசிறப்பாக இயங்கி இடம்பெயர்ந்த கல்லூரிகளுக்கு வழிகாட்டியாக எமது கல்லூரி அமைந்திருக்கின்றது எனப் பத்திரிகைகள் பாராட்டுமளவுக்கு உயர்ந்திருந்தது. எங்குசென்றாலும் எமது பிரதேசப்பற்றும் பண்பும் நின்றுநிலைக்கும் என்பதனையும் உறுதிசெய்தது.

இந்நிலைகூட 1995ஒக்டோபரில் ஏற்பட்ட வலிகாமம் இடப்பெயர்வினால் நீடிக்கமுடியவில்லை. இடம்பெயர்ந்து வடமராட்சி தென்மராட்சிக்கு சென்ற மக்கள் 1996 ஏப்ரலில் திரும்பிவரும்வரை இக்கல்லூரி இயங்கவில்லை. மக்கள் திரும்பிவருகின்றபோது தீவுப்பகுதிக்கும் சென்று மீளக்குடியமரக்கூடியதாக இருந்தது. ஆனால் பெரும்பாலான தீவக மக்கள் வலிகாமத்தில் தங்கிவிட்டார்கள். அவர்களை தீவகத்துக்கு செல்வதற்கு தூண்டுவதானால் அவர்களுக்கானஅடிப்படைவசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். இதில்பாடசாலைகளை இயங்க வைப்பதுமுக்கியமாக ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும். இய ங்க வைப்பது முக்கியமாக அப்பொழுது சிலபாடசலைகள் தீவகத்தில் ஆரம்பிக்கப்பட்டபோது அவை கூட்டாக இயங்கின. எமது கல்லூரி வேலணை மகாவித்தியாலயக் கட்டி டத்தில் பலபாடசாலைகளில் ஒன்றாக இயங்கியது. இது கல்லூரிக்கு களங்கத்தினை ஏற்படுத்தும் என்பதினால் கல்லூரி தனிமையாகவும் அதன் சொந்த கட்டிடத்தில் மீளவும் இயங்கவேண்டும் எனப் பழைய மாணவர் சங்கம், ஆசிரியர்கள் நலம்விரும்பிகள் ஆகியோர் தொடர்ந்துசம்பந் தப்பட்டவர்களுக்குள் அழுத்தம் கொடுத்ததன் காரணமாக 1997இல் வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் தனித்தும் இயங்கிப்பின்னர் 1998ஜுலையில் தனதுசொந்த இடத் திலும் இயங்கத் தொடங்கியது. தற்பொழுது கல்லூரியின் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டவையாகவே இருக்கின்றது.

சிதைந்து, சிதறிப்போன தீவகத்தினை மீண்டும் பழையநிலைக்கு கொண்டுவரவேண்டும்அதற்கான கல்வித் தேவையினை இக்கல்லூரி ஆற்றவேண்டும். அதற்கு இக் கல்லூரியின் தேவைகள் பூர்த்திசெய்து மீண்டும் தன் பொலிவுடன் மிளிரவேண்டும். அதனைச்செய்வதற்கு புலம்பெயர்ந்த பழையமாணவர்களும் இங்குள்ளவர்களும் காட்டுகின்ற ஆர்வத்தினை காணுகின்றபோது இலட்சியம் அடையப்பட்டுவிட்டதான உணர்வே தோன்றுகின்றது. அதற்கு கனடாவேலணை மத்தியமகாவித்தயிாலய பழைய மாணவர் சங்கம் முன்னின்று உழைப்பதனை பாராட்டுகின்றேன். அவர்களினால் வெளியிடப்படும் 'கலாதீபம்' ஆகிய இம்மலர் இவ்வுணர்வினை உலகெங்கும் பரந்து வாழ்கின்ற தீவகமக்கள் மத்தியில் தூண்டுவதாக அமையவேண்டும் என வாழ்த்துகின்றேன்.



படிப்பகம்

www.padippakam.com



# With The Best Complements of

## DR. COOMAR KIRUPA

பிரசவ வைத்தியர் மற்றும் மகளிர் நோய்ப்
பிரிவு சத்திர சிகிச்சை நிபுணர்
குமாரசாமி கிருபானந்தன்

**Dr. Coomar Kirupa**
F.R.C.S. (C) MRCOG (UK)
Obstetrician & Gynaecologist
**Scarborough General Hospital**

**Finch-Midland Medical Centre**
4190 Finch Avenue E., Suite 316
Scarborough Ontario M1S 4T7
**Tel & Fax: (416) 609-1199**

NORWICH UNION

# நோர்விச் யூனியன்

**One of leading insurance company in the world**
**More than 300 yrs experience in life insurance business**



Call:
**T.K. THEVARAJAH**
(நோர்விச் யூனியன் அதிசிறந்த விற்பனையாளர் விருதுபெற்றவர் முன்னாள் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன ஊழியர்)

**Tel: (905) 471-9061**
**Fax: (905) 471-2202**

**✻ நம்பிக்கை ✻ நாணயம் ✻ உத்தரவாதம்**

முதியோர்களுக்கு உகந்த முறையில் உங்களுக்கு விரும்பிய காப்புறுதி நிறுவனங்களில் காப்புறுதி செய்து கொடுக்கப்படும்.

### Take a few Minutes

| AGE | MALE | | FEMALE | |
|---|---|---|---|---|
| | Monthly | Annual | Monthly | Annual |
| 45 | $21.84 | $241.00 | $17.46 | $191.00 |
| 50 | 29.89 | 333.00 | 22.63 | 250.00 |
| 55 | 43.63 | 490.00 | 32.08 | 358.00 |
| 60 | 67.78 | 766.00 | 48.96 | 551.00 |
| 61 | 74.43 | 842.00 | 53.69 | 605.00 |
| 62 | 81.86 | 927.00 | 59.03 | 666.00 |
| 63 | 90.09 | 1021.00 | 64.98 | 734.00 |
| 64 | 99.28 | 1126.00 | 71.54 | 809.00 |
| 65 | 115.26 | 1263.00 | 80.03 | 906.00 |

10 Years Term for $100,00 Non Smoker Rate



படிப்பகம்

www.padippakam.com



# வேலணை ம.ம.வி. பழைய மாணவர் சங்கம் -வேலணை

# செயலாளரிடமிருந்து......



எமது கல்லூரியின் பழையமாணவர் சங்க கனடாக்கிளை வெளியிடும் 'கலாதீபம்-99' சஞ்சிகைக்கு தாயக மண்ணில் இருந்து வாழ்த்துச்செய்தி அனுப்புவதில் பெருமகிழ்ச்சியும் பேருவகையும் அடைகின்றோம்.

ஐம்பது ஆண்டுகால வரலாற்றைக்கொண்ட எமது கல்லூரி பல்வேறு தடையங்களைத் தாண்டியும், துன்பதுயரங்கள் இடம்பெயர்வுகளை சந்தித்தபோதும் காலத்துக்குக் காலம் பல்வேறு கல்விமான்களையும்அறிஞர்களையும் தீவகத்தினுடைய நற்பிரசைகளையும் உருவாக்கிய அந்த மகத்தான கல்விப்பணியில் மீண்டும் தலைநிமிர்ந்து நிற்பது எங்கள் எல்லோருக்கும் மகிழ்ச்சியானவிடயமாகும். இவ்வாறுஎங்கள் கல்லூரிமீண்டும் தனது சேவையைத் திறம்பட ஆற்றிட மிகவும் உறுதுணையாகவும், பக்கபலமாகவும் இருப்பவர்கள் பழையமாணவர்கள், உள்நாட்டில்வசிப்பவர்கள், கடல்கடந்து உலகெங்கும் பரவிக்கிடக்கும் பழையமாணவர்களின் பங்கு, அவர்களின் பணி மிகமிக பாராட்டக்கூடியதாகும். உலகெங்கும் பரவிவாழும் இக் கல்லூரியின் பழைய மாணவர்கள் தாங்கள் வாழும் நாடுகளில் ஒன்றுகூடிப் பழையமாணவர்கள் சங்கங்களை அமைத்து அதனூடாகத் தாயக மண்ணில் பல்வேறு துயரங்களுக்குள்ளும், அவலங்களுக்குள்ளும் இராணுவ ஆக்கிரமிப்புக்குள்ளும் அமிழ்ந்து கிடக்கும் தமது கல்லூரியை நினைத்து, தாயக மண்ணில் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கும் மாணவச் செல்வங்களையும், அவர்களின் எதிர்கால வாழ்வையும் நினைத்து அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டி அவர்களின் வாழ்வும்சிறக்க வழியமைத்துக் கொடுக்கின்றார்கள்.

இந்தவகையிலே கனடாவாழ் பழையமாணவர் சங்கத்தின் பணிமிகவும்வரவேற்கக்கூடியதும், பாராட்டப்பட வேண்டியதுமாகும். நீண்ட இடப்பெயர்வுகளுக்குப்பின் தீவக மக்கள் தமதுசொந்த மண்ணிற்குத் திரும்பிய போதும் எமது கல்லூரி தனித்து இயங்க முடியாதநிலை காணப்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் எமது இன்றைய அதிபர் கல்லூரி நிர்வாகத்தைப் பொறுப்பேற்று வேலணைசரஸ்வதி வித்தியாலயக்கட்டிடத்தில் தனித்து இயக்கி வளரச் செய்தார். தொடர்ந்து எமதுகல்லூரி சொந்தக்கட்டிடத்தில் இயங்க வேண்டும் என முயற்சி எடுத்து எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர் தனதுசொந்தக் கட்டிடத்தைப் பொறுப்பேற்று பாடசாலையை இயக்கி வருகின்றார். வீதிப்பகுதியிலும் அயலிலும் இன்னமும் படையினர் இருப்பதினால் முழுமையான சுதந்திரத்துடன் இயங்க முடியாமை காணப்படுகின்றது. படிப்படியாக இந்நிலைமை மாறிவழமை நிலைக்கு வரவேண்டும். இதற்கு நாம் யாவரும் முயற்சிக்க வேண்டும். தற்போது பாடசாலைப் பாவனைக்குப் பிரதான பாதைகள் திறந்து வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மாணவர்கள் நீண்ட இடம்பெயர்வுகளுக்கும் அகதிமுகாம் வாழ்க்கைக்கும் உட்பட்டு சீராகக் கல்வியைத் தொடரமுடியாதநிலை. உளரீதியாக மட்டுமன்றி உடல் ரீதியாகவும் பலவீனப்பட்டவர்கள் காணப்படுகின்றார்கள்.

இவ்வாறான நிலைமையில் இருந்து கல்வியைத்தொடரவும், பாடசாலையைக் கட்டி எழுப்பவும் தேவைப்படும் அவசர உதவிகள் எமது கல்லூரியின் அதிபர் உயர்திரு. கு. கணேசலிங்கம் அவர்களினால் கோரப்பட்ட போது பல்வேறு உதவிகளைக் கனடா பழைய மாணவர்சங்கத்தினர் வழங்கி எமது கல்லூரியின் வளர்ச்சிக்குச் சிறப்பாகத் தொண்டாற்றி வருகின்றமையை மிகவும் நன்றியுணர்வுடன் நினைவுகூறுகின்றோம். தங்களின் சேவை சிறப்புறப் பாராட்டுகின்றோம்.

குறிப்பாக,

1 இராணுவத்தினால் கடமைநேரத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட எமது கல்லூரி இரவுக் காவலாளி திரு. நா. ஆனந்தராசா அவர்களின் வயோதிபபெற்றோருக்கு நிதி உதவி வழங்கியமை.

2 இடம்பெயர்வினாலும், பல்வேறு நோய்களினாலும் பாதிக்கப்பட்டு போசாக்கற்று உற்சாகமிழந்து காணப்படும் எமதுபாடசாலை மாணவர்கட்கு போசாக்குணவு, மதிய உணவாக எமது பாடசாலையில் வழங்குவதற்கு நிதி உதவி புரிந்துவருகின்றனர். போசாக்குணவு வழங்கும் நடைமுறை தற்போது எமது கல்லூரியில் மட்டுமே நடைமுறையில் இருக்கின்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

3 வன்னியில் வாழும் எமது உடன்பிறப்புகளுக்கு உதவிசெய்தல்.

4 கொழும்பு கிளையினால் நடாத்தப்படும் அதிபர் தம்பு ஞாபகார்த்த நிதியத்திற்கு உதவியளித்தல்.

இவ்வாறான சேவைகளினூடாகத் தங்களின் தார்மீகப் பொறுப்பை நிறைவேற்றி நிற்கின்றீர்கள். இந்த வரிசையில் தங்கள் கலை, கலாச்சாரக்குழுவினால் நடாத்தப்படவிருக்கும் கலைவிழாவான 'கலாதீபம் 99' சிறப்புற தாய் சங்கத்தின் சார்பில் பாராட்டி மனதார வாழ்த்துகின்றோம். தங்கள் செயற்பாடுகள் அனைத்தும். சிறப்புடனும், மகிழ்வுடனும் நிறைவேறும். அதனூடாக உங்கள் பணி தொடரவும் மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

வாழ்க.

**ஜே. எக்ஸ். செல்வநாயகம்**

உதவி அரசாங்க அதிபர், ஊர்காவற்துறை



படிப்பகம்



Siva S. Sothy
O.S.L Approval
Classroom in Car Instructor
Member of D.S.A.A

# ADEPT DRIVERS EDUCATION

## (Former S.S.S. Driver Training)

**HIGH PROFESSIONAL**

A- Accurate D- Drivers E- Education P-Professional T- Training

## FREE PICKUP & DROP-OFF


**Full Defensive Driver Training Course Available - 25 Hrs Classroom and 10Hrs in car Training.**
**Early Road Test arrangement for classes - G1-G2 and G2-G licenses**
**Highly Professional Instruction in both class and in car.**

**Tel: 905-275-1821** **Pager: 416-375-5035**

**1185 Dundas Street. East # 216, Mississauga ON L4Y 2C6**

குறைந்ததும், நியாயமானதுமான விலைகளில் இறைச்சியும், மீன் வகைகளும் கிடைக்கும்

# எல்ஸ்மெயர் மீன் இறைச்சி மார்க்கட்





ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள், கட்டாயம் மீண்டும் வருவீர்கள்



- மரை இறைச்சி
- மாட்டிறைச்சி
- ஆட்டிறைச்சி
- காட்டுப்பன்றி இறைச்சி
- கோழி (fresh & frozen)
- ஊர்க்கோழி - சிக்கன் விங்ஸ்
- கோழிக்கால்கள்
- கடல் உணவு (சீபூட்)
- இறால் நண்டு
- மேலும் பற்பல வகைகள்

*Low & Affordable Prices on all Fish & Meat Products*

பேக்டேல் பிளாஸா, 1243 எல்ஸ்மெயர் றோட்
ஸ்காபரோ, ஒன்ராரியோ M1R 2X8
**Tel/Fax: (416) 285-8558**



www.padippakam.com



# கொழும்புக் கிளைத் தலைவரிடமிருந்து...



வேலணை சேர்.வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் கனடாக் கிளையினரால் வெளியிடப்படும் கலாதீபம் 99 சிறப்பு மலருக்கு செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி எய்துகின்றேன். இக்கலை விழா நிகழ்ச்சி சிறப்புற நிகழ்ந்தேற எனது மனமார்ந்த வாழ்த்துக்கள் உரித்தாகுக.

ஆரம்ப காலத்தில் வேலணை மத்திய கல்லூரி என்று பெயர் சூட்டப்பட்டு, 1945ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி நடுப்பகுதியில் வேலணை மத்திய மகாவித்தியாலயம் என்ற பெயருடன் வளர்ந்தது. அன்றைய அரசாங்கத்தின் தீர்மானத்தின்படி இலங்கையில் உள்ள அரசாங்க மத்திய கல்லூரிகள் யாவும் மத்திய மகா வித்தியாலயங்கள் என்று பெயர்மாற்றம் பெற்றன. 1981-1983 காலப் பகுதியில் யாழ்ப்பாண அரசாங்க அதிபராயிருந்து அண்மையில் அமரத்துவமெய்திய திரு. யோகேந்திரா துரைசாமி அவர்களின் முயற்சியானால் மூன்றாவது முறையாகவும் பெயர்மாற்றம் பெற்று சேர். வைத்தியலிங்கம் துரைசாமி மத்தியமகாவித்தியாலயம் என்றுவழங்கப்படலாயிற்று. சேர். வைத்தியலிங்கம் துரைசாமி இக்கல்லூரி நிறுவணர்களுள் முக்கியத்துவம் வாய்ந்தவரும் காலம்சென்ற திரு.யோகேந்திரா துரைசாமி அவர்களின் தந்தையும் ஆவர்.

இக்கல்லூரியின் முதலாவது அதிபராக காலம்சென்ற திரு. **A.K.** கந்தையா 1945ம் ஆண்டு தொடக்கம் 1950ஆம் ஆண்டுவரை சிறப்பாகக் கடமையாற்றினார். இக்காலத்திலேயே முதன்முறையாக ஆங்கிலக்கல்வி போதிக்கப்பட்டது. 1950ஆம் ஆண்டு மார்கழிமாதம் நடைபெற்ற சிரேஷ்ட தராதரப் பத்திரப்(**S.S.C)** பரீட்சைக்கு இக்கல்லூரியில் இருந்து குறைந்த தொகை மாணவர்களே தோற்றினார்கள். இப்பரீட்சைக்குத் தோற்றியயாவரும் சித்தியடைந்து இக்கல்லூரிக்கு பெரும்புகழைஈட்டிக்கொடுத்தார்கள். இதற் குக் காரணம் கல்விமான் திரு. **A.K.** கந்தையா அவர்களின் பங்களிப்பேயாகும். ஆரம்பகாலத்தில் இக்கல்லூரியை கட்டிக் காத்து வளர்த்தபெருமை இவரையே சாரும். இவருக்குப்பின் செயற்திறன் பெற்ற காலம்சென்ற திரு.**V.** தம்பு அவர்கள் 1951ம் ஆண்டு தைமாதம் இக்கல்லூரியின் அதிபராக நியமிக்கப்பட்டார். இவர் இப்பதவியில் 1962ஆம் ஆண்டுவரை தொடர்ந்து கடமையாற்றினார். இப்பாடசாலையில் நீண்ட காலம் அதிபராகக் கடமையாற்றிய பெருமை திரு.V.தம்பு அவர்களையே சாரும். இவருடைய காலம் இக்கல்லூரியின் பொற்காலம் என்று சொன்னாலும் அது மிகையாகாது. 1954ம் ஆண்டில் இவருடைய காலத்தி லேயே இக்கல்லூரியின் மாடிக்கட்டிடங்கள் பூர்த்தியாக்கிவைக்கப்பட்டன. இவர் தன்னையே இக்கல்லூரி யின் வளர்ச்சிக்கு அர்ப்பணித்த கர்மவீரன். இவர் சனி, ஞாயிறு மற்றும் விடுதலை நாட்களிலும் இவருடைய வாடகை வீட்டில் இருந்து கல்லூரி சென்றுகற்பித்தமையும் மற்றும் கல்லூரி வேலைகளில் ஈடுபட்டதும் இன்றும் எனது நினைவுகளில் ஓடுகிறது. கல்லூரி விடுதிகளில் தங்கி இருந்து கல்விகற்ற மாணவர்களைத் தன் சொந்தப்பிள்ளைகள் போன்று கரிசனையுடன் கவனித்து வந்தமையை பழைய விடுதி மாணவர்கள் எவரா லும் மறக்கமுடியாது. இவர் கம்பீரமான தோற்றமுடையவர். அழகிய வசீகரம்பொருந்திய முகம், எதையும் துருவி ஆராயும் கண்கள், அகன்றநெற்றி, வெண்மை நிறவேட்டி, வெண்மையான நஷனல், தோளில் துலங்கிய மடித்த வெள்ளைச்சால்வை, பாதங்களில் சலனமில்லாத செருப்பு. இதுவே இவரின் புருஷோத்தமத் தோற்றம். இவரிடம் கல்விபயின்ற பழையவிடுதி மாணவர்கள் இருவரினால்ஆரம்பிக்கப்பட்ட அதிபர் **V.**தம்பு ஞாபகார்த்த புலமைப்பரிசில் நிதிஇன்று பன்மடங்காகவளர்ந்திருக்கின்றது. இந்த நிதியில் இன்று நான்கு இலட் சம் ரூபா வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருக்கின்றது. இந்நிதியில் இருந்து பெறும் வட்டியில் சென்ற ஆண்டு ஒரு மாணவனுக்கும் இவ்வாண்டு மற்றும் இரு மாணவர்களுக்குமாகத் தற்பொழுது பல்கலைக்கழகம் சென்று மேற்படிப்பை மேற்கொள்ளும் மூன்று பழைய மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படுகின்றது. இந்நிதிக்கு கனடா கிளை சென்றவருடம் ஆயிரம் டொலரை அனுப்பியிருந்தது. (இதன்மூலம் இந்நிதிக்கு 41,943 ரூபா வைப்புச் செய்யப்பட்டது) இப்பண உதவியைச் செய்த அனைவருக்கும் குறிப்பாக பழைய மாணவர் சங்க தலைவர் திரு. சி. இளஞ்செழியன் அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

1991ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த கல்லூரி திரும்பவும் இந்த ஆண்டுடன் தனது சொந்தக் கட்டிடத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. தற்பொழுது பல சிரமங்களுக்கிடையில் கல்லூரி இயங்கிக் கொண்டிருக்கின்றது. கல்லூரிக் கட்டிடத்தில் தங்கி இருக்கும் கடற்படையினர் விலகினால் கல்லூரி சுதந்திரமாக இயங்க முடியும். இதுசம்பந்தமாக கொழும்புக்கிளை நடவடிக்கை எடுக்கின்றது. அதேபோல வெளிநாட்டுக் கிளைகளும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுடன் தொடர்புகொள்வது அவசியம்.

வேலணை பழைய மாணவர் சங்கம், கொழும்பு கிளை மற்றும் பலநாடுகளில் இயங்குகின்ற சங்கங்களுடன் ஒப்பிடும்போது கனடா கிளை, மிக அளப்பரிய சேவையைச்செய்து கொண்டிருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயம். கனடாக்கிளையின் உதவியுடன் நடைபெறும் போஷாக்கு உணவுத்திட்டம் வறிய மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கின்றது. கொழும்புகிளையின் தலைவராக இருப்பதால் மற்றைய கிளைகளின் ஈடுபாடுகள் எனக்கு நன்றாகத் தெரியும். கனடாகிளையைப்போன்று இன்று வரை எந்தக்கிளையும் (கொழும்பு உட்பட) உற்சாகத்துடனும் அக்கறையுடனும் செயற்பட்டதாகக் கூறமுடியாது.

கல்லூரி வருங்காலங்களில் கல்வி கேள்விகளிலும் மற்றும் கல்லூரிப்புறச்செயற்பாடுகளிலும் மிளிர்ந்து விளங்க இறைவன் ஆசியும் பழைய மாணவர்களின் ஒத்துழைப்பும் வேண்டும்.

வாழ்க கல்லூரி நாமம்! வளர்க உங்கள் சங்கம்! வளர்க உங்கள் பணி!

**இ. சுந்தரமூர்த்தி**

**Retired Deputy Director of Customs**



படிப்பகம்

www.padippakam.com




# Eastown

## Restaurant & Banquet Halls

**Banquet Facilities up to 700 Persons**

50பேர் தொடக்கம் 700 பேர் வரையில்
கொள்ளக்கூடிய அலங்கரிக்கப்பட்ட
மூன்று மண்டபங்கள் ஒரே இடத்தில் அமைந்துள்ளன.









**2648 EGLINTON AVE. EAST**
**SCARBOROUGH ONTARIO**
**(At Brimley)**




படிப்பகம்

www.padippakam.com



# பிரித்தானியக் கிளை போஷகர்

## திருமதி வரதா சண்முகநாதன்

1945ஆம் ஆண்டு இரண்டாம் உலக மகா யுத்தமுடிவு. புதுயுக மலர்வு, எமது கல்லூரி பிறந்தஆண்டு. எம்கல்லூரி எமதுநற்றாய். அவள் பாலூட்டி வளர்த்த பிள்ளை களோ சிலர் வயோதிபர், சிலர் இடை வயதினர், சிலர் இளம் வயதினர். இவர்கள் வாழ்க்கையோ பலதரப்பட்டதாய் எம் தாய் நாட்டிலும், இப்பூமித் தாயின் இதர பாகங்களிலும் மலர்ந்து கொண்டிருக்கின்றது. மலர்ச்சி காணவிழைவது தானேமனிதப் பண்பு.

இவ்வாண்டு முடிவடைந்ததும் எம் அன்னைக்கு ஐம்பத்திநான்கு வயதென்போம். ஆனால் அவளோ தமிழை ஒத்த தலைவி. காலத்தால் மூப்பானே தவிரக் கவினில் அவள் என்றும் கன்னி, இளமை அழியாதவள். அவளது இளமைக்கோலம் அழியாதுகாப்பது எம் கடமை. ஓடினாள், ஓடினாள் தேடினாள் இவ்விடம். உயிரோடு மாத்திரம் இருக்கஅல்ல. உத்தமி தன்கடமையினை முடிக்க இன்று அவள் தன் சொந்த இடத்திலல்லவா இருக்கிறாள்.

சிந்திப்போம் சிறிது. வெளிநாடுகளில் வாழும் நாமெல்லாம். ஒரு வருடத்தில் ஒருநாள் மட்டுமல்ல, எந்நேரமும் எம்மனத்திரையில் வரவழைப்போம் எம் அன்னையின் பாதத்தில் மண்டியிட்டு அல்லும் பகலும் அனைவரதமும் கையேந்திநிற்கும் அவளது தற்போதைய மாணவச் செல்வங்களை காலத்தின் கோலத்தால் அவர்கள் கையேந்துகிறார்கள். வெளிநாட்டில் உள்ளவர்கள் எமக்கு உதவ மாட்டார்களோ என எண்ணித் தவிக்கிறார்கள். எனவே, கனடா நாட்டுப் பழைய மாணவர் சங்கத்தினரே நீங்கள் செய்யும் பணியோ மிகப் பெரிது. தற்கால அன்னையின் கண்ணீர் துடைக்க உதவுகின்றீர்கள். உங்கள் பணியை நான் பாராட்டுகின்றேன். உங்கள் உதாரணம் மற்றோர்க்கும் ஒரு ஒளி விளக்காகட்டும்.

அன்னையின் வாழ்க்கை வரலாற்றைப் பலர் பல கண்ணோட்டங்களில் பார்ப்பர். எனது கண்ணோட்டத்தில் ஒரு கல்லூரியின் வாழ்க்கையை ஆண்டுகள் மாத்திரம் கணிப்பன அல்ல. அம் மாதா வழங்கும் அறிவு அதற்கும் மேலான பண்பு இவையே முக்கியம். அக்கடனை அவள் முடிக்க நாமெல்லாம் ஒற்றுமையாய் ஒரு முகமாய் உழைக்க வேண்டும்.

எம்நாட்டு, இளஞ்சிறார் இன்றல்ல நாளையல்ல என்றும் எம் அன்னையின் மடியில் அமர்ந்து அறிவியல், அன்பியல், பண்பியல் யாவும்பெற எம் உதவிமுக்கியம். எனவே உங்கள் ஊக்கம் பெருகட்டும். ஒற்றுமை தழைக்கட்டும்.

வாழ்க எம் அன்னை!

வளர்க உங்கள் சங்கம்!

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு'

# பிரித்தானியக் கிளை தலைவரிடமிருந்து...

எனது அருமை வேலணை மத்திய கல்லூரியின் கனேடிய பழைய மாணவர் சங்கத்தின் கலைவிழா மலரான 'கலாதீபம் 99'இற்கான இந்த வாழ்த்துச் செய்தியை, பிரித்தானிய பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் அனுப்பிவைப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஈழத்திலும், அதற்கு வெளியேயும் இருக்கின்ற எமது அத்தனை பழைய மாணவர் சங்கங்களுக்கும் எடுத்துக்காட்டாகச் செய்றபடுகின்ற உங்கள் சங்கத்தையும், சிறப்பாக அதன் செயற்குழு அங்கத்தவர்கள் அனைவரும் எமது பழையமாணவர் ஒவ்வொருவராலும் பாராட்டப்பட வேண்டியவர்களாவர்.

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்ற உன்னத கோட்பாட்டிற்கிணங்க நீங்கள் அனைவரும் மேலும் மேலும் ஒன்றுபட்டு எமது கல்லூரிக்கும் சமூகத்திற்கும் உங்கள் சேவை மேலும் தொடரவேண்டும் எனக் கேட்டுக் கொண்டு, 'கலாதீபம்-99' இனிதே நிகழ்வுற வாழ்த்தி விடைபெறுவது...

உங்கள் சேவைக்குரிய

**சிவ ஆதித்தன்**

B.Sc, M.Phil., M.Phil



படிப்பகம்

www.padippakam.com



# நியூ லலிதா

## நகை மாளிகை




**Specialized in Singapore Items**

அனைத்துரக 22 கரட் தங்க, வைர நகைகளை
உறுதியான கண்கவர் வேலைப்பாட்டுடன்
உங்கள் எண்ணம்போல் பெற்றுக்கொள்ளலாம்.
பழைய பவுண் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளப்படும்.

**1604 Gerrard St. East**
**Toronto ON M4L 2A5**
**Tel: (416) 461-2610**
http://www.worldtamilsbusiness.com/newlalitha.htm

**கிளை ஸ்தாபனம் கொழும்பு**
**165 Sea Street, Colombo**
**Tel: 332948**



படிப்பகம்

www.padippakam.com



# பிரான்ஸ் கிளை தலைவரிடமிருந்து...

'ஒரு இனத்தின் கல்வியை அழிப்பது என்பது அவ்வினத்தை அழிப்பதற்குச் சமன்' இது சோக்கிரட்டீஸ் இன் கூற்று. ஈழத்தில் கால்நூற்றாண்டிற்கு முன் தரப்படுத்தல் மூலம் இனஅழிப்பிற்கு கால்கோளப்பட்டது. அன்று தொடக்கப்பட்ட அழித்தலிலும் இன்றைய உயிர், உடமை அழித்தலிலும் புலம்பெயர்விலும் அகதி வாழ்விலும் எமது இளம் தலைமுறையினரின் கல்வி அழியவில்லை. கீழ் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது.

உயிரழிவிற்கும் உயிர்வதைக்கும் தம்பித்துக் கொண்டிருக்கம் நம்மவர்க்கு கல்வியில் கூடிய கரிசனை இருந்துகொண்டேயிருக்கின்றது. அந்தக் கரிசனையை கவனத்திலெடுத்து அவர்களுக்கு உதவுவது வளர்ந்த நாடுகளில் வசதி. அகதியாய் வாழும் நம்மளது தலையாய கடமையாகிறது.

பூமியின் ரேகைகள் நம் கால்பட்டுத்தேய உலகை ஊராக்கி நாடுகளை வீடாக்கி 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' ஆக வாழினும் தொப்பூழ் கொடி உறவுகளோடு தொடர்பு தொடர எமது கல்லூரியின் இளம் தலைமுறையினரின் கல்வி மேம்பாட்டிற்கு உதவும் தங்கள் ஊக்கமும், அக்கறையும், முயற்சியும் பாராட்டப்படவேண்டியது.

மேலும் உற்சாகத்துடன் இயங்கவும் மக்களை ஒன்றிணைத்து உறவுவளர, இதுபோன்ற கலைவிழாக்கள், ஒன்றுகூடல்கள் பயன்பட வேண்டுமென வாழ்த்தி நிற்பதோடு ஒருவர் எல்லோருக்காகவும் எல்லோரும் ஒருவர்க்காகவும் ஓங்கி குரல் கொடுத்துக் கொண்டே இருக்கவேண்டும் எனவும் வேண்டி நிற்கின்றோம்.

**அ. இயல்வாணன்**

தலைவர்

# அவுஸ்திரேலிய கிளைத் தலைவரிடமிருந்து...

வேலணை மத்தியமகாவித்தியாலயப் பழைய மாணவர் சங்க கனடா கிளையினரால் வெளியிடப்படும் 'கலாதீபம்-99' மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெருமிதம் அடைகிறேன்.

இன்றைய நிலையில் எமது தாய் நிறுவனம் சீராக இயங்க முடியவில்லை. ஆனாலும் உலகளாவிய ரீதியில் பரந்து இருக்கும் நாம் - அவளது பிள்ளைகள் - ஒருமித்து ஆதரித்து எமது சங்கங்கள் ஊடாக தீவுப்பகுதிக்கு ஒளிகாலும் சிறந்த நிறுவனமாக எமது அன்னையை மீண்டும் ஆக்க ஒன்றுபட்டு உழைப்போமாக.

மேலும் உங்கள் கிளை காலத்துக்குக் காலம் கல்லூரியின் தேவைகளை உணர்ந்து ஆற்றி வரும் சேவைகள் பாராட்டுக்குரியவை.

'கலாதீபம் -99' இனிதே நடைபெற வாழ்த்துகிறேன்.

**ச. சண்முகமணி**

தலைவர்



படிப்பகம்

www.padippakam.com



# சாமி அன் சன்ஸ்



## WHOLE SALERS & RETAILERS



**1884-B Kennedy Road, Scarborough**

(Kennedy & Ellesmere)

தொடர்புகளுக்கு: நடா *or* சுந்தர்

**Tel:(416) 298-1598 Fax:(416) 298-2849**

※ புத்தம் புதிய டிசைன்களில் வெளியூர்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவநாகரீக மங்கையர், ஆடவர், சிறுவர், சிறுமியருக்குரிய சகலவிதமான உடுப்பு.

※ தரமான **C.D** மற்றும் ஓடியோ, வீடியோ கசற்றுக்களை விற்பனைக்கும் வாடகைக்கும்....

※ பியானோ, நடன, சங்கீத வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன.

※ வீடியோ பிரதி மாற்றம் **Any System to Any System**

※ தரமான 22கரட் தங்க நகைகள்

※ கதிரைகள், தலைப்பாகை, சோடனை நகைகள் வாடகைக்கு எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.




## Textiles - Jewellery - Crafts Items - Gift Items

## Money Transfer - Audio, CD - Video *(sales & Rentals)*

***Tel:(416) 298-1598 Fax:(416) 298-2849***



படிப்பகம்

www.padippakam.com



# முன்னாள் அதிபரின் வாழ்த்துச் செய்தி



தொகுதிக்கொரு மத்திய கல்லாரி என்ற அடிப்படையில் வேலணையில் நிறுவப்பட்ட மத்திய மகா வித்தியாலயம் தீவகப்பகுதியின் மணிமகுடமாக இன்று திகழ்கின்றது. இங்கு கல்வி கற்ற மாணவர்கள் பல்வேறு துறைகளில் திறமைசாலிகாளக உலகளாவிய ரீதியில் எங்கும் பரந்து பணி புரிந்து வருகின்றனர்.

சப்த தீவுகளின் ஒளிவிளக்காக விளங்கும் வேலணை மத்திய மகாவித்தியாலய அன்னை உரு வாக்கியபுகழ்பூத்த பழைய மாணவர்கள் பலர் கனடாவில் சிறப்புடன்வாழ்கின்றனர். இவர்கள் அங்கு கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின் கிளை ஒன்றை நிறுவித் தம் அன்னையின் புகழைப்பரப்பு வோடது அமையாது அவளுக்கு மிகச்சிறந்த தொண்டும் ஆற்றி வருகின்றனர். அவர்கள் தமக்கு அறிவூட்டிய கல்லூரி அன்னையிடத்து அன்பும் பெருமதிப்பும் கொண்டுள்ளமை அறிந்து அகமகிழ் கின்றேன்.

பெற்றதாயும் பிறந்தபொன்னோடும் நனி சிறந்தனவே என்பதைப் போன்று அறிவூட்டிய தம் கல் லாரி அன்னையை நன்றிக்கடனுடன் பெரிதும் மதித்து அன்புபாராட்டி வருதல் அவர்களுடைய சிறந்த பண்பாகும்.இக்கல்லூரியின் புகழ்பூத்த பழைய மாணவர்கள் பலர்தாம் இப்பொழுது அடைந்திருந்கும் உயர்ந்த நிலைக்கும் பொருளாதார மேம்பாட்டுக்கும் தமது கல்லூரி அன்னையே காரணம் என நினைந்து பாராட்டுகின்றமை கண்டு அகமகிழ்வடையும் யான் அவர்களின் இத்தகைய பண்பு மேன் மேலும் வளரவேண்டுமென விழைகின்றேன்.

அண்மைக்காலத்தில் நாட்டில் ஏற்பட்டஅனர்த்தங்கள் காரணமாக தமது அன்னை நலிவடைந்து பொலிவிழந்து இருப்பதை அறிந்து அவளுக்குப் புத்துயிர் கொடுக்கவேண்டுமெனப் பல வகைகளில் உதவிசெய்ய முன்வருவது பாராட்டுக்குரியது. தம் அன்னையின் இளந்தலைமுறையினர் இப்போது பல வழிகளில் துன்புறுதலை அறிந்து அவர்களுக்கும் ஒரு செயலாகும். இது கல்லூரியுடன் அன்பி னால் பிணைக்கப்பட்ட எல்லோருக்கும் பெருமையும் மகிழ்ச்சியும் அளிக்கின்றது.

இவ்வாறு செயலாற்றும் கனடா வாழ் பழைய மாணவர்கள் கல்லூரியின் பொன்விழாவையொட் டிக் கொண்டாட இருக்கும் கலைவிழாவுக்கும் வெளியிடவிருக்கும் சிறப்பு மலரான கலாதீபம் 99க்கும் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களை அனுப்பி வைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி.

வேலணை மத்திய மகா வித்தியாலயப் பழைய மாணவர் சங்க கனடாக் கிளையின் பணிகள் மேன்மேலும் தொடரவேண்டும் கல்லூரி மேன்மேலும் வளரவேண்டும் அதன் புகழ் பாரெங்கும் பரவவேண்டும்.

'அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்'

**செ. குணபாலசிங்கம்**

முன்னாள் அதிபர்
வேலணை மத்திய மகா வித்தியாலயம்



படிப்பகம்

www.padippakam.com




# Daily Needs

# டெயிலி நீட்ஸ்

உங்கள் அன்றாட தேவைகளான
இலங்கை, இந்திய உணவுப் பொருட்கள்,
பசுமையான மரக்கறி,
மற்றும் பால் பழவகைகள்
உடன் ஆடு, மாடு, கோழி,
மீன் வகைகளும் உங்கள் வீட்டுத்
தேவைகளைப் பூர்த்தி செய்வதில்
முன்னணியில் நிற்கின்றது டெயிலி நீட்ஸ்
**Variety & Grocery, Take out & Catering** அத்துடன் **Dollar**
சாமான்கள் **Super Market.**




## துரித பணமாற்றுச்சேவை

இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், ஐரோப்பிய
நாடுகளுக்கான துரித பணமாற்றுச் சேவைக்கும்
நம்பிக்கையுடன் நாடுங்கள்.

**FAX SERVICE - PHOTO COPY - INSTANT LOTTO**

பரிசுப் பொருட்கள், எவர் சில்வர் பாத்திரங்கள்,
புத்தகங்கள், சஞ்சிகைகள், முத்திரை, சிகரட்,
**T.T.C** ரிக்கற், தொலைபேசி அட்டைகள்,
மற்றும் **Dollar Super Market**க்குரிய
**Kitchenware, Electrical, Hardware** நியாயமான
விலையில் பெற்றுக்கொள்ளலாம்.


## Catering, Chair Rentals & Hall

வாய்க்கு ருசியான சுடச்சுட தமிழீழ, இந்திய முறைப்படி
தயாரிக்கப்படும் உணவு வகைகள் Buriyani Noodles வகைகள்

உங்கள் இல்லத்து வைபவங்கள் எதுவானாலும் சுவைமிக்க
உணவுகளை எம்மிடம் ஓடர்செய்து பெற்றுக்கொள்ளலாம்.
அத்துடன் கதிரை, மேசை என்பனவும் வாடகைக்கு விடப்படும்.
இவற்றைவிட 100 பேர் வரை அமரக்கூடிய மண்டபம்
எம்மிடம் வாடகைக்கு உண்டு.

**Tel: (416) 490-7703**
**Fax: (416) 490-6461**

**2543 Pharmacy Avenue**
**Scarborough, Ontario (Finch & Pharmacy)**







படிப்பகம்

www.padippakam.com



# யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை தலைவரிடமிருந்து...



கனடாவில் வாழும் வேலணை மத்திய மகா வித்தியாலயப் பழைய மாணவர் சங்கத்தைச் சேர்ந்த நீங்கள் கல்லூரி அன்னையின் பொன்விழாச் சிறப்பு மலராக 'கலா தீபம்-99' எனும் மலரை வெளியிட இருப்பதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன் தாங்கள் அனுப்பியிருந்த செயற்பாட்டு அறிக்கையை வாசித்து, தாங்கள் ஆற்றிவரும் அளப்பரிய சேவையை உணர்ந்து மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். பல்லாயிரம் மைல்கள் தாண்டி, புதிய பௌதீக, நாகரிக, வாழ்க்கைச் சூழலில் வாழும் நீங்கள் கல்லூரி அன்னையை மறவாது ஆற்றிவரும் சேவையையிட்டு மன நிறைவடைகின்றேன். மனித நேயத்துடனும், சமூக உணர்வுடனம், கல்லூரிமேல் கொண்ட பற்றுணர்வுடனும் தாங்கள் ஆற்றிவரும் பலதரப்பட்ட சேவைகள் மற்றைய பழைய மாணவர்களுக்கும் ஓர் உதாரணமாக இருக்கவேண்டுமென விரும்புகிறேன்.

கனடாவில் வாழும் பழைய மாணவர்களை மட்டுமல்லாது மற்றைய நாடுகளில் இயங்கும் கல்லூரியின் பழைய மாணவர் சங்கங்களுடனும் இலகுவான முறையில் தொடர்புகளை மேற்கொள்வதற்கு சங்கத்திற்கு ஓர் HomePageஐ உருவாக்கியமையும் பாராட்டுதற்குரியதே. இத்தொடர்பு கல்லூரியின் தேவைகளை இனங்கண்டு உதவிசெய்யப் பெரிதும் உதவுமென்று நம்புகின்றேன்.

கலாதீபம்-99 பொன்விழா மலர் சிறப்புற அமைந்து தங்கள் உயரிய குறிக்கோள்களை மேலும் முன்னெடுத்துச் செல்ல எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**பேராசிரியர் ச. சத்தியசீலன்**
தலைவர், வரலாற்றுத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி

# பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே...



பெற்றதாயினும் பிறந்த பொன்னாட்டினும் நனி சிறந்த எமது கலாதீபத்தாய் எமக்கெல்லாம் கல்வி அமுதினை அள்ளி ஊட்டிக் கண்ணிமைபோல் காத்த தாய் இன்று உயிர்த்தெழுந்து வாழநினைக்கிறாள். அவளதுவாழ்வையும், எமதுமண்ணில் வாழும் இளஞ் சிறாரின் எதிர்கால வாழ்வையும் எண்ணுவோம்.

எம்மால் இயன்றதைக் கொடுப்போம். எமது கலாதீபத் தாயாம் வேலணை மத்திய கல்லூரி வாழ்க வாழ்க என வாழ்த்துவோம்.


**Dr. பொ. பாலசுந்தரம்**



படிப்பகம்

# SRI MAHALL

## Alimentation Produits Asiatiques




- ஆசிய மரக்கறிகள், இலங்கையிலிருந்து இறக்குமதியாகும் மண்மணம் வீசும் மரக்கறிகள்
- மளிகைப் பொருட்கள்
- வீடியோ, ஓடியோ கசற்றுக்கள் வாடகைக்கும் விற்பனைக்கும்

லாச்சப்பலில்... **ஸ்ரீ மகால்**

**SRI MAHALL**

**197, rue du Fg.Saint Denis, 75010 Paris**

**Tel: 01-46-07-83-12**

**M°: La Chapelle ou Gard du Nord**

www.padippakam.com



# சங்கத்தின் அமெரிக்க இணைப்பாளர்களிடமிருந்து...



வேலணை மத்தியமகாவித்தியாலய பழையமாணவர் சங்கத்தின் கனடா கிளை செய்துவரும் பணிகள் மிகவும் வரவேற்கத்தக்கவை. தங்களது வேலைகளுக்கே நேரம்போதாத நிலையிலும் கிளை அங்கத்தினர் தமது கருமங்களை விட்டு சங்கத்தின் கருமங்களில் ஈடுபடுவது மிகவும் மெச்சத்தக்கது.

மாணவர்கள் தமது படிப்பை பல கஷ்டங்களுக்கு மத்தியிலும் தொடர்கிறார்கள். இந்த நிலையில், பழையமாணவர் சங்கம் மாணவர்களின் மதிய போச னத்தைப்பொறுப்பெடுத்து வழங்கிவருவது மிகவும் போற்றத்தக்கது. இதற்கான செலவுகளுக்கு தொடர்ந்து பணம் வசூல் செய்வது மிகவும் கடினமானதாகும். எனவே எமதுசங்கம் ஒருஆஸ்தி (endowment fund) ஒன்றை ஆரம்பித்து அதனை முதலீடு செய்தால் அதலிருந்து கிடைக்கும் இலாபப் பங்குகளை (dividends) எடுத்துப் போசாக்கு உணவு போன்ற செலவுகளுக்கு பயன்படுத்தமுடியும். அத்துடன் தொடர்ந்து வசூல் செய்யும் பணத்தை சங்கத்தின் ஆஸ்தியைப் பெருக்கப்பயன்படுத்த முடியும். எனவே எமது எதிர்பார்ப்பிற்கு மேலாக தமது பணிகளைச் செய்துவரும் சங்க அங்கத்தினர் இதனைத் தங்களது சிந்தனைக்கு எடுத்து ஆவன செய்யுமாறு இவ் வாழ்த்துரையின் மூலம் வேண்டுகோள் விடுகின்றேன்.

எமது சங்கம்விருத்தி அடைவதைப்பார்க்கின்றபோது எமது மண்ணும் பாடசாலையும் விருத்தியடைவது போன்ற உணர்வு ஏற்படுகின்றது. இதற்குக் காரணமாக இருந்த பழைய மாணவர்கள் யாபேருக்கும் எனது உளம் கனிந்த வாழ்த்துக்கள்.

'வாழ்க தமிழ் மொழி! வளர்க எம் கல்வியகம்!'

**சிவசிதம்பரம் மோகனச் சந்திரன்**
B.Sc (Cey), M.Sc (U.S.A)
பழைய மாணவன்: 1963-1968



*As a proud old Student of Velanai Madya Maha Vidyalayam, It is a great priviledge to extend my greetings on the occasion of Kalatheepam 99. I highly respect your dedication and continued enthusiasm to organize various cultural events and fund raising activities for the progress and development of our school.*

*Continued success of our school in providing quality education to our future generation during this most difficult time is highly dependent on Old Students of our school to provide much needed funding and moral support.*

*My best wishes for your continued success in your selfless actions and and entertaining evening on your 'Kalatheepam 99'*

**Dr. Nadarajah Vigneswaran**
*B.D.S., D.M.D., Ph.D*
*Diplomate, American Board of Oral Pathology*
*Assistant Professor, depaartment of Pathology*
***Old Student of Velanai Madya Maha Vidyalayam***



படிப்பகம்

www.padippakam.com


# AIR LINK

*We Have The Power To Give You The Best!*

**Why Would You Go Somewhere Else?**



WORLDWIDE RELIABILITY KLM NORTHWEST

KLM

KOREAN AIR

Thai

A STAR ALLIANCE MEMBER

Lufthansa

SILKAIR

A great way to fly SINGAPORE AIRLINES

CATHAY PACIFIC

Always Remember Air Link Travel For All Your Travel Needs

Emirates

JET AIRWAYS

BRITISH AIRWAYS

AIR CANADA

SRI-LANKAN AIR WAY'S

CANADA 3000

**5200 FINCH AVENUE EAST, G115**

**TORONTO ON M1S 4Z4 (Finch / Middlefield)**

**Tel: (416) 292-6200**




படிப்பகம்

www.padippakam.com



# எமது கல்லூரி அன்னைக்கு...



கல்லூரி அன்பால் பேரன்புகொண்டு அன்னையின் புதல்வர்களாகிய நீங்கள் இங்கு கனேடிய மண்ணில், இன்றுகொண்டாடும் கன்னிப்பெரு விழாவாகிய 'கலாதீபம் 99' வெற்றிவிழாவாகத் தளிர்விட்டு, வருங்காலத்தில் நறுமணத்துடன் பெரிய விருட்சமாக வளர்ந்துபாடசாலைக்கும் அங்கு கல்விகற்ற சகலருக்கும், பேரும்புகழும் தரவேண்டும் என்று வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகிறேன்.

யாழ்ப்பாணத்தின் ஏழு தீவுகளுக்கும் தேசியக் கல்லூரியாக மிளிரும் எமது கல்லூரியின் பழைய மாணவர்களாகிய நாம், வெளிநாடுகளில் இருந்து அன்னையை உலகறியச் செய்யும் கடமையுடையவராய் இன்று உள்ளோம். இதற்கு இங்குள்ள சகலமாணவ, மாணவிகள் முன்வந்து உங்களால் முடிந்த பங்களிப்பை எமது பாடசாலையின் வளர்ச்சிக்குச் செய்யும்படி எல்லோரையும் அன்புடன் வேண்டுகிறேன்.

ஒவ்வொருவருடைய வாழ்விலும் என்றும் அழியாமல் மனதில் அலைமோதிக் கொண்டிருக்கும் நினைவுகள் பெற்றதாயும், பிறந்த பொன்னாடும், கல்வி பயின்ற கலைக்கூடமும் ஆகும்.

துரதிஷ்ட வசமாக காலத்தின் கோலத்தினால் எமக்குக் கல்வியூட்டிய அன்னை, மனமுடைந்து கவலையும் கண்ணீருமாய் செய்வதறியாது பிள்ளைகளாகிய எமதுஉதவியை எதிர்பார்க்கின்றாள். எமது அன்னையின் இன்றைய நிலையை உணர்ந்து நாம் தோள்கொடுத்து எம்மால் முடிந்த உதவிகளைச் செய்து, அன்னையின் துயர்துடைக்க முன்வரவேண்டும் என்று உங்கள் அனைவரையும் பணிவன்புடன் வேண்டுகிறேன்.

இலங்கை மணித்திருநாட்டில் நம்பாடசாலை நல்லபெயரும் புகழுடனும் என்றும் வாழ்ந்திட மனமார வாழ்த்துகின்றேன்.

வணக்கம்.

**Dr. பொன் விமலேந்திரன்**

பழைய மாணவர்

# வாழ்த்துச் செய்தி...

வேலணை மத்திய மகாவித்தியாலய கனடா பழைய மாணவர் சங்க விழாவான 'கலாதீபம்-99' செவ்வனே நடைபெறவும், தமிழர் ஒற்றுமை பெருகவும், பிறந்தநாட்டின் சூழ்நிலை காரணமாக திக்கெல்லாம் சென்று ஈழத்தமிழர் பிறந்த ஈழத்திற்கும், புகுந்த நாட்டிற்கும் பெருமைதர வாழவும், நாட்டில் வாழவும் திக்கற்று அல்லல்படும் ஈழம் வாழ் தமிழர் துயர்தீர்ந்து வாழவும் இறைவனை வேண்டுகின்றேன்.

**Dr. சபா குலத்துங்கம், M. D., F.A.C.C**

பழைய மாணவர்

வே.ம.ம.வி



படிப்பகம்

www.padippakam.com




# ST. JAMESTOWN FAMILY MEDICAL DENTAL CENTRE




## Dr. K. Kirupa D.D.S.

*Dentist*

Monday - Tuesday

Saturday-Sunday

240 Wellesley St. East
Toronto, ON M4X 1G5

Tel: (416) 928-2827
Fax: (416) 925-6093




படிப்பகம்

www.padippakam.com



# உள்ளத்தில் ஒளிபெற...



**உ**ள்ளத்தில் ஒளிபெற உடல்உறுதியாக இருக்க வேண்டும் என்பது சுவாமி விவேகானந்தரின் கருத்து. அரசியல் அனர்த்தங்களால் இடம்பெயர்வு ஏற்பட்டபோது கூடுதலாகப் பாதிக்கப்பட்டபகுதி தீவகமே. ஆறு வருடங்களாகப் பயன்படுத்தப்படாமல் காடடர்ந்தும் தரிசுநிலங்களாகவும் நம் பொன் விளையும் பூமி இருந்தது. மீளக்குடியேறியவுடனேயே வருமானம்பெறல் அரிதாக இருந்தது. மண்ணை மட்டுமே நம்பியிராத ஒருபகுதி மக்கள் வளத்தைப் பெருக்கிக் கொண்டனர். போக்குவரத்தும் சீரற்று இருந்தது. சுற்றி வளையும் நீண்ட பாதைகளினூடாககல்லூரிக்கு வருகின்ற மாணவர்கள் களைத்தமுகத்துடனேயே காட்சியளித்தனர். அழித்தபொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பும் நிலையில் இருக்கும் பெற்றோரின் சிறார்களுக்கு போஷாக்குணவு அவசியமாக இருந்தது. சோர்வு நீங்கி நம் சிறார்கள் கருத்தூன்றிக் கற்க மதிய உணவு அளிக்க வேண்டியது அவசியமாயிற்று.

இந்நிலையில் பல்நாடுகளிலும் உள்ள பழைய மாணவர்கள் சங்கங்களின் ஊடாக கல்லூரியின் தேவைகளைக் கூறி உதவி வேண்டினோம். ஒவ்வொருகிளைகளும் தம்மால் நடைமுறைப்படுத்தக்கூடிய திட்டங்களைப் பொறுப்பேற்றனர். பழைய மாணவர் சங்க கனடாக்கிளையினர் போஷாக்குணவின் அவசியத்தை உணர்ந்து அத்திட்டத்தைப் பங்கேற்றுக்கொண்டனர். இதுவாடிய பயிருக்கு நீர் தெளிப்பது போன்றது. இது செயற்கரிய செயலாகும்.

ஒருவருடம் பூர்த்தியானதும் எமது அதிபர் அக்கிளையுடன் தொடர்பு கொண்டபோது இதனை நீண்டகாலச் செயற்பாடாகத் தாம் திட்டமிட்டிருப்பதாக பெருவிருப்புடன் தெரிவித்தனர். இது எமக்கு மகிழ்ச்சியான செய்தியாகும். இது இலகுவான செயலுமன்று.

உற்றாரை, ஊரை, பேரை மறந்து அந்நிய கலாச்சாரத்துள் தம்மை அழித்துக் கொண்டு நம்மவர் பலர் மகிழும் காலத்தில் தாம் வருந்தி ஈட்டிய பொருளைத் தம் கல்லூரியின் இளைய சகோதரரின் கல்வி விருத்திக்காக அளிப்பது ஒரு தியாக உணர்வுமாகும். அறிமுகமாகும். இதனால் நம் சிறார்களிடையே நன்றியுணர்வும் பிறர் நலமும் வளரும். வள்ளுவர் கூறியது போல அழிபசி தீர்த்தல் மறுமைக்கும் பயன்படும் ஒருசேம நிதியாகும்.

கனடாக் கிளையின்றில் பணிகள் சிறப்புற்று காலவிழாவினால் 'கலாதீபம்'சஞ்சிகை குன்றிலிட்ட தீபம் போல விளங்கவும். தமிழ் மணமும், தமிழ் பண்பும் பரவவும் வாழ்த்துகின்றேன்.

நன்மைகள் விளைய, நன்மைகள் செய்வோம்.

நமக்கென உளதைப், பிறர்க்கும் கொடுப்போம்.

**திருமதி. வேதவல்லி அரசரத்தினம்**, B.A, Dip-in-Ed.

சிரேஷ்ட ஆசிரியை

வேலணை மத்திய மகா வித்தியாலயம்



படிப்பகம்

www.padippakam.com



# தீவகத்தின் கலைக்கோயில்

எமது நாட்டின் இலவசக்கல்வியின் தந்தை எனப் போற்றப்படும் கல்விமந்திரி சி.டபிள்யு, டபிள்யு கன்னங்கரா அவர்களின் தொலைநோக்கினால் தொகுதிகள் தோறும் மத்திய கல்லுரிகள் அமைக்கப்பட்டன. தீவகத்தொகுதிக்கான மத்தியகல்லூரி 1945ம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி வேலணையில், சைவப் பிரகாச வித்தியாசாலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. வலிமேற்கு சட்டசபை உறுப்பினர் வைத்திலிங்கம் துரைச்சாமி அவர்களின் பெருமுயற்சியினாலும் வேலணைக் கிராமசபைத் தலைவர் சி. மருதையினார் அ வர்களின் அயரா உழைப்பினாலும் உதவியினாலும் இப்பாடசாலை உருவாக்கப்பட்டது. பணம் படைத்த மக்களின் ஏகபோக சொத்தாக இருந்த கல்வி, தொகுதி மத்திய கல்லூரித்திட்டத்தின் மூலம் பாமர மக்களுக்கும் கிடைக்கக்கூடியதாக இருந்தமை ஒரு வரப்பிரசாதமெனலாம். வேளைதோறும் உணவு உட்கொள்ளமுடியாத ஏழைக்குடும்பங்களை 'நாளை நமதே' என்று கூறவைத்தது தொகுதி மத்திய கல்லூரித் திட்டமே எனலாம். இலவசக்கல்வி, எல்லோருக்கும் கல்வி, விசேடகல்வி, உயர்கல்வி,ஆங்கிலக்கல்வி, அறிவியல்கல்வி தாய்மொழிக் கல்வி என்பன இந்த நூற்றாண்டின் அறைகூவல்களாகும். தனிமனிதவிருத்தி, சமுதாய மேம்பாடு, வளங்களின் அபிவிருத்தி, நாட்டு முன்னேற்றம், உலகின் உயர்ச்சி யாவற்றிற்கும் அடித்தளமாக அமைவது கல்வி, கல்விச் சாலையைத் திறப்பவன் சிறைச்சாலையை மூடுகின்றான். கல்விக்கண் திறப்பவர்கள் காலமெல்லாம் நினைவுகூரத்தக்கவர்கள். அன்னயாவினும் சிறந்தது ஆங்கோர்ஏழைக்கு எழுத்தறிவித்தல் எனவே கல்வித் தொண்டாற்றுபவர்கள் கண்ணெனப் போற்றத்தக்கவர்கள்.

சூழும்கடலால் பிரிக்கப்பட்ட ஏழு தீவுகளில் வாழும் மக்கள் நாளும் பொழுதும் நலிவுற்றே தமது வாழ்க்கையை நடத்த வேண்டியுள்ளது. வளமற்ற மண், குடிநீர் பஞ்சம், பாதகமான சூழல் போக்குவரவுக்கஷ்டம், தொழில் வாய்ப்பின்மை காரணமாக அவர்களை வாழ்வில் எழில்காணமுடியாதுள்ளது. எனவே தான் திரைகடல் ஓடியும் திரவியம் தேடும் நிலை ஏற்பட்டது. மணிஓடர் பொருளாதாரத்திலேயே தீவகமக்கள் தங்கியிருந்தனர். இதனால் கல்வியை மூலதனமாகக் கொள்ளும்நிலை ஏற்பட்டது. தீவுகள் தோறும் ஆங்கில கனிஷ்ட வித்தியாலயங்கள் அமைக்கப்பட்டமை (பின்னர் அவை மகா வித்தியாலயங்களாக வளர்ச்சி பெற்றன). கல்விவிருத்திக்கும் வாழ்வின் வளத்திற்கும் வழிகோலின. வடமராட்சிப் பகுதிக்கு அடுத்ததாகத் தீவகம் கல்விவளர்ச்சியில் சிறந்து விளங்குகின்றது என்றால் மக்களின் இயல்பான திறமையும் ஊக்கமும் உழைப்புமேயாகும். ஊழையும் உட்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழாது உஞற்றுபவர் என்ற வள்ளுவர் வாய்மொழிக்கேற்பவும் முயற்சி திருவினையாக்கும் என்னும் முதுமொழிக்கேற்பவும் அரிதின் முயன்று கல்வித்துறையில் பெரிய சாதனைகளைத் தீவகமக்கள் நிலைநாட்டியுள்ளனர்.

இவ்வித்தியாலயத்தின் முதலாவது அதிபராக திரு *A.K.* கந்தையா பதவியேற்றார். ஆங்கிலத்தில் புலமைபெற்றஇவரின் திறமையினாலும் ஆளுமையினாலும் மாணவர் ஆங்கிலத்தில் தேர்ச்சியும் பல்துறை வளர்ச்சியும் பெற்றனர். விடுதிகளில் மாணவ, மாணவிகள் தங்கிப்படிக்கும் வசதி ஏற்பட்டது. வதிவிடவசதிகல்வி வளர்ச்சிக்கும் கல்விசார் நடவடிக்கைகளுக்கும் காரணியாக அமைந்தது எனலாம். நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, புங்குடுதீவு,லைடன்தீவு, மண்டைதீவு ஆகிய தீவுகளில் இருந்து 5ம்வகுப்பு புலமைப்பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் விடுதிகளில் தங்கி இருந்து கல்வி பெற்றனர்.இளம்வயதில் பெற்றாரைப்பிரிந்து வந்திருந்த மாணவர்களுக்கு விடுதி உணவு உருசியாக இல்லாதிருந்த போதிலும் அதிபரினதும், விடுதி ஆசிரியர்களினதும் அன்பும், ஆதரவும் கவனமும் கரிசனையும் வீட்டின் சூழலையும் சுகத்தையும் மறக்க வைத்தன எனலாம். மாணவர்கள் ஒரே குடும்பமாக இருக்கின்ற உவப்பானநிலை ஏற்பட்டது.



அதிபர் V.தம்பு அவர்களின் பன்னிரு ஆண்டு காலச்சேவை பல்துறை வளர்ச்சியை ஏற்படுத்திய கல்லூரியின் பொற்காலம் எனலாம். கலைத்துறையுடன் விஞ்ஞானத்துறையும் வளர்ச்சிபெற்றது. கம்பீரமான நடையுடன் கையில் பிரம்புடன் அவர்கல்லூரியை சுற்றி வரும்போது வகுப்பறையில் அமைதிநிலவும். கனிவும் கண்டிப்பும், கரிசனையும் கொண்டு மாணவர்களை அன்னை போல அணைத்தவர்புலமை மிக்க அவரின் சேவையினால் கணிதத்துறையில் பலர் தேர்ச்சிபெற்றனர். பட்டதாரிகள், கணக்காளர்கள் மருத்துவர்கள், பொறியியலாளர்கள், நிலஅளவையாளர்கள் சட்ட வல்லுனர்கள் பலரை உருவாக்கிய பெருமை அவருக்குரியது. அவரின் வலதுகரமாகத் திகழ்ந்தவர் ஆங்கில ஆசான் *S.* சிவஞானம் ஆவார். அதிபர் தம்புவின் மாற்றம் கல்லூரியின் வளர்ச்சிப்பாதையில் பெரும் தாக்கத்தினை உண்டுபண்ணியது என்றே கூறவேண்டும்.

பின்வந்த அதிபர்கள் குறுகிய காலப்பகுதிக்கு சேவையாற்றியமையினால் கல்லூரியின் வளர்ச்சியில் கணிசமான பங்களிப்பைச் செய்யமுடியவில்லை. உள்ளூர் ஆசிரியர் தொகை அதிகரித்தமையும் கருத்தூன்றிய கல்விப்போதனையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பண்ணியதென்று கூறுவதற்கில்லை. அரசியல் தலையீட்டினால் அடிக்கடி ஏற்பட்ட ஆசிரியர் இடமாற்றங்களினாலும் மாணவர் கல்விப்பாதிப்புற்று இருந்தும் தொண்ணூறாம் ஆண்டுவரை கல்லூரியின் வளர்ச்சி தடங்கலின்றி ஏற்பட்டுக்கொண்டே வந்தது.

1990ஆம் ஆண்டின் மத்தியில் லைடன் தீவில் மக்களின் இடப்பெயர்வினால் கல்லூரியின் வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டது. மக்கள் சிதறுண்டதனால் கல்லூரி வெவ்வேறு இடங்களில் புகலிடம் தேடவேண்டிய நிலைஏற்பட்டது. இதனால் மாணவர் தொகையில் குறைவு ஏற்பட்டதுடன் பௌதீக வளங்கள் இல்லாதொழிந்தன. கல்லூரி தனது பெயரில் முதலில் கொட்டடி நமசிவாய வித்தியாசாலையிலும் பின்னர் அரசடி



படிப்பகம்

www.padippakam.com



யில் ஒரு வீட்டிலும் நடைபெற்றுவந்தது. 2000 மாணவர்களையும் 50 ஆசிரியர்களையும் கொண்டுவிளங்கிய கல்லூரி 500க்கு குறைவான மாணவர்களுடனும். 25 ஆசிரியர்களுடனும் செயற்படும் நிலை ஏற்பட்டது. இது ஒரு பின்னடைவே எனலாம். மக்கள் இடம் பெயர்வுடன் நிறுவனங்களும் ஸ்தாபனங்களும் இடம் பெயர்ந்தமை தவிர்க்க முடியாததாகி விட்டது. சிறிது காலம்சாவகச்சேரியிலும் கல்லூரிநடைபெற்றது. பெயர் மாற்றமும் உருமாற்றமும் ஏற்பட்டதேயன்றிகாலத் தின் கோலத்தினால் சாலச்சிறந்த பெறுபேறுகளைப் பெற முடியவில்லை.

1966இல் மக்கள்மீண்டும் யாழ்ப்பாணம் சென்ற பின்னர் முதலில் வேலணை கிழக்கு மகாவித்தியாலயத்திலும் பின்னர் வேலணை சரஸ்வதி வித்தியாலயத்திலும் கல்லூரி நடைபெற்றது. இப்பொழுது சொந்த இடத்தில் கல்லூரி நடபெற்றுவருகின்ற போதிலும் அதனை ஒருபாதுகாப்பான சூழல் எனக்கூறமுடியாது. அச்சமும், பயமும் பாதுகாப்பின்மையும் கல்வி வளர்ச்சிக்குப் பாதகமானவை. இத்தகைய சூழ்நிலையே யாழ்.குடாநாட்டில் நிலவிவருவது தமிழ் மக்களுக்கு துரதிஷ்டமானதேயாகும். இந்நிலை நீங்கிச் சுதந்திரமும் சுபீட்சமும் ஏற்படுதற்குப் பிரார்த்திப்போம். தீவுகளின் தனிப்பெரும் கலைக்கூடமாக விளங்கிய இக் கல்லூரியின் இன்றையநிலையை மாற்ற உதவ வேண்டியது எமது தலையாய கடமையாகும். 1995ம் ஆண்டில் தன் பொன்விழாவைக் கொண்டாவேண்டிய கல்லூரி தனதுதொன்மையை இழந்து பின்னிலை அடைந்தமை தீவக மக்களுக்கு ஒரு சாபக்கேடு எனலாம்.

ஒருவளாகமாக வளரக்கூடியவசதிகள் உடைய எம் கல்லூரியைக் கட்டி எழுப்பி கவினுடையதாக ஆக்கவேண்டியபெரும்பொறுப்பு எதிர்காலதீவக இளைஞர்களுடையதோள்களிலேயேசுமத்தப்பட்டுள்ளது. இச் சவாலை ஏற்றுப்பொறுப்புடனும் சேவைமனப்பான்மையுடனும் கடமையாற்றினால் எமது கல்லூரி அன்னை சிறப்புறுவாள். வாழ்க எமது கல்லூரி.

**க. சிவராமலிங்கம்.**
B.A, Dip-in-Ed.
பழையமாணவன், முன்னாள் ஆசிரியர், ஓய்வுபெற்ற அதிபர்

**என்னிதய**

'கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடுஅல்ல மற்றை யவை"



அழியாத சீரிய செல்வம்
ஒருவற்கு கல்வியாம்

அத்தகை செல்வத்தை
அள்ளி வழங்கி

தீவகத்தின் நற்றீபமாய்
திகழும் எம் கல்லூரியின்

பழைய மாணவர் சங்க(க்)
கலாச்சாரப் பிரிவினரின்

இன்னிசை இயலாம்
கலாதீபம்-99

இனிதே நிறைவுற
என்னிதய வாழ்த்துக்கள்!

**வாழ்த்துக்கள்**

பழைய மாணவி
நாரந்தனையூர்
**Dr. கோகிலா தனபாலசிங்கம்**
B.Sc (Hons), Ph D(Chem), AIT



படிப்பகம்

www.padippakam.com



# காலத்திற்கு ஏற்ற நற்சேவை...

**வே. முருகேசபிள்ளை**
கணக்காளர்

வேலணை மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம்-கனடா செய்யும் சேவை மிகவும் அளப்பரியது. அவர்கள் காலத்துக்கு ஏற்ற நற்சேவை புரிகின்றனர். அவர்கள் சேவைமேன்மேலும் வளர்க.

நாம் செய்யும் சேவை நமக்குத்தான். மற்றவர்களுக்கல்ல. சுயநலமற்ற சேவை, அறிவு, ஆற்றல், ஆன்மிக வளர்ச்சியை கொடுக்கும். ஒருசேவை பயன்பெறுபவருக்கு ஒன்றென்றால் கொடுப்பவருக்கு பத்து நயத்தைக் கொடுக்கும். பெறுபவர் பேறு தற்காலிகம். கொடுப்பவர் பெறுவது நித்தியம்.

தொண்டுகள் செய்யும் பொழுது கீறல்களும் வருவதுண்டு. கீறல்களை பெரிதாக்குவதும். சிறிதாக்குவதும் நாம் அடைந்த பரிணாமத்தை ஒத்தது. எல்லோரும் படிப்பதில்லை. ஒவ்வொருவர் சிந்தனையும் செயலும் அவரவர் படிப்புக்குத் தக்கபடியே. கீறல்தான் வளர்ச்சிக்கு வித்திடுவது. எல்லாம் சுகமாக முடிந்தால் வளர்ச்சி குன்றிவிடும். இது உலகியல், ஆன்மீகம் இரண்டிற்கும் பொருந்தும். நாங்கள் ஒருமையில் பன்மைகாணப் பழகிவிட்டோம். பன்மையில் ஒருமைகாண்பதுதான் இயல்பு.

கனடா வாசிகளாகிய நாம் வீடு, உடை, உணவு, மருந்து இன்றி இல்லை. எமது உடன்பிறப்புக்கள் ஈழத்தில் இவையின்றி அழிக்கப்படுகின்றனர். அவர்கள் இன்னலுக்குள்ளும் நாட்டுக்காகப் போரிட்டு மடிகிறார்கள். நாங்கள் எம் களியாட்டு விழாக்கள். விருந்துகள் என்பவற்றை விட்டோ அல்லது குறைத்தோ அங்கு இன்னலுறும் எம் உடன்பிறப்புக்களுக்கு உதவ வேண்டும். நீங்கள் யாருக்குச் செய்யாவிட்டாலும் உங்கள் தாய், தந்தை, அண்ணன், தம்பி, சகோதர, உற்றார், உறவினர்களுக்குச் செய்தாலே போதும். சிறுதுளி பெருமழைஆகிவிடும். கனடா வாழ் தமிழ் மக்களே நாம் தப்பிவிட்டோம் நமக்கென்ன என்று இருக்காமல் இச்சேவைக்கு வாரிவாரி வழங்குங்கள். உங்கள் விழாக்களில் ஒரு பகுதியைக் கொடுங்கள். அதுவே போதும்.

கனடாவில் இச்சங்கம் மேன்மேலும் வளரட்டும். மற்றவர்களுக்கு உதாரணமாக விளங்கட்டும். உங்கள் சேவை வாழ்க வாழ்கவென்று வாழ்த்துகின்றேன்.

# தீவகத்தின் கலங்கரை விளக்கம்



தீவகத்தின் கலங்கரை விளக்கம்
வேலணை மத்திய மகா வித்தியாலயம்.
இக்கல்லூரி அங்குவாழும் மக்களின்
தரத்தை உயர்த்தியது, உயர்த்துகின்றது,
உயர்த்தும். இதற்கு அங்கே கல்விகற்ற,
கற்கின்ற, கற்கப்போகும்
யாவரும் ஒருங்கிணைந்து செயற்படுவோம்.

-வரப்புயர- என்ற ஔவையின் கூற்றை
நினைவுகூருவது சாலப் பொருந்தும்.
கலைவிழா கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில்,
எனக்கும் மற்றும் சக மாணவர்களுக்கும்
அறிவூட்டி மறைந்த ஆசான்களுக்கு அஞ்சலியும்,
வாழும் ஆசான்களை வாழ்த்தியும்
இங்கு கற்றகாலம் என் வாழ்க்கையின் பொற்காலம் எனக்
கூறுவதில் பெருமிதம் அடைவதோடு
கலாதீபம் சிறப்புறவும் வாழ்த்துகின்றேன்.

**வைத்திலிங்கம் சிவநாதன்**, B.Sc (Cey)

பழைய மாணவர் (1953-1963)



படிப்பகம்

www.padippakam.com

# RE/MAX

**Rouge River Realty Ltd., REALTOR**

Independently Owned and Operated

## Lloyd & Devi Sewrattan

**Sales Representatives**

**Member of Re/Max 100 % Club**

**Over 13 years Real Estate Experience**

# WHY PAY RENT?

**BUY now**

**WITH ONLY 5% DOWNPAYMENT**

**Re/Max Rouge River Realty Ltd.,**
1265 Morningside Avenue East
2nd Floor,
Scarborough, Ontario M1B 3V9

| | | |
|---|---|---|
| **CONDOS** | **from** | **$65, 000.** |
| **TOWNHOMES** | **from** | **125, 000.** |
| **SEMIS/DETACHED** | **from** | **155, 000.** |
| **BUNGALOW with Basement Apartment** | **from** | **180, 000.** |



**Bus:** **(416) 286-3993**

**Res:** **(416) 283-6158**

MEMBER OF RE/MAX 100% CLUB



படிப்பகம்

www.padippakam.com




# அன்றும் இன்றும் என்றும்




## கலாதீபம் 99 சிறப்புற வாழ்த்துகிறோம்

**ஜெயா வீடியோ**

Tel: 416-492-9915
416-724-5885

Fax: 416-492-5444

**2529 Pharmacy Avenue, Scarborough ON** (finch & Pharmacy)




படிப்பகம்

www.padippakam.com



# வாழ்த்துச் செய்தி...



கனடாவில் உள்ளவேலணை மத்திய மகாவித்தியாலயப் பழைய மாண வர் சங்கத்தினால் முதன்முதலாக நடாத்தப்படும் கலைவிழாவில் வெளியிடப் படும் 'கலாதீபம்' என்ற வருடாந்த சஞ்சிகைக்கு அப்பாடசாலையின், பழைய மாணவன் என்ற வகையில் வாழ்த்துச் செய்தியினை வழங்குகையில் பெருமையடைகின்றேன்.

குறிப்பிட்ட ஆண்டொன்றில் கலைவிழா இடம்பெற்ற செய்தியினை வரலாற்று ரீதியாக எடுத்துக் கூறுபவையாக அவ்விழாவில் வெளியிடப்படும் சஞ்சிகைகள் அமையும். எதிர்காலத்தில் 'கலாதீபம்' என்ற இவ்வருடாந்த சஞ்சிகை அதிகளவு பக்கங்களுடன் தீவுப்பகுதியின் மத்திய வரலாறு, பொருளாதாரம் பற்றிய பல்கட்டுரைகளைத் தாங்கி வெளிவருதல் வேண்டும் என்ற எனது விருப்பத்தினையும் கூறி இக்கன்னி முயற்சியினை வாழ்த்துவதில் பெரிதும் உவகையடைகிறேன்.

**ந. பேரின்பநாதன்**
முன்னாள் விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக்கழகம்

# *Message From an Old Student*



*Congratulations to the Velanai Madya Maha Vidyalayam Old Students Association on the successful organization of the first cultural event 'Kalatheepam' 1999.*

*We are all proud and fortunate to have had our lives groomed, nurtured and enriched by our Velanai Madya Maha Vidyalayam. We in turn should make sure that the present and future generation of students and teachers are provided with opportunities during good times and bad times.*

*May God bless all Velanai Madya Vidyalayam Old Students to be united and continue to do all the servile needed to our Alma mater (Foster Mother)*

**Nagaiah Kandavel**
B.Sc (Hons) M.Sc, B.Ed



படிப்பகம்

www.padippakam.com



## கனடாவில் சட்டப் பயிற்சிபெற்ற குடிவரவுச் சட்ட ஆலோசகர்

# நாகேசு சிங்கம்

- கனடாவில் அல்லது கனடிய எல்லையிலுள்ள நுழைதுறை (Port Entry) ஒன்றில், மேற்கொள்ளும் அகதிக் கோரிக்கைகளும், அவற்றுடன் தொடர்புடைய விசாரணைகளும் (Inquiries), கேட்பனவுகளும் (Hearings),
- கோரிக்கை நிராகரிக்கப்பட்டோர் சார்பில் மனிதாபிமான மற்றும் இரக்கபூர்வ காரணங்களுக்காக நிரந்தர வதிவுரிமை வழங்கக் கோரும் மனுக்கள்.
- கோரிக்கைநிராகரிக்கப்பட்டோர் விடயமாக நீதிமன்றமீளாய்வுக்கு அனுமதியும், மீளாய்வும் கோரும்மனுக்கள் (Appeals),
- குடிவரவு சம்பந்தப்பட்ட விடயங்களில் எழுத்துமூலமான சமர்ப்பணங்கள்(Written Submissions),
- நிராகரித்த தீர்ப்பு வழங்கப்பட்ட அகதிக் கோரிக்கையாளர் வகுப்பு விண்ணப்பங்களும் அதற்காதரவான சமர்ப்பணங்களும்.
- (PDRCC Applications & Written Submission in Support of Such applications).
- வீட்டுரிமையாளர் - குடியிருப்பாளர் பிணக்குகள்.
- தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் மொழிபெயர்ப்பு வேலைகள்.
- சமூகநல உதவிப்பணம் மறுக்கப்பட்டதற்கு எதிரான மேன்முறையீடுகள்

**ஆகிய இவ்விடயங்களில் உங்களுக்கு நான் உதவமுடியும்.**

எனது தொலைபேசி இலக்கம்: **(416) 759-7928**

# இரா சுப்பர் மார்க்கட்

தரமான பொருட்களை
மலிவான விலையில்,
உயர்வான முறையில்பெற
இலங்கை, இந்திய,
கனேடிய உணவுப்பொருட்கள்
உடன் கடலுணவுகள்,
இறைச்சி, கோழி வகைகள்




**FAX**

**PHOTO COPY**

## துரித பணமாற்றுச்சேவை

**(416) 264-7373**




**Erra Super Market**

2607 Eglinton Ave., East
Scarborough ON
Tel: (416) 269-2622
Video Tel/Fax: (416) 269-1716
Hotline (416) 265-4152




படிப்பகம்

www.padippakam.com



# என்னை எனக்கறிவித்த என்தமிழ்த் தெய்வமே போற்றி!





கலங்கரை விளக்கே ஆகக்
    கல்வியின் ஒளியே யாகக்
இலங்கிடும் விழியே யாக
    இயலிசை இலக்க மாக
துலங்கிடும் அறிவே ஆக
    திருவிடும் திருவே யாக
நலங்கிடும் கலா தீப
    நாயகி போற்றி! போற்றி!

உன்னையா னோதும் தோறும்
    என்னையார் புகழின் போதும்
சென்னியில் அறிஞர் கேண்மைச்
    சேவையில் உந்தன் மைந்தர்
மின்னுவர் காணும் தோறும்
    மீக்குயர் கல்விக் கோட்ட
அன்னையே உன்னை எண்ணி
    அடிபணிந் திடுவேன் தாயே!

பார்மிசை மைந்தர் வந்தார்
    பண்பிசை தந்தார் எங்கள்
ஊர்மிசை யுந்தன் பாதம்
    ஒவ்வொரு நாளும் காணும்
தேர்மிசை கல்வி கண்ட
    திருவிலூர் மக்கள் வந்தார்
சேர்விலும் தாயே உந்தன்
    திருவிழாக் காணுகின் றோம்!

ஐம்பதுன் அகவை தன்னில்
    அம்மநின் பாதம் தொட்டு
கும்பிடும் தோறும் எந்தன்
    குருதியின் ஓட்டம் விஞ்சி
அம்பிடப் பாயு துள்ளம்
    அணிகல விளக்காய் ஊரார்
நம்பிடும் தாயே எந்தன்
    நாளெலாம் நீயே வராய்!

தீவகத் தாயே உன்னைத்
    திருவுலா மாட மாக்கிக்
காவகம் செய்தோர் கூடம்
    காத்தவர் கல்வி தந்தோர்
சேவகம் செய்தோர் உந்தன்
    திருவிழாக் கலா தீபம்
பாவகம் தந்தோ ரென்றுன்
    பதியுளார் பரவ நின்றோம்!

வேலணை மத்திய மகா
    வித்தியா அணங்கே உந்தன்
கோலமா யார்க்கும் அகவை
    குன்றத்தில் ஐம்ப தாகக்
சீலமா யெழுச்சி மக்கள்
    சிந்துர விழாவுஞ் சேர
தூலமா யுறையுந் தீவுத்
    தேவியுன் கொற்றம் வாழி!

வாழிநீ கலாபத் தீபம்
    வாழிநீ கல்வித் தூபம்
வாழிநீ அறிவுக் கோட்டம்
    வாழிநீ தமிழின் ஊற்றம்
வாழிநீ அகவை ஐம்பத்
    தாகிய போதில் தாயே
வாழிநீ வாழி எங்கள்
    வைகறைக் கதிரே வாழி!

**தீவகம் வே. இராஜலிங்கம்**
பிரதம ஆசிரியர், நம்நாடு



படிப்பகம்

www.padippakam.com




# தமிழர் புனர்வாழ்வுக் கழகம், கனடா

## Tamils Rehabilitation Organization, Canada

## Organization de Rehabilitation des Tamouls - Canada

861 Broadview Avenue, Toronto, ON., Canada, M4K 2P9

Tel: (416) 466-9624 • Fax: (416) 463-2620


செப்டம்பர் 23, 1999

**வேலணை மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் - கனடா**
(VMMVOSA)

அன்புடையீர்,

இவ்வாண்டு "கலாதீபம் 99" என்ற பெயரில் கலைவிழா ஒன்றினை 1999ம் ஆண்டு அக்டோபர் மாதம் 9ம் திகதி நடத்தவிருக்கின்றீர்கள் என்பதனை அறியும் போது மகிழ்ச்சியடைகின்றோம். முன்பு தங்களது பழைய மாணவர் சங்க ஒன்றுகூடல் நிகழ்ச்சிகள் மூலம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்குப் பண உதவி வழங்கியமை என்றும் நினைவில் இருக்கும். "கலாதீபம் 99" நிகழ்ச்சி மூலமாகவும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்குப் பொருளுதவி செய்யத் திட்டமிட்டுள்ளீர்கள் என்ற வார்த்தை காதில் தேனாக இனிக்கிறது. இன்னலுறும்றும் ஈழத்தமிழர் துயர் துடைக்கத் தாங்கள் மேற்கொள்ளும் எந்த முயற்சியும் பராட்டிற்குரியதே.

"கலாதீபம் 99" சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நடைபெற என்றென்றும் எமது வாழ்த்துக்களும், நல்லாசிகளும் உரித்தாகுக. "கலாதீபம்" காலவரையறையின்றித் தொடர வேண்டும், தங்கள் பணி சிறக்கவேண்டும், என வாழ்த்துகினறோம்.

வணக்கம்,

கா. சிவசேகரன்
உபதலைவர்.



படிப்பகம்

www.padippakam.com



# Lead Kindly Light, Lead thou us on!



*MY HEARTIEST GREETINGS TO ALL OF YOU, ALUMNI OF VELANAI GOVERNMENT CENTRAL COLLEGE IN SRI LANKA, NOW IN "THE LAND OF THE MAPLE LEAF"….. A HOME FORM HOME!*

*It is my distinct pleasure to respond to the request of your president, Mr. Elancheliyan for my reminiscences of YOUR ALMA MATER for inclusion in the* ***"THE KALA THEEPAM-1999"*** *the Golden Jubilee souvenir.*

*I was a teacher at Velanai M.M.V. for ten years from 1961 through 1971, one of the sunny periods of the school as well as mine as a teacher.*

*Looking backward is a good design to living forward. Your Alma Mater has rendered nearly 54 years of service to the community. For an institution 54 years does not mean it is old. It is still young and youthful and has many, many miles to go and a lot of grand things to achieve. Young and youthful as it is, its achievements thus far by common consent of competent critics have been fantastic; fascinating; one that could kindle the envy of older institutions! This is because of the fact that students hailing from the villages in the Kayts electorate are a class by themselves; gifted, talented; and always perspire hard and forge ahead.*

*For all of us to look back, Poet Bharathiyar's song is an eye-opener. The song I give below has a beautiful ring and relevance to us and awakens our thoughts towards our homeland our forebears, our roots and to all that, that have nurtured us and made us what we are today...dynamic personalities!*

***And now to Bharathiyar's song:***

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே-அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழந்து
முடிந்ததும் இந்நாடே-அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே-இதை
வந்தனை கூறி மனத்திலிருத்தி, என்
வாயுற வாழ்ந்தேனோ-இதை
வந்தே மாதரம், வந்தே மாதரம்
என்று வணங்கேனோ.

*I need not labour hard to write a commentary on this song. It merely reminds us of our roots; our forebears; the ideas and ideals they lived for and how we could transmit that heritage beneficial to mankind. Incidentally this also reminds me of poet Robert Bridges who mused thus:*

*"I love all beauteous things,*
*I seek to adore them;*
…………….
…………….
*I too will something make*
*And Joy in the making."*

*The genesis of Velanai Centreal later known as Velanai M.M.V. and now metamorphosed into Sir Waitilingam Duraiswamy M. M.V. in recognition of the leading role that Sir W.D had played as a representative of the peo-*



படிப்பகம்

www.padippakam.com



*ple and in sitting the school at Velanai with the advent of free education fathered by the then Minister of Education, Dr.C.W.W. Cannangara. There were, of course a number of local Hampdens-too numerous to mention here– Chief of who was a trail blazer, an outstanding teacher and a commutity worker, the late Saravanaiyoor Pundit Maruthainer, J.P. There was also another schoolmaster of Velanai, Late Namasivayam Upathiyayar, who had served for many years as the sheet anchor of the Parents' Association serving as an indispensable link between the school and the community. To all the above and TO MANY OF THE UNNAMED, UNSUNG HEROES, THE SCHOOL & THE COMMUNITY OWE A DEBT!*

*Next to the founding fathers come Late Mr. A.K.Kandiah, B.A (Lond) P.G.Trd., the Founder Principal whose coinage is the beautiful and lofty "College Motto". Mr. Kandiah was succeeded by Late Mr.V.Thampoe, a Double Science Graduate of the Lond. University. Both of them personified in every way the personality of an ideal teacher and School Head. From 1945 to 1972, both of them in succession worked with a vision, mission and a mandate and piloted the school through various vicissitudes and set in motion an educational tradition worthy of any school. Their era was the golden era of the school and it was my fortune to have been of the staff during that sunny period along with a galaxy of teachers who in an exemplary manner ably assisted the administration and the educational program. I think that most of you in the Canadian Association belong to that period or the seventies and early eighties during the era of Principals like A.T. Sabaratnam, K.Sivasithamparm, J.S. Ariyaratnam, C.Gunapalasingam, S. Rajanayagam and others who too hard sincerely toiled for the success of the grand design on the Kandiah-Thampoe Era!*

*The proudest record of this young institution within ten years of its establishment was the appointment of a number of its old students who soon after graduation joined the staff and the most outstanding of them were Messrs: E. K.Nagarajah, B.A., T.Sivanesapillai, B.A., Ms. V. Shanmuganathan, B.A., Ms.N.Sothivetpillai, B.A., Late K. Gopalapillai, B.Sc., Late P. Ketharanathan, B.Sc., And Late S. Shanmuganathan, B.Sc., More came in with the passage of time. The last two, during the end of their career adorned the Principal's chair with distinction. Even the present principal, Mr.K. Kanesalingam, B.A., an Alumni of the school and is serving the school as best as he could in the face of many odds.*

*Velanai MMV being a co-ed school, always needed the services of one or more lady teachers. During the period I was at Velanai MMV, Ms. Thirumakal Ketharanathan, B.A., Dip-in-Ed., in addition to her duties as a teacher of Mathematics, Economics and Political Science, served as mentor and mother to all the girls working with a rare dedication for the progress of the school. She was a class by herself and served all the Heads of the school with great acceptance.*

*There was another Lady teacher, Miss. S.Kandiah of Mandativu, a specialist in the teaching of Tamil and Hinduism and served the school winning the admiration of all right up to her retirement. She is now at Nallur enjoying her blest retirement.*

*There was another distinguished teacher during our time, Late Mr. S.Rasiah, B.A., AND A PUNDIT. A senior-most teacher, he served the school as its Deputy Principal too and was all along the Head of the Tamil Department. He was a fearless fighter for a principle and was the back-bone of the school.*

*In the sphere of Aesthetics, Music and Drama, there was Mr. Chandrasekarm, a Kala Pooshanam and one of the first Vidwans in Music to come from the Annamalai University. Music is still in his blood!*

*How can anyone forget Late S.Kanthan of Karaveddi, the school's Office Aide! Everyone depended on 'KANTHAN'S KARUNAI'. A very loyal servant of the school, he was a 'MAN FRIDAY' to all! The school was literally his home and served the school for over two dec-*



படிப்பகம்

www.padippakam.com



*ades. He was a confident of every teacher and Principal of the school. He knew more above everyone else than even the Principal! He was indeed a loyal servant of the school, even more loyal than 'Me'!*

*The saga of old students is a very proud one. Right here in Sri-Lanka many are serving with distinction as University Lectures, Doctors, Engineers and Accountants. A good number of teachers, School Heads, Educational Administrators along with many in the public and business sectors are old students of Velanai MMV. Hardly a weak passes without my meeting an Alumni of the school doing well in life! This is one of the joys a teacher has more than anything else!*

*It should be understood that the rise and fall of a school depends on its teachers. 'THE TEACHER IS MY SCHOOL' was the answer of a student when some one asked him for the name of the school that taught him!*

*The best of educational reforms may be doomed if teachers fault.*

*A lot of new ideas are coming into the educational system to meet the challenges of the next century but if the profession remains lukewarm, success is hard to come by. The inevitably answer then is 'private tuition' which everyone condemns without finding a remedy. Already we have the saddest feature in our schools of imperfectly educated boys and girls without aim or ambition leaving school at 14 or before to enter dead-end occupations thus condemning themselves to lives of uncertainty and insecurity. THIS UNFORTUNATE PLIGHT HAS BEEN OURS OR YOURS, THANKS TO OUR TEACHERS! THEY WERE OUR SCHOOL AND NOT THE SCHOOL!*

*EDUCATION, whatever experts may say ultimately boils down to the development of the whole man. Recent trends everywhere are disturbing not only in the third world but also in developed lands as well like the U.S.A. with trigger-happy lads behaving as petty tyrants. This is rather disturbing, a sign of maladjustment, lack of sensitiveness to right and wrong and mind-complexes. To Ruakin, "THERE IS NO WEALTH BUT LIFE". Schools like Velanai M.M.V. must aim at the transmission of cultural, social and spiritual heritage of the human race, to produce fine character, Balanced personality, discrimination intelligence and appreciation of the right codes of human behavior beneficial to mankind. THAT HAS BEEN THE DREAM OF THE FOUNDERS OF YOUR ALMA MATER. What is the earthly use of gaining a kingdom at the expense of losing one's soul?*

*While I am as elated as anyone that the Alumni of Sir. W.D.M.M.V, has ambitious plans for the development of their Alma Mater. I express my SINCEREST WISHES TO EVERYONE OF YOU and May You all flourish and prosper and continue to involve yourselves in the progress and welfare of Your Alma Mater. May the kindly light lead you all to produce in God's Name. Out with it, then! Life is no brief candle: hold it for the moment: burn it brightly before handing it on to those who come after you.*

*Thank-you!*

**T.N. PUNJAKSHARAM**

**Teacher, Velanai MMV –1961-1971**

இன்னறுங்கனி சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்து அறிவித்தல்

-பாரதியார்-



படிப்பகம்

www.padippakam.com




கலாதீபம் 99 சிறப்பாக நடைபெற எமது வாழ்த்துக்கள்

# M வீடியோ மாருதி

கலையம்சம் மிக்க தரமான வீடியோ தயாரிப்பாளர்கள்

Professional Video Productios * International Video Conversions

**VEL KIRUBA**

**AUDIO, VIDEO, CD, VIDEO-CD**

புதிய ~ பழைய தமிழ் திரைப்படங்கள் விற்பனைக்கும் வாடகைக்கும்

VIDEO, CD Players மலிவு விலையில்

**ஸ்ரீ அன் பிறதர்ஸ்**

1843 Lawrence Ave. E.
Scarborough, ON
M1R 2Y3, Canada
(Lawrence & Pharmacy)

Tel: (416) 751-2060
(416) 752-9960
Fax: (416) 751-7451

# YARL'S SUPER STORE

Canadian, East-West Indian Grocery Fresh Fish, Meat & Vegetables

இலங்கை இந்திய பலசரக்குச் சாமான்கள்
உடன் மரக்கறி வகைகள்
பழ வகைகள், பூசைச் சாமான்கள்...
உடன் மீன் வகைகள்
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட

ஏழு நாட்களும்
பங்கு ஆட்டு இறைச்சி
கிடைக்கும்

* விளைமீன் * ஒட்டி * ஓரா * உயிர் நண்டு மற்றும்...

மீன் வகைகள் உட்பட அனைத்துப் பொருட்களும் மிக மலிவாக கிடைக்கும் ஒரே இடம்

**ஓடர்களுக்கு பலகார வகைகள்**
**எந்நேரமும் கிடைக்கும்!**

**(416) 923-9806**

**607A Parliament Street Toronto ON M4X 1P6**

**யாழ்ஸ்**
**சுப்பர் ஸ்ரோர்**




படிப்பகம்

www.padippakam.com


# ஐம்பதைப் பூர்த்திசெய்த அன்னை

**அங்குரார்ப்பணம்**

இலவசக் கல்விக் கொள்கை பெற்றெடுத்த அன்றைய தேர்தற் தொகுதியின் அரும்பெரும் புதல்விதான் இன்றைய வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயம் 1945நொவம்பர் மாதம் எம்அன்னையின் மலர்வின்போது அவளுக்கு இடப்பட்ட பெயர்தான் வேலணை மத்திய கல்லாரி. இப்பெயர் பின்னர் இரு தடவைகள் மாற்றம் பெற்றது.

**மத்திய கல்லூரிக் கோட்பாடு**

தொழிற் கல்வி உட்பட ஒருங்கிணைந்த கல்வி புகட்டலுக்கான திட்டத்தின் கீழ் ஆரம்பத்தில் 51தேர்தல் தொகுதிகளை கொண்ட இலங்கைக்கு, தொகுதிக்கொரு மத்திய கல்லாரி ஆரம்பிக்கப்பட்டது. இக்கோட்பார்ட்டின் அடிப்படையில் உருவானதே இன்றைய எமது மத்திய மகா வித்தியாலயம். இதன் ஸ்தாபக விழா மிகவிமரிசையாககொண்டாடப்பட்டதொன்று. இவ்விழாவிற்கு இலவச கல்வியின் தந்தை கௌரவ C.W.W கன்னங்கரா அவர்கள் வருகை தந்து கௌரவித்தார்கள்.

**ஆரம்ப ஆசிரியர்கள்**

எம் மகாவித்தியாலயம் 5 ஆசிரியர்களுடனும் 52மாணவர்களுடனும் ஆரம்பிக்கப்பட்டதொன்று. ஆரம்ப அதிபர் என்ற பெருமையை திரு. ஏ.கே. கந்தையா அவர்கள் பெற்றார்கள். இதேவேளை கடந்த 52வருடங்களில் பல அதிபர்கள் சேவையாற்றிய போதும் மகாவித்தியாலயத்தின் புகழ்பூத்த ஆதிபர் என்ற பட்டத்தை அமரர் தம்பு அவர்கள் தட்டிக்கொண்டார்கள். மகாவித்தியாலய ஆரம்பத்தில் அதிபருக்கு துணைநின்று உப தளபதிகளாக விளங்கிய நான்கு ஆசிரியர்களான திருவாளர்கள் திருநீலகண்டன், கே.எம்.தம்பையா, என்.கந்தையா, செல்லத்துரை ஆகியோரின் சேவைகள் இன்றும் போற்றுதற்குரியது.

**ஓட்டுக்குடித்தனமும் அபலை நிலையும்**

எம் மகாவித்தியாலயம் தொடங்கி 10 வருட காலமாக ஆரம்ப பாடசாலையான வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஓட்டுக்குடித்தனம் நடாத்தியது. மாணவவிடுதிகள் தனிப்பட்டோர் வீடுகளில் செயற்பட்டன. ஒட்டுக் குடித்தனத்திற்கு ஒத்தாசை புரிந்த சைவப்பிரகாசத்திற்கு நாம் என்றும் நன்றிக்கடன் உடையவர்களாவோம். எம் மகாவித்தியாலயத்திற்கு புதிய கட்டடத்தொகுதி பிரதமர் சேர். ஜோன் கொத்தலாவலை அவர்களால் 1955இல் திறந்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து எம் அன்னை புதுப்பொலிவுற்றாள். நாட்டின் அனர்த்தங்களால் 1991இன் பிற்பகுதியில் ஏற்பட்ட இடப்பெயர்வுகள் எம் அன்னையை நடமாடும் அபலை ஆக்கின. தன் சிதறிச்சென்ற மாணவச் செல்வங்களை இன்னும் அவளால் ஒன்றிணைக்கமுடியவில்லை. 1996ஆரம்பத்தில் எதிர்பார்த்த பொன்விழா வைபவங்கள் இன்னும் தடைப்பட்டே செல்கின்றன.

**கல்வி வாய்ப்பில் மாற்றம்**

சாதாரணமாக தமிழ்மொழி மூலம் சமய இலக்கிய துறைசார்ந்த கல்விவாய்ப்பை பெற்றிருந்த தீவக மக்கள் எம் மத்திய மகாவித்தியாலயத்தின் தோற்றத்தால் ஆங்கில மொழிமூலம் கணித விஞ்ஞான துறைகள் சார்ந்த கல்வி வாய்ப்பை பெறலாயினர்.

**புலமைப்பரிசில் பெற்றோர்**

ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் பெற்ற மாணவர்கள் தம் தேர்தற்தொகுதியை பிரதிநிதித்துவம் செய்யும் மத்திய கல்லூரியில்தான் தம் கல்வியை தொடரவேண்டும். விடுதி வசதி பெற வேண்டும் என்றநிலை அன்று இருந்தது. இதனால் முன்னணி மாணவர்களின் இணையமாக மத்திய கல்லூரி விளங்கியது. எமது கல்லூரிக்கு சப்த தீவு மக்களையும் ஒரு குடும்பமாக்கிய பெருமையும் உண்டு.

**பெருமை பெற்றவர்கள்**

எம் கல்லூரி ஆரம்பித்து முதன் முதலாக சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் (SSC) திருவாளர்கள் ராசதுரை, நாகராஜா, குருசாமி ஆகிய மூவர் சித்தியடைந்தமை அன்றைய காலத்தில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது. இவர்களைத் தொடர்ந்து வந்த 'தம்பர் பொற்கால' மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு பொறியியல், மருத்துவ, பிற துறைகளிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு பிரகாசித்தமையும் எம் நினைவை விட்டு நீங்காதவை.



படிப்பகம்

www.padippakam.com


**நாவன்மையும் பாராளுமன்ற முறைமையும்**

உயர் வகுப்பு மாணவர்களிடையே நாவன்மையை ஊக்குவிக்கவும் சுதந்திர இலங்கையின் பாராளுமன்ற நடைமுறையை அறிமுகப்படுத்துமுகமாகவும் மாணவர்களின் பாராளுமன்றம் கூட்டப் படும் நடைமுறை கல்லூரியின் ஆரம்பகாலத்தில் 1955வரை கைக்கொள்ளப்பட்டது. திரு. திருநீல கண்ட ஆசிரியர் இதன் சூத்திரதாரியாக இருந்தார். மாணவர்கள் ஆளும்கட்சி, எதிர்க்கட்சி என பிரிக் கப்பட்டு, பிரதமர், அமைச்சர்கள், எதிர்க்கட்சி முக்கியஸ்தர்கள் என்ற பாத்திரங்கள் பெற்றனர். விவாதங்கள், சுவை மிக்கதாக இருந்தமை அக்காலமாணவர்கள் மூலம் அறியப்படுகிறது.

**நாடகத்துறை**

வித்துவான் சிவப்பிரகாசம் போன்றோரின் சேவையால் எம் கல்லூரி ஆரம்ப காலத்தில் நாட கத்துறை விற்பனர்களை உருவாக்கியது. திருவாளர்கள் சதாசிவம், ஆயுள்வேதடாக்டர் வினாசித்தம்பி போன்றோரின் நாடகங்கள் கிராம மட்டத்தில் இன்றும் பேசப்படுபவை.

**இல்லப் போட்டிகள்**

எம் மகாவித்தியாலயம் இல்லப்போட்டிகளை பெருவிழாவாக நடாத்திவருகிறது. ஆரம்ப காலத்தில் கல்லூரியின் அங்குரார்ப்பணத்துடன் தொடர்புடைய பிரமுகர்களை கௌரவிக்குமுகமாக சபாநாயகர் துரைசுவாமி இல்லம், கன்னங்கரா இல்லம், சாண்டிமன் இல்லம் என்ற மூன்று இல்லங் களை கொண்டிருந்தது. இல்லப்பெயர்கள் பின்னர் பலமுறை மாற்றத்திற்குள்ளாயின. தற்பொழுது வள் ளுவன், கம்பன், இளங்கோ, பாரதி என்ற பெயர்களில் இருந்து வருகின்றன.

**சாரணியம் சிரமதானம்**

எமதுமத்திய மகா வித்தியாலயத்தின் சாரணிய வளர்ச்சியோடு என்றும் அடையாளம் காணப் பட்டவர் ஆசிரியர் அமரர் வரதலிங்கம் அவர்கள். பல சிரமதானப் பணிகள் மகாவித்தியாலயத் தில் இடம்பெற்றன. 1974-75களில் இடம்பெற்ற பல லட்சம் பெறுமதி மிக்க விளையாட்டுத்திடல் அமைப்பதற்கான சிரமதானப் பணி அவற்றில் முன்னிடம் பெற்றதொன்று. இதற்கு இலைமறை காயாக உதவிய ஆசிரியர் E.K. நாகராஜா அவர்கள் மாணவர் பெற்றோர் நினைவில் என்றும் நீங் காதவர்.

**உயர் கல்வி அடித்தளம்**

பல்கலைக்கழக புதுமுக பரீட்சைக்கு உரிய உயர்கல்வி வசதியை அளிக்கும், நிலை எமது வித்தியாலயத்திற்கு அதன் ஆரம்ப தசாப்தத்தில் இருக்கவில்லை. உயர் கல்விக்காக நெல்லியடி மகா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளிற்கு போக வேண்டிய நிலையே அப்போதைய மாணவர்களுக்கு இருந்தது. அப்பாடசாலைகளிற்கு எம் மாணவர் பெருமை சேர்த்தனர். தொடக்கத் தில் உயர்கல்விக்கான அடித்தளம் எமக்கு அமையாதகுறை பின்னர் நிவர்த்திக்கப்பட்ட போதும் மாணவர்களின் நகர்புற பிறபாடசாலை நோக்கி புலம்பெயரும் பழைய மரபை மாற்றுவது கடினமாகவே இருந்தது.

**ஒளியே வழிகாட்டு**

எமது கல்லூரியின் இலட்சிய வாசகம் 'கருணை ஒழியே வழிகாட்டு' (Lead Kindly Light) என்பதாகும். எல்லாம் வல்ல அந்தப்பரம் பொருளான பேரருட்சுடர் தான் திக்கற்று திசைமாறும் எம் மாணவர் சமுதாயத்தை வழிநடத்திச் செல்லவேண்டும்.

**செ. அம்பலவாணர்**

பழைய மாணவர்



படிப்பகம்

www.padippakam.com



# WATSA

## வோட்டலூ பல்கலைக்கழகத் தமிழ் மாணவர் சங்கம்

## வழங்கும் வாழ்த்துச் செய்தி


தமிழ் மாணவர் சங்கம்
மாணவர் ஒன்றியம்
வோட்டலூ பல்கலைக்கழகம்
வோட்டலூ ஒன்ராறியோ
கனடா

Tamil Students Association
Federation of Students
University of Waterloo
Waterloo Ontario
Canada


*புரட்டாதி 24, 1999*

**தீ**வகத்தின் தன்னிகரில்லாத வேலணை மத்திய கல்லூரிக்கு கனடாவில் விழா எடுப்பதை அறிந்து, வோட்டலூ பல்கலைக்கழக தமிழ் மாணவர் சங்கத்தின் சார்பில் வாழ்த்துச்செய்தி அனுப்புவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

வேலணை மத்திய கல்லூரியின் பழைய மாணவர்கள் உலகமெல்லாலாம் பரந்து வாழ்ந்தாலும், முதல் முறையாக கல்லூரிக்கென பழைய மாணவர் சங்க கனடாக் கிளையினரால் விழா எடுப்பதையிட்டு, கல்லூரியின் பழைய மாணவன் என்ற முறையில் மிகவும் பெருமை அடைகின்றேன்.

உங்கள் சங்கம் பிறந்த மண்ணை பிரிந்து கனடாவில் பரந்து வாழும் பழைய மாணவர்களை இணைக்கும் ஒருபாலமாக அமைகின்றது. வேலணை மத்திய கல்லூரி வளர்த்து வரும் முத்தமிழான இயல், இசை, நாடகத்தை எம் மக்களிடத்தே அழியவிடாது நடாத்தப்படும் கலாதீபம் என்ற இந்த கலைவிழா, கல்லூரியின் பழைய மாணவர் சங்க கனடாக் கிளையினரால் ஒழுங்கமைக்கப்பட்டு நிறைவேற்றபட்ட பல நலன்புரிச் செயற்பாடுகளுக்குச் சிகரம் வைப்பதாய் அமைகின்றது.

வேலணை மத்திய கல்லூரிக்கு மட்டுமல்லாது, தீவக மக்கள் அனைவருக்கும் பெருமையும் சிறப்பும் தேடிக் கொடுக்கும் கலாதீபம் சிறப்புற எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.


**அருணா சுந்தரம்பிள்ளை**
செயலாளர்
வோட்டலூ பல்கலைக்கழகத் தமிழ் மாணவர் சங்கம்

a2suntha@uwaterloo.ca
www.csclub.uwaterloo.ca/clubs/watsa




படிப்பகம்

www.padippakam.com


வட அமெரிக்காவில் மிகப்பெரிய தமிழர் நிறுவனம்

# உதயாஸ்

## சுப்பர் மார்க்கட்




UTHAYA'S
VIDEO-AUDIO BAR

உங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள், வாசனைத் திரவியங்கள், மற்றும் இலங்கையில் தயாராகும் பழஜாம், பழரசங்கள், பனம் பொருட்கள் அத்துடன் தென்னிந்திய, மேற்கிந்திய கனேடியப் பாவனைப் பொருட்களையும் பெற்றுக்கொள்ள சிறந்த நிறுவனம்.

உடன் மரக்கறி வகைகள், பால், பழ வகைகள், ஆட்டிறைச்சி, கோழி இறைச்சி, மீன் என்பவற்றையும் பெற்றுக்கொள்ளலாம்.

இலங்கை, இந்திய பத்திரிகைகள், சஞ்சிகைகள் உடனுக்குடன் கிடைக்கும்.

**5010 Steeles Ave. West, Unit 14**
**Etobicoke (Steeles & Kipling)**

**Tel: (416) 740-7971**
**Fax: (416) 740-8568**




படிப்பகம்

www.padippakam.com



NITHIYAKALYAANI

# நித்தியகல்யாணி

## ஜுவர்லஸ் லிமிட்டட்




ஆபரணங்கள் அணிவகுக்கும் அழகு தேசம்

**Tel: (416) 463-3609**
**Fax: (416) 463-4848**

**1487 Gerrard Street East**
**Toronto ON M4L 2A4**



படிப்பகம்

www.padippakam.com



Century 21

# S.K. BALES

(Sales Representative)



## Affiliate Realty Inc.

11721, Sheppard Ave., East

- விரும்பிய இடத்தில் விரும்பிய விலையில் குறைந்த வட்டி வீதத்தில் உங்களுக்கு வீடு தேவையா?
- உங்கள் வீட்டின் பெறுமதியை இலவசமாக மதிப்பிட வேண்டுமா?
- உங்களுக்கு வியாபார நிலையம் தேவையா?

**எதற்கும் கவலையை விடுங்கள்.... உடனே அழையுங்கள்....**

**S.K. BALES**

Bus:(416) 281-4900 Res: (416) 265-3920

Pager (416) 281-4900 (24 hrs thru office)

கடந்த 6 வருடங்களுக்கு மேலாக கனடா வாழ் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் நிறைந்து
பல ஆயிரக்கணக்கான தமிழ் மக்களுக்குச் சாரதி அனுமதிப்பத்திரத்தை எடுத்துத் தந்தவர்.
கடமை கண்ணியம் கட்டுப்பாடு திறமை நிறைந்த பொறுமையின் சின்னம்.

# அம்மன் சில்க் இங்



Tel: (416) 461-6401
Fax: (416) 461-2697

கூறைச் சேலை
பனாரஸ்
ரங்கோலி
கோலம்
கொப்பெர்
காயத்திரி
ஆர்ட் சில்க்
சுரிதார்



1608 Gerrard St. East Toronto

# அம்மன்ஸ் நகைமாளிகை



நீண்டகால யாழ்ப்பாண
அனுபவம் வாய்ந்தவர்களின்
கைவண்ணத்தில்
உருவாகும் படைப்புகள்!

- தாலிக்கொடி
- அட்டியல்
- சங்கிலி வகைகள்
- பதக்கங்கள்
- கைச்சங்கிலிகள்
- தோடு வகைகள்
- வளையல்கள்
- சங்கீதா காப்புகள்
- தங்க கால்சங்கிலிகள்

யாவற்றையும்
ஓடருக்கும்
உடனடியாகவும்
பெற்றுக் கொள்ளவும்!

சீக்கோ, சிற்றிசன் மணிக்கூடுகளின்
விநியோகஸ்தர்கள் அம்மன்ஸ் நகைமாளிகை!

1608 Gerrard St. East Toronto

நகரின் மத்தியில்
ஜெரார்ட் இந்தியா பஜாரில்
அம்மன்ஸ் நகைமாளிகை

(416)
461-6217



படிப்பகம்

# RELATIONSHIP BETWEEN ELECTRICITY AND CHEMISTRY



## Electricity + Chemistry -> Electrochemistry

*The purpose of this article is to introduce the subject electrochemistry as it applies to the field of electroplating. Electrochemistry uses of electrical measurements on a chemical system for analytical purpose. Also refers to use of electricity to drive a chemical reaction or use of a chemical reaction to produce electricity. The passage of electrical current through an electrolyte is called electrolysis it is characterized by the flow of ions.*

## What is an Electroplating?

*Electroplating is a process for coating a metallic or non-metallic substrate with a metallic coating through the use of a combination of electricity and chemical solution that includes the ions of the metal in the coating. Electroplating is the most common metal finishing process. It utilized a combination of a chemical solution formulated to contain ions or complexes metal ions plus a DC electric current to convert the metal ions in the solution is solid metal atom on the surface of the substrate that that DC current is applied to. Electroplating offers the advantages of being inexpensive. It requires relatively inexpensive equipment, is comparatively easy and safe to do, and is easy to do in bulk quantity.*

## Why metals to be deposit?

*Different metals have different typical properties. Plated and chemically applied coatings are typically selected to enhance one of the following properties: value (silver/gold), corrosion resistance, appearance, solder ability, electrical resistance, electrical conductivity, vibratory bonding, abrasion resistance, and electroforming of a product. Single metals and alloys (combination of metals) are used in both non-electronic and electronic surface. For example, cobalt-based alloys are plated on computer bard disk and nickel-based alloys are deposited on computer heads. Moreover, data processing, communication and other electronic equipment all depend on electrical contacts. Procious metal electroplate particularly gold and gold alloys are widely uses since they have good electrical conductivity and resist corrosion and the formation of oxide.*

## How does it work?

*This diagram shows the basic components of plating cell.*





Figure 1

*The electrode shown on the left consists of $A^+$ metal, which calls as anode, where electrons leave the anode. When an atom of $A^+$ metal loses electrons, it dissolves in the tank as an A ion. This electrode is considered positive (anode) since the liberated electrons removed by the rectifier. The generator or rectifier (Coverts AC current to DC) supplies current, which consists of electrons flowing continuously in one direction. The electrons enter the tank (cell) at the work piece or cathode, and leave the tank at the anode. Within the solution itself, positive ions move toward the cathode and negative ions move toward the anode. The positive ions are called cations because they migrated toward the cathode, and the negative ions are called anions, because they migrate toward the anode. The exchange of electrons at the anode and cathode or total flow of current at each electrode is always equals.*

*In the external circuit outside of the plating tank, metallic copper conductors are normally used to carry the current. The electrons move through the copper. The mechanism of transfer of electricity through the electrolyte is quite different. The current is carries by $A^+$ and $B^+$ ions move between the two electrodes. This cathode, which represents the part being plated, is supplied with electrons from the external circuit.*

*During electroplating, electrical current is*

www.padippakam.com


*simply the pass the electrons. Thus, by connecting the metal parts to the negative terminal of rectifier, which supply electrons to the surface of the metal part, and the electrons react with and A ion. Then, the electrons are required to neutralize the positive charge on the metal ion in solution, and finally the metal plates on the surface of the part. The amount of metal plated is about the same as the amount of* $A^+$ *dissolved at the anode.*

*Amount of the metal deposit on the parts depend on the current flow. The rate of flow of current, expresses in amperes, in equal to the pressure divided by the resistance. The driving force or pressure is expresses in volts and resistance in ohms. The final equation is represented by* $I=E/R$. *Normally, the plater is not concerned directly with the resistance because he/she cannot readily control this factor. However, he/she can readily vary the voltage by turning the dial on the rectifier and observing the voltmeter. By increasing the pressure or voltage, he/she can increase or control the amount of current flowing through a plating tank, as recorded on the ammeter. Most plating processes require and applied voltage of 6 to 12 volts, and the amount of current in ampere per square meter or ampere per square foot of area on the work piece will vary over a wide range, depending on the plating process.*

*In closing, it should be emphasized that a general understanding of electrochemical principles is very helpful in understanding what happens in different electroplating process.*

**MISS KOMATHY SELVARAJAH**

*(B.A. Sc.)*

*Chemical Engineering-Environmental Engineering*

# OUR FORMER PRINCIPALS

| | | |
|---|---|---|
| Mr. | A. K. Kandiah | (1945 – 1950) |
| Mr. | V. Thampoe | (1951 – 1962) |
| Mr. | A. J. Sabaratnam | (1962 – 1964) |
| Mr. | Sivasithamparam | (1965 – 1966) |
| Mr. | J. S. Ariyaratnam | (1967 – 1971) |
| Mr. | V. Ponnuthurai | (Few months) |
| Mr. | C. Rasanayakam | (1972 – 1974) |
| Mr. | Thiagarajah | (Few months) |
| Mr. | S. Gunabalasingam | (1974 – 1983) |
| Mr. | K. Rasiah | (Few months) |
| Mr. | M. Sivarajaratnam | (1984 – 1985) |
| Mr. | S. Shanmuganathan | (1985 – 1990) |
| Mrs. | T. Ketharanathan | (Few months) |
| Mr. | P. Ketharanathan | (1990 – 1994) |
| Mr. | S. Kalatharan | (1994 – 1995) |



படிப்பகம்

www.padippakam.com




*New*

# Quality Bread Bakery Plus




**Different Kinds Of Breads, Buns, Cakes, Muffins & Much More**

**(HighLand Farmஇற்கு முன்னால்)**

**For your parties you can order Short Eats**

எங்கள் தயாரிப்புக்களை ஒருமுறை
சுவைத்துப்பாருங்கள். என்றென்றும் விரும்புவீர்கள்....

உங்கள் கொண்டாட்டங்களுக்குத் தேவையான
சிற்றுண்டிகளிற்கும் அழையுங்கள்.

பாண் வகைகள், வகையான பண்கள்,
கேக் வகைகள், றோல்ஸ் இன்னும் பல...

*Unbeatable!!!*
*Unbelievable!!!*

*Low Low Low Prices*

**880 Ellesmere Road Unit #3**
**Scarborough Ontario M1P 2W6**
**(Kennedy & Ellesmere)**
**Tel: 416-292-9100**

**பானு ஜுவலறி இங்**



எந்த
வைபவங்களுக்குமான
அசல் 22 கரட்
சிங்கப்பூர்
தங்க நகைகள்
மொத்த விலையில்...



*Singaporean 22k Jewellery at wholesale price*

ராசிக்கல் மோதிரங்கள்...
நவரத்தின மோதிரம், Diamonds
உங்கள் விருப்பம்போல்
கிடைக்கும் ஒரே நகைக்கடை....

சிங்கப்பூர் Watches
யாவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்...

*Custom made Jewellery & Repairs*

***Bhanu***

**Tel: (416) 335-7295 Fax: (416) 335-7296**

**880 Ellesmere Road, Unit 106F**
**Scarboroug, Ontario M1P 2W6**

# NASEEM TAILORS

**(416) 757-2299**

**1231 Ellesmere Road, Unit 203**
**(Midland & Ellesmere) Scarborough**

**Specializes in Men's Wear....**

- **PANTS**
- **BLAZERS**
- **SARVANI SUITS**

**Also We do any kind of Alteration**



உங்கள்
ஆடைத் தேவைகளை
அழகான முறையில்
நிறைவேற்றிக்கொள்ள
பலவருட
அனுபவமுள்ள

**நஸ்ஸீம் டெயிலர்ஸ்**




படிப்பகம்

www.padippakam.com

# DR. VICTOR J.FIGURADO

**M.D., C.C.F.P**

**St. Lucia's Medical Center**
**Tel: (905) 206-1222**
**Fax: (905) 206-1966**

**3461 Dixie Road (at bloor) #302**
**Mississauga ON L4Y 3X4**

# IMMIGRATION

## 1998 REFUGEE CLAIMS

### BARRISTERS AND SOLICITORS

G.D. WISEMAN, B.A., LL.B.
& ASSOCIATES
**1033, Bay Street,**
**Suite 205, Toronto**

MAX BERGER, B.F.A., LL.B
& ASSOCIATES
**1033, Bay Street,**
**Suite 207, Toronto**

**IMMIGRATION:** குடிவரவு தொடர்பான விடயங்கள் ஆலோசனைகள்.

**ALL REFUGEE CLAIMS:** அகதிநிலை விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல்
கனடிய எல்லையில் அல்லது விமான நிலையத்தில்
அகதிநிலை கோருதல்

**APPEALS:** அகதிநிலை மேன்முறையீடுகள்.

**SPONSORSHIP:** உறவினர்களைப் பொறுப்பேற்றல்

**தொடர்புகொள்க: பரம் -Param (416) 609-8979**

**(416) 964-2285 / 969-9263**



படிப்பகம்

# சிறார்களின் மொழி அறிவினை விருத்திசெய்ய வேண்டும்.

**Help Children Develop Language Skills**



தமது பிள்ளைகள் மொழிஅறிவினைப் பெற்று அதனைச் சிறந்த முறையிலே பிரயோகிக்கும் ஆற்றல் பெறவேண்டும் என்பதே ஒவ்வொரு பெற்றோரும் வேண்டுவது.மொழியினை நன்குபேசி, எழுதி, வாசித்து கிரகித்து என அதன் பல்வேறு பரிமாணங்களையும் சிறப்பாக உய்த்தறியும் ஆற்றல் நம் பிள்ளைகள்பெற வேண்டும் என்பது பேராவலாகும். பிறந்த பிள்ளைகள் மொழியினை உபயோகிக்கின்ற பொழுதுதான் அம் மொழியினைக் கற்கின்றார்கள். அவர்கள் ஒரு தேவை யின் விளைவாகவே மொழியினைக் கற்க ஆரம்பிக் கின்றனர். தமது தேவைகளை எடுத்துக் கூறுவதற்கு அவர்கட்கு ஒருஊடகம் தேவையாகிறது. சிறுகுழந்தை தன் தேவையை உணர்த்துதற்கு அழுகை எனும் ஊட கத்தை உபயோகிக்கிறது. அக்குழந்தையின் தேவை கள் மிகக்குறைந்தவையாய் அமைகின்ற காரணத்தி னாலே அது அழுகை எனும் மொழி மூலம் தனது தேவையை உணர்த்திவிட தாய் அதன் அர்த்தத்தைப் புரிந்து தேவையை நிவர்த்திக்கின்றார். அதன் தேவை என்னவாக இருக்கும் என்ற ஊகத்தின் விளைவாகவே தாய் செயற்படுகிறார். இதுசிலசமயங்களில் பிழைத்து விடுவது சகஜம். அழுகை உணவுத் தேவையை ஈடு செய்ய வேண்டும் என்ற சைகையா அல்லது உடல் உபாதையின் காரணமாகப் பிள்ளை எழுப்பிய அவ லக் குரலா என்பதைத் தாய் அறிந்துகொள்ள நிறைய அனுபவம் தேவை. முயற்சியும் தவறிழைத்தலும் *(Trial and Error)* என்ற நெறி முறையிலே தொழிற்பட வேண்டும்.

பிள்ளை வளரவளர அதன் தேவைகள் அதிக ரித்துக்கொண்டு போகின்ற பொழுது அதன் தேவை களை எடுத்துக்கூற சிக்கலான மொழி தேவையாகின் றது. அழுகை அதற்குப் போதுமாய் அமைவதில்லை. வளர்ந்தபின் அழுகைமூலம் சில தேவைகளை நிறை வேற்றலாம். ஆனால் பெற்றுக்கொள்ளமுடியாது.

பொதுவாகச் சிறுபிள்ளைகள் ஐந்து வயதினை அடையும்பொழுது சரளமாகத் தாய்மொழி/வீட்டு மொழியினைப்பேசும் ஆற்றல்பெற்றுவிடுகின்றனர். இப் படியாக அவர்கள் வீட்டுமொழியில் சரளமாகப் பேசக் கூடிய ஆற்றலை பெறுவதற்குக் காரணமாக அமை பவை:

**மொழி உபயோகிக்கப்படும் சூழலிற்கு அவர்கள் காட்சிப்படுத்தப்படுதல் (Exposure):**

குழந்தைகள் வீடுகளிலேயும், சுற்றாடலிலேயும் மொழியின் வெவ்வேறு தரங்களில் காட்சிப்படுத்தப்படு கிறார்கள். அவர்களுடன் பெற்றோர்களும் உற்றார், உறவினர்களும் பேசுகின்றபொழுது மிக்க எளிமை யான அவர்கள் கிரகிக்கக்கூடிய மொழியிலேயே பேசு கின்றனர். அதேவேளையிலே பிள்ளைகள் உள்ள சூழ லிலேயே பெரியோர்கள் தாம் பேசிக் கொள்கின்ற பொழுது சற்றுக்கடினமான சொற்களையே பிரயோகித் துப் பேசிக்கொள்கிறார்கள். குழந்தைகள் பெரியோர் பேசும் பேச்சில் உள்ள சொற்பதங்களின் அர்த்தங்க ளைப் புரிந்து கொள்ளாவிடினும் அவற்றையும் உள் வாங்கிக் கொள்கிறார்கள். இவற்றில் சிலவற்றிற்குப் பெரியோர்களின் செயல்களையும் பேசப்படும் சந்தர்ப் பங்களை வைத்துக்கொண்டு பிள்ளைகள் புரிந்து கொள்ள முயலலாம். இதேபோன்றே வீட்டிலே இயங் கும் வானொலி தொலைக்காட்சி, இசைநாடா, சினிமா போன்றவற்றிலே கேட்கின்ற வார்த்தைகளின் தரம் கடின மானதாக இருந்தபோதிலும், அவை வெளிப்படும் சந்தர்ப் பங்களை வைத்துப் பிள் ளைகள் விளங்கிக் கொள்ள முனைகின்றனர். இதனால் அவர்களின் சொல்லாட்சி *(Vocabulary)* அதிகரிக்கிறது. அது பிள்ளைகளின் மொழி ஏற்புத் திறன்கள் *(Receptive Skills)* முன்னேற அனுசரணையாகின்றது.

குழந்தைகள் சில விதிகளைத் தாமாகவே உருவாக்கி அவற்றினைச் செயற்படுத்துகின்றனர். பெரியவர்கள் பேசுகின்றபொழுது கால, இட எண், வேறுபாடுகள் தெளிவாய்ப் புலப்படுகின்றன. குழந்தை கள் பேசுகின்றபொழுது இந்த வேறுபாடுகள் புலப்படு வதும் இல்லை. குழந்தைகள் பேசுகின்ற பொழுது சிலசமயம் சடுதியில் மாற்றங்களை ஏற்படுத்திப் பேசி னாலும் கூட உண்மையான கருத்தினைப் பிரதிபலிக் கக்கூடியவாறு அமைவதில்லை. 'அக்கா அடிக்கிறான்,' 'தம்பி கேக்குது' 'பாப்பா சாப்பிடுகிறான்' போன்றவை நம் வீடுகளிலே சாதாரணமாகக் கேட்கின்ற மழலை மொழியாகும். குழந்தைகள் தாமாகவே தம்மனதிலே சில இலக்கண விதிகளை உருவாக்கி அவற்றினைத் தாம் பேச்சிலேபிரயோகிக்கின்றனர். அவர்களது இலக் கணப் பிழைகளுடைய மழலைப் பேச்சிலிருந்து வெளி வந்து இலக்கண சுத்தமாய் அவர்கள் பேசுவதற்குக் காரணமாக அமைவது பெரியவர்கள் பேசுவதை அவர்கள் செவிமடுப்பதாலேயே. எனவே, குழந்தைக ளின் பேச்சு சீர்பெற வேண்டுமாயின் அவர்களுடன் பெரியவர்கள் நிறையவேபேசவேண்டும். இங்கே நாம் கருத்தில் கொள்ளவேண்டியவை:

1: அவர்களுடன் பேசுகின்ற பொழுது அவர் களுக்கு விளங்கக்கூடுமென்பதற்காக நாமும் மழலை மொழி பேசுதல் பிழையானமுறை. இதனால் அவர்க ளின் பேச்சில் உள்ள இலக்கணப்பிழைகள் வலுமூலம் *(Reinforce)* பெற்றுவிட முடியும். எனவே, பிள்ளை களுடன் பேசுகின்றபொழுது எளிமையான இலக்கணச் சுத்தமான மொழியில் பேசுவது மிகஅவசியம். இத னால் பிள்ளைகள் இலக்கணச்சுத்தமான தமிழை உள் வாங்கிக் கொள்கிறார்கள். அவர்கள் அறியாமலேயே தமது பேச்சுமொழியினை திருத்திக் கொள்கிறார்கள்.

2. பிள்ளைகளுடன் கலந்துரையாடும் பொழுது நேரடியாகவே அவர்களைப் பார்த்துப்பேச வேண்டி யது அவசியம். *(Eye Contact)* அவர்களை நேரே பார்த்துப் பேசுவதானால் எமது முகபாவம், உதட்டு அசைவு போன்றவற்றினை உச்சரிக்கின்ற முறைபற்றி யும் தெரிந்துகொள்ள வாய்ப்பு உண்டு.

3. வேறுவேறு வேலைகள் செய்கின்ற பொழு தும் குழந்தைகள் மொழி அறிவினை விருத்தி செய்து கொள்கிறார்கள். பிள்ளைகள் அர்த்தம் பொதிந்த செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் பொழுது மொழி அறிவினைப் பெற்றுக் கொள்கிறார்கள். ஏதேனும் ஓர் விளையாட்டினை விளையாடப் பழகிக்கொள்கின்ற பொழுது அல்லது ஓர் பிரச்சனைக்குத் தீர்வு காண முயல்கின்றபொழுது அல்லது இவை எல்லாவற்றிற்கும் மேலாக கதை ஒன்றினைக் கேட்கும்பொழுது அவர்

www.padippakam.com



களது மொழி அறிவு விசாலமடைகிறது. சிறுகுழந்தைகள் விளையாடும் பொழுது அவதானித்துப் பாருங்கள். அவர்கள் தாம் செய்கின்ற ஒவ்வொரு படிமுறையினையும் வாயால் சொல்லியபடியே செய்வார்கள். எனவேதான் பிள்ளைகட்கு நிறைய வெவ்வேறு வகையான விளையாட்டுப்பொருட்களை பெற்றுக் கொடுப்பதால் அவர்களுடையமொழி அறிவினைவிசாலப்படுத்த முடிகிறது. இதனைத்தான் செயல் தாண்டல் உள்ள சூழல் ***(Motivationg)*** என்போம்.

குழந்தைகட்குக் கதை கேட்பதில் ஓர் அலாதியான இன்பம். கதை கேட்பதால் மொழி அறிவு மிகச் சுலபமாக விருத்தியடைய முடியும். எமது கலாசாரத்தில் கதை சொல்வது நீண்ட நெடுங்காலமாக ஒன்றிவிட்ட ஓர் நெறிமுறை. கதைசொல்லி உணவூட்டல், கதை சொல்லி உறங்க வைத்தல் பாட்டிமார்களுக்கும் பாட்டாமார்களுக்கும் பவிசு பெற்றுத்தரும் செயற்பாடு. கதைசொல்வதால் பிள்ளைகளில் மொழி அறிவு விருத்தியடையக் கூடிய இருபடிநிலைகள் உள்ளன. கதை கேட்கின்ற பொழுது பிள்ளைகள் திறனாய்வு செய்யக்கூடிய முறையிலும், பயனடையக் கூடிய முறையிலும் அவதானித்துக் கேட்கும் திறன்களைப் பெறுவார்கள். கதை கேட்கின்றபோது கதையின் தன்மை பற்றி உணர்வார்கள். இதன் விளைவாகக் கதையின் அமைப்பையும், மொழி ஆழத்தையும் அறிந்துகொள்வதால் இன்னும் சிக்கலான கதைகளை வாசிக்கவேண்டும் என்ற வேட்கை மேல்எழுவதோடு மட்டுமல்லாது அவற்றை வாசித்து விளங்கிக் கொள்ளும் ஆற்றல்களையும் பெற்றுக் கொள்கிறார்கள்.

மற்றையோருடன் கலந்துரையாடுவதாலேயும் குழந்தைகளின் மொழி அறிவு விருத்தியடைகிறது. தெளிவாகவும், நேர்த்தியாகவும் பேசும் ஆற்றலுடைய மற்றவர்களுடன் கலந்துரையாடுவதால் எம் பிள்ளைகளுடைய மொழி ஆற்றல் உரம்பெறுகிறது. பிள்ளைகள் வெறுமனே சொல்வதைக் கேட்டுக் கொண்டிருப்பவர்களாகவோ அல்லது சொல்வதைச் செய்வார்களாகவோ மாத்திரம் இருக்கப்படாது. தமது கருத்துக்களையும் எடுத்துக்கூறித் தமது அறிவாற்றலலையும் மொழி அறிவையும் அதிகரிக்க வேண்டும். மற்றவர்கள் பேசுவதைக் கேட்பதால், கிரகித்தல் திறன் *(comprehension skill)* கூடி ஏற்புத்திறன் *(Receptive skill)* அதிகரிக்கலாம். ஆனால் சொல்திறன் *(Expressive skill)* பேசுவதாலேயே அதிகரிக்க முடியும்.

பெற்றோர்கள் சொல் திறனை விருத்திசெய்ய நிறையவேஉதவலாம். பிள்ளைகள் உங்களுக்குச் சில விஷயங்களைச் சொல்லவரும்போது எவ்வளவு அவசர வேலை இருந்தாலும் பொறுமையாக அவர்கள் சொல்ல வந்தது முழுவதையும் சொல்லி முடியமட்டும், முழுமையாகக் கேட்க வேண்டும். அவர்கள் இலக்கண சுத்தமாகப் பேசினார்களானால் அதிகமாகப் பாராட்டவேண்டும். ஒரு சிறிய முத்தம், எங்கோ கொண்டுபோய் விடும்.

மொழி அறிவு விருத்திக்குத் தளம் அமைத்துத் தருவது வாசித்தல் ஆகும். வாசிப்பு என்பது எழுத்துடன் வாசகர் இடைத்தாக்கம் நடத்தி ஒரு கருத்தினைக் கண்டு கொள்ளமுனையும் உளவியல் மொழி சார்ந்த பொறிமுறை என்றுசொல்லப்படுகிறது. வாசிப்பு என்பது ஒரு ஒன்றிணைந்த செயல்முறை.

தமது மொழிஅறிவையும் சுய அனுபவங்களையும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலேயும் மொழி ஏற்கின்ற பங்கினையும் வைத்தேதான் வாசகர்கள் தாம் வாசிப்பதைப் புரிந்துகொள்கிறார்கள். பிள்ளைகளின் வாசிக்கும் முயற்சிகளில் புரிந்துகொள்ளும் திறன் *(Comprhension)*முக்கிய அங்கம் வகிக்கிறது. ஒவ்வொரு பிள்ளையும் வாசிக்க முனைகின்றபொழுது வெவ்வேறு கொண்டுள்ளனர். எனவே, அவர்கள் ஒவ்வொருவரும் தமக்கே உரித்தான முறையிலே வாசிப்பதை விளங்கிக் கொள்கின்றனர். குழந்தைகளின் வாசிப்புப்பற்றி உலகளாவியஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தவரை ஒருவருமேதிட்டவட்டமாகக் கூறவில்லை. மூன்று வெவ்வேறான முறைகளை ஒருங்கே பிரயோகித்தே பிள்ளைகள் வாசிக்கின்றார்கள் என்பதே பொதுவான கருத்தாகும்.

1. சொற்றொடர்முறை*(Syntax)*அல்லதுஅமைப்பு முறை *(Structure)* பிள்ளைகட்கு வாக்கிய அமைப்பு முறை தெரிந்திருப்பதாலும் சொற்கள் வாக்கியத்திலே ஏற்கின்ற பங்குபற்றிய அறிவுஉள்ளதாலும்ஆங்காங்கே வரவேண்டிய சொற்களை முன்கூட்டியே சொல்ல முடிகிறது. தம்பி நித்திரை செய்கிறான். இங்கே பிள்ளை தம்பிநித்திரை என வாசித்தபின் ஒரு வினைச் சொல் வரவேண்டும் என்ற வாக்கிய அமைப்பை தெரிந்திருப்பதால் தம்பி நித்திரைகொள்கிறான் என்று கூட வாசிக்கலாம். இரண்டுமே கருத்தில் ஒற்றுமை. முன்னையது வாசித்தல். பின்னையது ஊகம்.

2. சொற்பொருள் *(Semantics)* முறை அல்லது கருத்து முறை பிள்ளைகட்கு வாக்கியங்களிலேஉள்ள சொற்களின் கருத்துச்சார்பான தொடர்பினைத் தெரிந்திருந்தால் அவர்கள் வாசிக்கும் பொழுது அந்தவாக்கியம் அர்த்தமுடையதாக அமையும். நான் கடைக்குப் போகிறேன் என்பதை அவர்கள் வாசிக்கின்றபொழுது கடைக்கு என்பதற்குப் பதிலான காரில் என்றும் வாசிக்கலாம். அங்கு வாக்கியம் அர்த்தமுடையதாகவே இருக்கும்.

3. ஒலியியல் வரைமுறை *(Grapho-phonics)* அல்லதுகுரலொலிமுறை *(Phonics)* வாசிக்கும் குழந்தைகள் ஒவ்வொரு எழுத்திற்கும் அதன் ஒலியினைத் தெரிந்து உச்சரிப்பதால் வாசிப்பது சுலபமாகிறது. நாம்நெடுங்காலமாகப் பின்பற்றி வருகின்ற முறை இதுவேயாகும்.

மேற்படி மூன்று முறைகளில் எது சிறந்தது எதனைக் கைக்கொள்ள வேண்டும் என்று கூறுதல் சாத்தியமில்லை. மூன்றும் கலந்த முறையேதான் சிறந்தது எனக்கூறலாம். பெற்றோர்கள் பிள்ளையின் வாசிப்புத் திறன்களை அதிகரிக்கச் செய்வதற்குப் பல வழிகள் உள்ளன. நாம் பொறுமை காட்டுவதுடன், நேரத்தையும் ஒதுக்க வேண்டியது அவசியம்.

நாளாந்தம் ஒருகுறிப்பிட்டநேரம் அவர்களுக்கு, அவர்களுடன் வாசிக்க வேண்டும்.

வாசிப்பதற்குரிய நேரம் எதுஎன்று தீர்மானித்து அதன்படி நடக்கவேண்டும். உதாரணம்: உறங்கப் போகும் நேரம் படுக்கையில் படுத்தபடி ஒரு பத்து நிமிடங்கள் வாசிப்பது, பிள்ளையை மகிழ்ச்சியுடன் உறங்க வைக்கும்.

வாசிக்கின்றபொழுது ஓசையை மாற்றி நாடகத் தன்மையுடன் வாசிப்பது பிள்ளைக்கு சுவாரஸ்யத்தை ஏற்படுத்தும். வாரத்தில் ஒருநாளாவது அருகேஉள்ள நூலகத்திற்குக் குழந்தையை அழைத்துச் சென்று அவர் விரும்பிய நூல்களைத் தெரிவுசெய்து வரல் வேண்டும்.

அனேகமான நூலகங்களிலே சிறுவர்கட்கான நூல்கள் எல்லா மொழிகளிலேயும் உள்ளன. நூலகரிடம்இதுபற்றிய விபரங்களைக் கேட்டுத்தெரிந்து பெற்றுக்கொள்ள முடியும். எம்மில் பலர் கேட்டால் தான் அவர்கள் வாங்கியாவது வைக்க முனைவார்கள். நாமும் வீட்டில் வாசிக்கவேண்டும். நாம் வாசிப்பதைப் பார்த்தால் அவர்கட்கு வாசிப்பதில் அக்கறை ஏற்படும். தொலைக்கா'சியே கதியென இருக்காதீர்கள். நிறையவே வாசியுங்கள்.

**பொ. கனகசபாபதி**

பல்கலாசார ஆலோசகர், வடயோர்க் கல்விச்சபை



படிப்பகம்


www.padippakam.com




# Cancey Sportswear

**Manufacturer stockist and seller of full range of sports and fashion wear...**

*Hockey........Baseball........Soccer........Football........Basketball*



- Insulated Ultracotton Zippered Jacket
- Ultracotton Dropshoulder Sweatshirt
- Ultracotton Hooded Sweatshirt
- Hooded Sweatshirt
- Trackpants with Pockets
- Collared Sweatshirt
- Drop Shoulder Sweatshirt
- Plus T-Shirt

**On Sale!**

Drop in soon!

**Ph: (416) 261-4430, (416) 615-0417**
3160, Eglinton Ave. East,
Scarborough, ON, M1J 2H3

**Website: www.cancey.com** **Email: sales@cancey.com** **Fax: (416) 615-0418**




படிப்பகம்

www.padippakam.com


# LOURDES

**IMPORTERS, DISTRIBUTERS & RETAILERS OF...**

**EAST & WEST INDIAN STORE**

- East & West Indian Groceries
- Fresh Fish & Meat
- Fresh Vegetables & Fruits
- Frozen Food

**CONVENIENCE & GROCERY**

அன்றாடத் தேவைகளுக்கான பலசரக்குப் பொருட்களுக்கும்
மீன், இறைச்சி, மரக்கறி,
பழவகைகள் **frozen** உணவுப் பொருட்கள்
என்பவற்றையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

195-199 Markham Road
Scarborough ON M1J 3C3
(Markham & Eglinton)

Tel: (416) 266-5025
Fax: (416) 266-2674

## Knowledge is Power-Be a Powerful Buyer with SAM M. KUMAR

HOMELIFE
HIGHER STANDARDS

**10th Successful Year**



Gold Award Winner
#1 Top Prouducer of 1994, 1995, 1997 with
HOMELIFE CHAMPIONS

10 Years of Uncompromising Personalized Service
Seting Higher Standards Year after year

10 வருட மாசு மறையற்ற சேவை.
வருடா வருடம் சேவையின் தரத்தை உயர்த்துவதே எனது குறி.

வீடு வாங்க　　　　வீடு விற்க

அது தொடர்பான சகல சேவைகட்கும் நாடுங்கள்
சாம் குமார்

**Sam Kumar** B.V.SC; D.V.P.M. (NZ)

Bus: (416) 281-8090
Res: (416) 299-7325

மனநிறைவுபெற்ற வாடிக்கையாளர்களே நான் மதிக்கும் பெருவிருது

8130 Sheppard Ave., E., Suite 205
Scarborough, Ontario M1B 3W3




படிப்பகம்

www.padippakam.com


# வேலணையின் மடியில்

ஆயிரம் விளக்குகளின் மத்தியில்
ஒளிவீசும் ஒரு முத்துப்போல்
தீவுக்குள் ஒரு தீவு எம் வேலணை.

என் சின்னப் பிராயத்தில்
காலடிகள் பதிந்த மண்.
சந்தோஷச் சிரிப்பலைகள் கலந்த மண்
பசுந்தென்றல் தாலாட்டும்
இனிய மண்!

சின்ன வயதில் உணரவில்லை என் மனம்
அந்த மண்ணின் அருமையை!
இன்றோ எனக்குள்ளே தவிக்கின்றேன்.
என் மண்ணின் பெருமைகளை எண்ணி!

கனடாவின் பனிக்குளிரில்
விறைக்கும் போதெல்லாம்
என்கனவில்...
வேலணையின் பசுந்தென்றல்
முத்தமிட்ட ஞாபகங்கள் நிழலாடும்!

அந்நியர்கள் சிலர் எம்மை
அகதிப்பட்டம் சூட்டுகையில்
எனக்கும் ஒரு மண் உண்டு என
உரத்து அழத் தோன்றும்.
உலகப்படத்தை நோக்கும் போதெல்லாம்
என்விழிகள் என்மண்ணைத் தேடும்
தேடிய விழிகளில்
என் மண் தென்படுகையிலே
என் உள்ளமோ பெருமூச்சு விட்டு
மெல்லக் கதறி அழும்.

எம் மண். அதில் மீண்டும் எம் காலடிகள் பதியும்.
அங்கு மீண்டும் எம் சிரிப்பொலிகள் கேட்கும்.
மீண்டும் நாம் சுவாசிப்போம் வேலணையின் புனிதக்காற்றை.....

**அருந்ததி சுந்தரம்பிள்ளை**
வோட்டலூ பல்கலைக்கழகம்
பழைய மாணவி வே.ம.ம.வி.



படிப்பகம்

# அம்பாள் ரேடிங் கொம்பனி

உங்களுக்குத் தேவையான அனைத்து
இலங்கை-இந்திய தானிய வகைகள்

உடன் மரக்கறி வகைகள்

ஆட்டிறைச்சி வகைகள்

கடலுணவுகள்.....

மற்றும் யாழ்ப்பாணத்திலிருந்து
இறக்கமதி செய்யப்பட்ட பொருட்கள்
யாவற்றையும் மலிவு விலையில்
பெற்றுக் கொள்ளலாம்!



**கலாதீபம்
சிறப்புற
வாழ்த்துகிறோம்**

## ACT AMBAL TRADING COMPANY

583 Parliament Street Toronto, ON **TEL: (416) 928-6665**



# RE/MAX

Newstyle Realty Ltd. Realtor, Independently Owned and Operated




**JAY BANERJEI, M.B.A**
Sales Representative

Bus: (416) **289-3333**

885 Progress Ave. Ste. 309, Scarborough, ON Canada M1H 3G3
Fax: (416) **289-4535**

www.padippakam.com



# இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்த மாணவர்கள் இங்குள்ள பாடசாலைகளில் சந்திக்கும் பிரச்சனைகள்!



கனடா நாட்டில் வந்து குடியேறிய இலங்கையரில் பெரும்பான்மையோர் தாங்கள்பலவிதமான கஷ்டங்களை அனுபவிப்பதாகவும் அவற்றைத் தங்கள் குழந்தைகள் உணர்வதாகத் தெரிவதில்லையெனவும் கவலைப்படுகின்றார்கள். தங்களின் சொந்த வீடு வாசல்கள், பெரும் பதவிகள், வாழ்க்கை வசதிகள், யாவற்றையும் துறந்து இந்நாட்டுக்குவந்து பெரும் கஷ்டங்களையும் தோல்விகளையும் அனுபவிப்பதாகவும் அவைகளையெல்லாம் தங்கள் குழந்தைகளின் ஒளிமயமான எதிர்காலத்துக்காகவே தாங்கிக் கொள்வதாகவும் கூறிக்கொள்கின்றனர்.

எங்கள் பிள்ளைகள் மிகவும் சந்தோஷமாகப் பாடசாலைக்கு உல்லாசப் பிரயாணம் செய்வதாகவே பெற்றோராகிய நாம் சிலவேளைகளில் கருதுகின்றோம். இங்குள்ள வகுப்பறைகளின் அமைப்பே எங்கள் குழந்தைகளுக்கு முற்றிலும் ஒரு புதிய அனுபவமாக அமைகின்றது. சீருடை மாணவர்களுடன் வரிசைக் கிரமமாக அமைந்த இருக்கைகளில் அமர்ந்து, ஆசிரியர் வகுப்பின் நடுவே நின்று கற்றுக்கொடுப்பதை மிகவும் அமைதியாக இருந்து கேட்ட எங்கள் குழந்தைகளுக்கு இந்நாட்டுப் பாடசாலைகளின் வகுப்பறைக்குள் கால் வைத்தவுடன் காணும் காட்சியே வியப்பை அளிக்கின்றது.

இவர்களின் சக மாணவர்களோ இருபதுக்கும் மேற்பட்ட பாஷைகளையும் கலாசாரத்தையும் உடையவர்களாக உள்ளனர். விதம் விதமான ஆடை ஆபரணங்கள் முகப்பூச்சுக்கள், சிகையலங்காரங்களையுடைய ஆண்களும்பெண்களும் குழுக்களாக அமர்ந்தே செயற்படுகின்றார்கள். ஆசிரியரோ வகுப்பு முழுவதும் நடந்து திரிந்து கலந்துரையாடல் மூலமே வகுப்பினை நடத்துகின்றார். கற்பித்தல் முறையோ. அடைவு முறைகளோ மாணவர்களின் விடைகள் அமையும் முறைகளோ யாவும் எங்கள் நாட்டு முறைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாக உள்ளன. எங்கள் பிள்ளைகள் சந்திக்கும் பிரச்சனைகள் யாவை என ஆராய்வோம்.

இந்தநாட்டுக் கல்வி அமைப்பில் மூன்று வகையான பாடசாலைகள் காணப்படுகின்றன. அவை யாவன:

1. கீழ்ப்பிரிவுப் பாடசாலைகள்:- அதாவது எலிமன்றறி பாடசாலைகள் *(Elemetary Schools).* பாலர் வகுப்புத் தொடக்கம் ஐந்தாம் வகுப்புவரை, சில சமயங்களில், 6ம் வகுப்புவரை *(Jr-Grade 5 or Grade 6).*

2. மத்திய பாடசாலைகள்:- அல்லது ஜுனியர் ஹை ஸ்கூல் *(Junior High School).* 5ம் வகுப்புத் தொடக்கம் எட்டாம் வகுப்புவரைசிலசமயம் ஒன்பதாம் வகுப்புவரை *(Grade 6 to Grade 8 or 9).*

3. மேற்பிரிவுப் பாடசாலைகள் அதாவது செகன்டரி பாடசாலைகள் *(Secondary Schools).* ஒன்பதாம் தரத்திலிருந்து பதின்மூன்றாம் தரம் வரை *(Grade 9 to Grade 13).*

கீழ்ப்புரிவுப் பாடசாலைகள் *(Elemetary Schools)*: இந்த நாடடில் கல்வியாண்டு ஆங்கில மாதமான செப்டம்பரில் ஆரம்பமாகும்.அப்பொழுது மூன்று வயது ஒன்பது மாதத்தினைப் பூர்த்திசெய்த குழந்தைகள் பாலர் வகுப்பில் அனுமதிக்கப்படுவர். இக்குழந்தைகளில் பெரும்பான்மையோர் பகல்நேர பராமரிப்பு நிலையங்களில்*(Daycare)* 2,3 வருடங்களைக் கழித்தவர்களாகவே இருப்பார்கள். இதனால் அவர்கள் தங்கள் தேவைகளைத் தாங்களாகவே கவனித்துக்கொள்ளும் கெட்டித்தனம் உடையவர்களாக இருப்பர். அத்துடன் வீட்டில் பெற்றோர்கள் இவர்கள் தங்கள் சுயதேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக வளர்த்திருப்பர். இதனால் அவர்களிடம் அதிக அளவில் சுதந்திரமாகச் செயற்படக் கூடிய நெறிகள் *(Independent Skills)*காணப்படுகின்றன. எங்கள் குழந்தைகள் பகல்நேரப் பராமரிப்பு நிலையங்களுக்குப் போனவர்களாக இருந்தாலும் வீட்டில் அவர்களை நாங்கள் சிறு குழந்தைகளாகவே நடத்துவதால் இவர்களின் சுதந்திரமாகச் செயற்படக்கூடிய நெறிகள் குறைவாகவே காணப்படுகின்றன. இதனால் ஆசிரியர்கள் இடும் கட்டளைகளை இவர்கள் விரைவாகச் செயற்படுத்த முடியாதிருப்பதுடன் சுயமாகச் சிந்தித்து முடிவுகளை எடுக்க முடியாமலும் இருக்கிறார்கள். இப்பிள்ளைகள் சுற்றுலாக்கள் செல்லும் பொழுது. குழுக்களாகவோ தனியாகவோ பிரிந்து சென்றுபார்வையிட வேண்டியவற்றைப் பார்த்த பின்பு ஒரு குறிப்பிட்டஇடத்தில் ஆசிரியரைச் சந்திக் வேண்டியுள்ளது. அவ்வாறு ஆசிரியரைச் சந்திக்காதவிடத்தில் தாம் எவ்வாறு நிதானமாகச் செயற்படவேண்டும என்பதனை இவர்கள் தெரிந்திருக்க வேண்டும்.

கீழ்ப்புரிவுப் பிள்ளைகள் கொண்டுவரும் மதிப்பீட்டு அறிக்கைகள் *(Report Cards)* எத்தனையோ வரிகளில் எவ்வளவோ விடயங்களை ஒவ்வொரு பாடத்துக்கு நேராகவும் ஆசிரியர் எழுதியிருப்பார். ஆசிரியர் மிகவும் கவனமாக ஒவ்வொரு குழந்தையையும் அவதானித்தே மிகவும் நுணுக்கமான முறையில் இவற்றை எழுதுகின்றார். அத்துடன் இவை சம்பந்தமாகப் பெற்றோர்கள் ஆசிரியர்களைச் சென்று சந்திப்பதற்கான விசேட இரவுகளும், மொழிபெயர்ப்பாளர்கள் தேவைபடும்பொழுது மொழிப்பெயர்ப்பாளர்களும் ஒழுங்கு செய்யப்படுகின்றனர். இவற்றுக்குப் பெற்றோர் தவறாது சமூகமளித்தல் வேண்டும். ஏனெனில் பாடசாலைகளில் கற்பிக்கப்படும் கலைத்திட்டங்கள் பற்றியவிளக்கங்களும் பிள்ளைகளுக்கு நாம் எவ்வாறு உதவலாம் என்பதனையும் அறியலாம். புதிதாக வருகைதந்து எமது குழந்தைகளுக்கு ஆங்கில மொழி அறிவு ஒரு பிரச்சனையாகவிருந்தாலும் சில மாதங்களில் இம்மொழியினை மிகவும் லாவகமாகக் கையாளத்தொடங்கி விடுகின்றனர்.

மத்தியபாடசாலைகள்*(Junior High Schools)*:இப்பாடசாலைகளின் குழந்தைகள் கட்டிளமைப் பருவத்தினுள் காலடி எடுத்து வைக்கும் வயதினர். சரி எது, பிழை எது எனத் திட்டவட்டமாக முடிவு எடுக்கத் தெரியாத வயது. அத்துடன் தன்னைத் தானே விளங்காத வயது. இத்தகைய வயதினரோடுதான் பெற்றோர் மிகவும் அவதானமாக இருக்க வேண்டியுள்ளது. பாடசாலைகளில் பலவிதமான கலாசாரங்களைச் சேர்ந்த பிள்ளைகள், பலவிதமான நடை உடை பாவனைகள் பழக்க வழக்கங்கள் உடையவர்களாக உள்



படிப்பகம்

www.padippakam.com


ளனர். இவர்களைப் போலவே தாங்களும் நடந்தால் தான் தங்கள் ஒத்தவயதுக் குழக்கள் *(Peer Groups)* ஏற்றுக்கொள்வார்கள் எனக் கருதுகின்றனர். இதனால் பெற்றோர் விரும்பாத சிலவிடயங்களையும், ஒத்த வயதினரின் திருப்திக்காகச் செய்கின்றனர்.

கீழ்ப்பிரிவுப் பாடசாலைப் பிள்ளைகள் தங்கள் பெற்றோர் விரும்பமாட்டார்கள் என்ன உண்மையை வெளிப்படையாகச் சொல்வார்கள். மேற்பிரிவுப் பாடசாலை மாணவர்கள் தங்களுக்குச் சில பிடிக்கவில்லை என்பதனைத் துணிவுடன் வெளிப்படையாகச் சொல்வார்கள். ஆனால் மத்திய பாடசாலைப் பிள்ளைகளோ, இவை இரண்டையும் செய்யத் துணிவில்லாதவர்களாக இருக்கின்றார்கள்.

இங்கு பாடசாலைகளில் மாணவர்களின் புள்ளி அடைவுகளில் வகுப்பில் கலந்துரையாடல், பங்குபற்றல் குழுக்களாகச் செயற்படல் முதலியவற்றை மதிப்பீடு செய்கின்றனர். எமது நாட்டில் பொருளுணரா மனப்பாட முறையில் கல்விகற்று இங்கு வந்துள்ள பிள்ளைகளுக்கு இக்கற்றல்முறை மிகக்கடினமாக அமைகின்றது. அத்துடன் புதிதாக வருகை தந்த மாணவர்களுக்கு ஆங்கில அறிவும் குறைவாக இருப்பதால் அவர்களின் கஷ்டம் இரட்டிப்பாகிறது. பிழை ஏற்பட்டாலும் என்ற கூச்சத்தினால் இவர்கள் ஆங்கில மொழியைக் கையாளுவதற்குத் தயங்குகின்றார்கள். இதனால் கீழ்ப்பிரிவுப் பாடசாலை மாணவர்கைளப் போலஒருசில மாதங்களில் இவர்களால் ஆங்கிலத்தை லாவகமாகக் கையாள முடிவதில்லை.

மேற்பிரிவுப்பாடசாலைகள் *(Secondary Schools):* மேற்பிரிவுப் பாடசாலைகளில் காணப்படும் கல்வி முறையை இலங்கையிலிருந்து வருகை தந்தோர் விளங்கிக் கொள்வதற்கே சில மாதங்கள் செல்லும். இந்த ஐந்து ஆண்டுக் கல்விக் காலத்தில் ஒரு மாணவன் முப்பது விசேட சித்திகளைப் பெறவேண்டும். அது மாத்திரமல்லாது, அவனது எதிர்காலத்தை நிர்ணயிப்பதே இந்த விசேட சித்திகள்தான். இவ் விசேட சித்திகளை அடிப்படைக் கல்வி நிலையில் ஒருவன்பெற்றால் அவனால் பல்கலைக்கழகத்திற்கோ, சமூகக்கல்வி நிலையங்களுக்கோ செல்லமுடியாது. தொழில் உலகில் ஏதாவது ஒரு தொழிலைச் செய்வதற்கே இது உதவுகிறது. இவ்விசேட சித்திகளைப் பெறக்கூடிய நிலையில் ஒருமாணவர் இருந்தால் அவர் டிப்புளோமாப் பட்டங்களை வழங்கும் சமூகக் கல்வி நிலையங்களுக்கே செல்லமுடிகின்றது. விசேட கடின நிலையில் பெறும் விசேட சித்திகளே பல்கலைக் கழகத்திற்குச் செல்ல உதவுகின்றது.

இலங்கையில், குழந்தை கருவிலிருக்கும்போதே பிறக்கும்போகும் பிள்ளையே டாக்டராகவோ, என்ஜினியராகவோ ஆக்க வேண்டுமேன்ற மனநிலையோடு வாழ்ந்த பெற்றோர். இந்த நாட்டிலும் அப்படி எண்ணத் தேவையில்லை. இங்குள்ள உயர்கல்விப் பட்டங்கள் எண்ணில் அடங்காதவை. பிள்ளைகளின் விருப்பத்திற்கும், ஆற்றலுக்கும் ஏற்ப அவர்கள் கல்வி கற்பதற்குப் பெற்றோர் உதவ வேண்டும். எட்டாம் வகுப்பு வரை பாடசாலைகளில் வீட்டு வேலை மிகவும் குறைவாகவே வழங்கப்படுகின்றது. இவற்றுக்கெல்லாம் சேர்த்து வைத்தாற்போல மேற்பிரிவுப் பாடசாலைகளில் வீட்டு வேலைகள் அதிகமாக வழங்கப்படுகின்றன. அதுமாத்திரமல்லாது, பல வாசிகசாலைகளுக்கும் ஏறியிறங்கிப்பலவிடயங்களை வாசித்தறிந்தே இவற்றை இவர்கள் செய்ய வேண்டியுள்ளது. வருடம் முழுவதும் வழங்கப்படும் புள்ளிகளின் கூட்டுத்தொகையே ஒரு மாணவனது பாட அடைவாகும். இதனை எங்கள் நாட்டில் செய்வதுபோல கடைசி நேரத்தில் இரவில் படித்து பரீட்சைகளில் சித்திஎய்த முடியாது. பல மாணவர்கள் இரவிலும் வேலைபார்த்துப் பகலிலும் படிக்க வேண்டியவர்களாக உள்ளனர். சிலர் தனியாக வாழ்கின்றனர். இவர்களுக்கு கற்பதற்குரிய நேரமும் வசதியும் கிடையாது. எங்கள் நாட்டின் அரசியல் காரணங்களினால் சிலமாணவர்கள் 2, 3 வருடங்கள் பாடசாலைக்குச் செல்லாது இருந்துள்ளனர். இதனால் இவர்களது கல்வி நிலையில் இடைவெளி ஏற்பட்டுள்ளது. இதனைவிட ஆங்கிலத்திலும் அளவுக்கதிகமான பாண்டித்தியம் தேவைப்படுகின்றது. மேற்பிரிவுப் பாடசாலை மாணவர்கள் எதிர்நீச்சலடித்தே உயர்கல்வி நிலையங்களுக்குச் செல்லவேண்டியுள்ளது.

கனடா நாட்டில் எங்கள் குழந்தைகள் வாழ வேண்டுமென்றால் இந்நாட்டு வாழ்க்கை முறைகள் என்னும் நீரோட்டத்தில் அவர்கள் இறங்கி நீந்தத்தான் வேண்டும். ஆனால் அந்த நீரோட்டத்தில் அவர்கள் மூழ்கிவிடாது பார்த்துக்கொள்ள வேண்டும். எங்கள் பழமைமிக்க தமிழ்ப்பண்பாட்டில் நாரெடுத்து இந்தப் புதிய உலகிலுள்ள கல்வி வாய்ப்புக்கள் என்னும் பூக்களை அதில்தொடுத்து எங்கள் குழந்தைகளின் தோள்களில் மாலைகளாக அணிவோம்.

**திருமதி கனகேஸ்வரி நடராசா**

பி.ஏ. (லண்டன்) எம்.ஈ.டி (இலங்கை)

TEACHER-EARL HAIG SECONDARY SCHOOL, NORTH YORK

நன்றி: அகிலன் அசோஷியேற்ஸ்

கலாதீபம் 99
சிறப்புற எமது வாழ்த்துக்கள்

நம்நாடு

Tel: (416) 429-6524 Fax: (416) 429-6455
E-mail: namnadu@ican.net



படிப்பகம்

www.padippakam.com






உடன் இறைச்சி வகைகள், ஆட்டிறைச்சி, கோழி இறைச்சி...
கடலுணவுப்பொருட்கள் மீன், நண்டு, இறால்...

வீடியோப் பிரதிகள் வாடகைக்கும்
விற்பனைக்கும் பெற்றுக்கொள்ளலாம்

**YARLTON FOOD STORE**
**DIVISION TRUSTWAY LIMITED**

**2104 Bridletowne Cr., Scarborough Ontario M1W 2L1**

**Tel: (416) 494-9494** **Fax: (416) 502-0322**

# JOE'S TOWING SERVICE

**24 Hrs Towing Service**



விபத்திற்குள்ளான
வாகனங்களை இலவசமாகத்
தூக்கிச்சென்று அந்தந்த
நிறுவனங்களிடம் கொடுத்து
திருத்தித் தரப்படும்.

அத்துடன்
அந்தந்த இடத்தில் வைத்தே
வாடகை வாகனம் தரப்படும்.

உங்களின் சகலவிதமான வாகனங்களையும் எந்த
நேரத்திலும், எந்த இடத்திலிருந்தும் மிகக் குறைந்த
செலவில் எடுத்துச்செல்ல நீங்கள் நாடவேண்டிய ஒரே
ஒரு ரோயிங் சேர்விஸ் (Towing Service)

**மற்றும் பாவிக்க முடியாத வாகனங்கள் இலவசமாக எடுத்துச் செல்லப்படும்.**

**KANNAN**
(416) 414-0102 (416) 414-1379


**MOHAN**
(416) 566-2037



படிப்பகம்

www.padippakam.com






வசந்தா அதிகாலையில் எழுந்து பிள்ளைகளுக்குச் சாப்பாடு தயார்செய்து வெளிக்கிடுத்தி பள்ளிக்கூடம் அனுப்ப வேண்டும். மாஸ்டரை எழுப்பி காப்பி கொடுக்க வேண்டும். இவ்வளவையும் அவசரமாய் செய்து முடித்து தன் கடமைகளையும்செய்து வெளிக்கிட்டு வேலைக்கு விரைய வேண்டும். மாஸ்டர் இரவு மிகுந்த வெறியில் படுத்தால் எவ்வளவு பிரயத்தனப் பட்டு எழுப்பினாலும் எழும்பமாட்டார். அப்படியே விட்டுவிட்டு வேலைக்குப் போய் விடுவாள். மாலை வேலையால் களைத்து எழுந்து வரும்போது, 'ஏனடி காலம் எழுப்பாமல் போனனி?' தர்க்கம் தொடங்கும். வசந்தாவும் தர்க்கிப்பாள். நியாயம் கேட்பாள்.

வசந்தாவின் கேள்விகளில் மாஸ்டர் தோற்றுப் போனால் அடித்து அமிழ்த்தி விடுவார்.

மாஸ்டருக்கு இரவில் இடியாப்பம் அவிக்க வேண்டும். பச்சை மிளகாயில் சம்பல், மீன் சொதி, முட்டைப் பொரியல் கறியாக்க வேண்டும். பிள்ளைகளுக்கு இவை பிடிக்காது. அவரவர் விருப்பத்திற்கேற்ப இறைச்சிப்பொரியல், கிழங்குப் பொரியல், நூடில்ஸ் அது இதுவென்று சமைக்க வேண்டும். மாஸ்டர் வாசிக்க (குடிக்க) தொடங்கினால் சிகரட், லைட்டர், அஸ்ட்ரே எல்லாம் தேடி எடுத்துக் கொடுக்க வேண்டும். பியர் முடியமுடிய திறந்து கொடுக்க வேண்டும்.

மாஸ்டர் வேலையை இழந்து வேலையிழப்பு ஊதியத்தைப் பெற்றுக் கொண்டிருக்கின்றார் அடுத்த வேலை கிடைக்கும் வரை. ஆகவே, குடிப்பதற்கு அதிக சந்தர்ப்பம் முப்பொழுதும் குடிதான். வசந்தா வேலையால் வரும்போது தனியாகவோ இன்றி சகாக்களுடனோ வாசித்து வீட்டை அலங்கோலப்படுத்தியிருப்பார். படுத்திக்கொண்டிருப்பார்.

படுக்கையறையிலிருந்து பாத்ரூம் வரையும் பியர்ப்போத்தல்களும் மூடிகளும் பரவிக் கிடக்கும். பியர் சிந்துண்டு சிகரட் சாம்பல் ஒட்டி கார்பெட் பிசுபிசுப்பாயிருக்கும். திட்டித்திட்டி நச்சரித்துக்கொண்டே ஒழுங்குப்படுத்தி துப்பரவு செய்வாள். மாஸ்டர் மத்தியானம் சாப்பிடவில்லை என்றால் சாப்பாடு கேட்பார். 'பிறிச்சில இருந்தது சூடாக்கி சாப்பிட்டிருக்கலாமல்லவா?' வசந்தா சீறுவாள், மாஸ்டர் எகிறுவார்.

'நாட்களையெல்லாம் கால நேரமில்லாமல் குடிக்கின்ற பார்ட்டி' என்று சொல்வார்கள். குடிக்கின்ற நாட்கள் தேர், தீர்த்தம் ஆகியிருந்தாலும் அதற்கும் 'பார்ட்டி' என்று வரையறையை வைத்துக்கொண்டு கூடுவார்கள். ஆனால் மாஸ்டருக்கு ஒவ்வொருநாளும் சுபதினம், பார்ட்டி. வெளியே சென்று 'பார்'களிலோ, நண்பர்களின் வீடுகளிலோ சேர்ந்து குடிக்கமாட்டார். அப்படிக் குடிப்பது தனக்கு கௌரவமில்லையென்பார். சேர்ந்து குடிப்பவர்கள் வீடு சுத்தமாயிருக்கும். அவர்கள்மனைவியர்கள் கசங்காமல், கஷ்டப்படாமல் உட்கார்ந்திருந்து வீடியோவில் தமிழ்ப் படம் பார்ப்பார்கள். கமலஹாசனையும், விஜயகாந்தையும் ஸ்பரிசிப்பார்கள். தங்கள் கணவன்களைக் காணவில்லை என்றால் மாஸ்டர் வீட்டிற்குப் போன் செய்வார்கள். போதை மிகுதியால் நடை தளர்ந்துபோனால் அவர்களைத் தூக்கி ஏத்தி வீடு கொண்டு போய்ச் சேர்க்கும் பொறுப்பும் வசந்தா வினுடையதாகிவிடும்.

எல்லோருமாய் குடித்துக் கொண்டிருக்கையில் ஒரு நாளிரவு 'டேஸ்ட்' இதற்கான இறைச்சிப் பொரியலைமேசையில் வைத்த போது எதைச்சையாய் பட்டபோல் பாவனை பண்ணி வசந்தாவின் கன்னத்தை ஒருவன் வருடியிருக்கின்றான். ஏசி பிரச்சினையைப் பெரிதுபடுத்தாமல் முறைத்துப் பார்த்துவிட்டு மௌனமாய் போயிருக்கின்றாள் வசந்தா.

அந்த மௌனத்தைச் சம்மதமென அர்த்தப் படுத்திக் கொண்டு அவன் குசினிக்குள் போய் 'இந்த ஜீன்ஸ் உங்களுக்கு நல்ல வடிவாயிருக்கு..' சொல்லிக் கொண்டே பிருஷ்டத்தில் தட்டியிருக்கின்றான். வசந்தா அவன் கையை இடறி, 'உன்ர மனிஷிக்கும் போட்டுப் பார்த்தா இப்பிடித்தானிருக்கும். போய்ப் போட்டுப் பார்.'

'சொரியக்கா... மன்னிச்சிடுங்க'

'மனுஷிக்குப் போன் பண்ணிச் சொல்லட்டா?'

'தயவுசெய்து சொல்லிப்போடாதீங்க. பிளிஸ்... மன்னிச்சிடுங்க' மன்றாட்டமாய்ச் சொல்லி நகர்ந்தானாம்.

இதை என்னிடம் சொல்லி வருத்தப்பட்டாள் வசந்தா ஒரு நாள்.

மாஸ்டர் வெறி என்றால் கார் ஓட்டமாட்டார். காரணம், வெறியுடன் கார் ஓட்டினால் தற்செயலாகப் போலீஸ் மறித்துச் செக் பண்ணினால். லைசென்சைப் பறிகொடுக்கவோ தண்டம் கட்டவோ நேரிடும் என்பதால், அவ்வேளைகளிலெல்லாம் வசந்தா தான் சாரதி.

ஒரு நாள் மாஸ்டரும் நானும் கச்சேரி நடத்திக் கொண்டிருக்கையில் 'இண்டைக்கு நான் வரல்ல. நீயே கடைக்குப் போய்த்துவா...' என்று கார் திறப்பைக் கொடுத்து, 'எஞ்சின் ஒயிலைப் பார். ரேடியேட்டருக்கு தண்ணியப் பார்த்துவிடு.' சொல்லி கடைக்கனுப்பி வைத்தார்.

வசந்தா கடையில் இருந்து வந்தபோது, 'வசந்தா... வசந்தா... கடைக்குப் போகேக்க என்னையும் கூட்டிக்கொண்டு போயிருக்கலாமல்லவா...?



படிப்பகம்

www.padippakam.com



நான் உன்ர புருசன் எண்ட நினைப்பு இருக்குதா? வாறீங்களான்னு கேட்டிருக்கலாம். கார் ஓட்டுறதென்றால் சந்தோஷம் என்ன?'

'நீங்க எனக்குப் புருசனா? பொஞ்சாதியா?'

நான் நினைத்ததையே கேட்டாள்.

'நீயும் ஒரு பொம்பிளையாடி?'

'பொம்பிளையில்லையெண்டு தெரிஞ்சால் ஏன் கல்யாணம் முடிச்சினீங்க.'

'அப்ப, நீ பொம்பிளையாயிருந்த.'

'அப்ப நீங்க ஆம்பிளையாயிருந்தீங்க. இப்ப நீங்க பொம்பிளையாகிட்டீங்க. அதனால நான் ஆம்பிளையா மாறிட்டேன். நானும் பழைய பொம்பிளையா கிழுவமரம், கிடுகுவேலிக்குள்ள இருந்திருந்தால் வீடு இதுவரையில நாறியிருக்கும். பிள்ளையளும் அநாத மடத்துக்குப் போக, நீங்களும் தெருவுக்குப் போயிருப்பீங்க' மூச்சு விடாமல் முழங்கினாள்.

கேள்விகளின் நியாயங்களால் எனக்குள் சந்தோஷம்.

'மதன் இருக்கிறான் எண்ட துணிச்சல்தான் கதைக்கிற பொத்தடிவாய்...' எழுந்துபோய் கூந்த லைப்பற்றி இழுத்துக்கொண்டு குசினிக்குள் போனார். குசினிக்குள் அடிவிழும் சத்தம். 'போய் விலக்கி விடலாமோ' என நினைத்தேன். வேண்டாம் எனக்கு முன்னுக்கு அடிக்கக் கூடாதென்றுதானே குசினிக் குள் இழுத்துக்கொண்டு போய் அடிக்கிறார். பிறகும் நான் போய் என்னத்துக்கு... 'மாஸ்டர்... மாஸ்டர்...' உரத்துக் கூப்பிட்டேன். பதிலில்லை. அடி தொடர்ந்தது. அழுகையும் கேட்டது.

என்னில் தீப்பற்றியது. தீயால் சூரியனைச்சுடவா முடியும். சுருங்கி பியர்ப்போத்தலுக்குள் புகுந்து கொண்டேன்.

வசந்தாவின் கூந்தல் நீளமாக இருப்பது கூட மாஸ்டரின் தாக்குதலுக்கு எளிதில் அமிழ்ந்து போய் விடுகிறாள். இதன்பின் வசந்தாவை கூந்தலை குட்டையாக வெட்டும்படியும் மாஸ்டரிடம் சம்மதம் கேட்டுச் செய்யும்படியும் சொன்னேன்.

நான் பக்கத்து வீட்டுக்காரனாகையால் வசந்தாவின் முறையீடுகளைக்கேட்டு, கண்ணீரைப் பார்த்ததனாலும், இரக்கத்தினாலும், முடியுமான உதவிகளைக் குழப்பாமலும் அத்தோடு குற்றவாளியாகாமலும் அவர்கள் விவகாரங்களில் தலையிட்டுத் தீர்வு காண முயல்பவன்.

வசந்தாவும் மாஸ்டரின் சம்மதத்துடன் கூந்தலை வெட்டியும் விட்டாள். கூந்தலை வெட்ட சம்மதித்துவிட்டுப் பின் ஒருநாள் 'ஏன்ரி வெட்டின...' மாப்பிளை புடிக்கிற எண்ணமோ?' என்று அடித்தாராம்.

பிள்ளைகளுக்கு உடுப்புகள், விளையாட்டுப் பொருட்கள் வாங்கினாலும் 'காசைக் கொண்டு போய் அநியாயமாக்கிப் போட்டு வாறாள்' என்று ஏசுவார். அத்தியாவசியங்கள் அவருக்கு அவசியங்கள், அவசியங்கள் அத்தியாவசியங்கள்.

ஒருமுறை வசந்தா இலங்கையிலிருக்கும் தன் சகோதரியுடன் போன் செய்தபோது, 'டெலிபோன் பூத்துக்குள்ள இவ்வளவு காசைக்கொண்டுபோய் போட்டுட்டு வாற என்ர தாய், சகோதரர்கள் ஊரில எவ்வளவு கஷ்டப்படுகுதுகள்' என்று சூரசங்காரம் நடந்ததாகத் தன்னிடம் சொல்லி அழுததாக என் மனைவி என்னிடம் சொன்னாள்.

மாஸ்டரின் தங்கை ஒருத்தி திருமண வயது வந்தும் பொருளாதாரமின்மையால் இன்னும் திருமணம் செய்யாமலேயிருக்கின்றாள். அங்கே அவள் அழுகின்ற கண்ணீர் தான் இவரது மதுக்கிளாசுகளை நிறைத்துக் கொண்டிருக்கின்றது. தாய் வீட்டில் அடுப்பு புகையாமலிருக்கும், இவரிடம் சிகரட் புகைந்து கொண்டேயிருக்கும்.

ஒருமுறை அடி நடந்து கொண்டிருந்த சமயம் மகள் அவசர போலீஸ் இதற்குப் போன் செய்து அழைப்பித்தாள். இதுவரை காலமும் மாஸ்டரின் நிஷ்டூரங்களையும் கொடுமைகளையும் சகித்துக் கொண்டு அதிகபட்ச தண்டனையாக ஓரிரு நாட்கள் கதைக்காமலிருந்ததைத் தவிரப் பெரிதாக வேறெந்த நடவடிக்கையும் எடுக்காத வசந்தா அன்று முழுப் பிரச்சினைகளையும் போலீசிடம் முறையிட்டாள். அதுதான் போலீஸில் கொடுத்த முதல் வாக்குமூலம் என்பதால் மாஸ்டரை எச்சரித்து மன்னித்து, 'இனிமேல் இப்படி நடந்தால் உடனேஎங்களுக்கு அறியத்தரவும்' சொல்லிவிட்டுச் சென்றது போலீஸ்.

போலீஸ் போய் சிலமணித்தியாலங்களின் பின் மாஸ்டர் தலையைச் சுற்றி விழுந்தார். வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டிருந்தார். மனோவைத்திய நிபுணர்களும் பரிசோதனை செய்து எங்கும் குறை கோளாறு இல்லையென கை விரித்தனர். மதுபானங்களின்மேல் விருப்பமின்மையை ஏற்படுத்தும் மாத்திரைகளைக் கொடுத்தனுப்பினர். மாஸ்டர் வீடுவந்தார். மாத்திரைகளைக் குடிக்க மறுத்தார். வசந்தா சாப்பாட்டுடன் கலந்து கொடுத்த போதும் கண்டுபிடித்து வசந்தாவை அடித்துத் துன்புறுத்தினார். மாத்திரைகளைக் கொண்டுபோய் டாய்லட்டினுள் போட்டார்.

குடி தொடர்ந்தது. குடிக்காது போனால் கை நடுங்கும். சிறிய பொருட்களை எடுக்கவோ பிடிக்கவோ முடியாது. எழுத முடியாது. குடி தீவிரமாகியது. குடியே அவரது இயங்கு சக்தியானது.

'என்னண்ண... இண்டைக்குத் திருந்தும் நாளைக்குத் திருந்தும் எண்டுபாத்தா.. இனித் திருந்திறத்துக்கு இடமில்லை,விட்டுட்டுடிவோர்ஸ் எடுத்துண்டு போயிடலாம் எண்டு யோசிக்கிறன். பிள்ளையளின்ரை எதிர்காலம்..?'

'அப்படி முடிவெடுக்காதீங்க... மாஸ்டருக்கு ஆரு சொல்லுறது? என்னத்தச் சொல்லுறது? சொல்லப் போனால் சொல்லுவார், 'படிச்சனான்' 'பட்டதாரி' 'படிப்பிச்சனான்' எண்டு. விதண்டாவாதம் பேசுவார். நீங்கள் டிவோர்ஸ் எடுக்கிறதால உங்க பிரச்சினை தீர்ந்துவிடாது. அத்தோட மாஸ்டர் திருந்தப் போறதுமில்லை. நீங்கவிட்டிட்டுப் போனா மாஸ்டரின்ர நிலமை..?'

'வசந்தாக்கா இவ்வளவு காலமும் இந்தக் கொடியவனிட்ட கிடந்து சித்திரவதைப்பட்டீங்க. இப்ப வருத்தக்காரனாகின பிறகு விட்டிட்டுப்போனா உங்களைத் தேடிவந்துகொண்டேயிருப்பார். அவருக்கு இப்ப தனியா இயங்க இயலாது. உங்க முடிவு உங்களுக்கு நல்லது. நாளைக்கு மாஸ்டர் அநாதையா தெருவில சாகிறதப் பார்த்துக்கொண்டிருக்கப் போறீங்களா?' என் மனைவியும் தன் பங்கை முன்வைத்தாள்.

மாஸ்டர் ஒருநாள் தனியாக வாசித்துக் கொண்டிருக்கும் போது தூரத்தே கிடந்த சிகரட் லையிட்டரை எடுத்துத்தரும்படி கடைசிப் பிள்ளையிடம் கேட்டிருக்கின்றார். பிள்ளைக்குநான்குவயதிருக்கும். பிள்ளை லையிட்டரை எடுத்துச் சிகரட் ஒன்றையும் தன் வாயில் வைத்துப் பத்துவது போல் பாவனை பண்ண, மாஸ்டர் எழுந்து பிள்ளையை உதைத்திருக்கின்றார்.பிள்ளை நிலத்தில் உருண்டு வீரிட்டது. வசந்தா ஓடிவந்து பிள்ளையைத் தூக்கி மாஸ்டரை ஏசியிருக்கின்றாள். 'பிள்ளைகளுக்கு என்ன பழக்கமடி பழக்கி வைச்சிருக்கிற?' காலாலும், கையாலும் அடித்திருக்கின்றார். பிள்ளையைத் தோளில் போட்டுக்கொண்டே மாஸ்டரைத் திருப்பி அடித்திருக்கின்றாள். இருவரிடையேயும் இழு



படிப்பகம்

www.padippakam.com



பறி கைகலப்பு. விழுந்து, எழுந்து, உக்கிரமானச் சண்டை.

பிள்ளையொன்று என் வீட்டுக்கதவைத் தட்டிக் கொண்டு 'மாமா.... மாமா.... ஓடிவாங்க, அம்மாக்கு அப்பா அடிச்சு மண்டை ஓடைஞ்சு போச்சு' அபயக் குரல் கொடுத்தது.

என்னபழி செய்த பக்கத்தில் குடி வந்தேனோ?' மனதிற்குள் நச்சரித்துக்கொண்டேன். அயலவன் என்ப தால் அவர்களுக்கு முதலுதவி, புகலிடம், பாதுகாப்பு, பந்தோபஸ்து, கண்காணிப்பு, போர்நிறுத்தம், சமாதா னம், பேச்சுவார்த்தை, எல்லாம் நானாகி எனதாகியி ருப்பதால் ஸ்தலத்திற்கு விரைந்தேன். மனைவி என் னைத் தடுக்க முயன்றும் முடியாமல் போகவே என் னோடு வந்தாள்.

பெண்கள் மீது ஆண்கள் பிரயோகிக்கும் வன் முறைக்கு எதிரான எண்ணமும் சிந்தனையும் கொண் டவன் என்பதால் என் கடமையாகவும் நினைத்தேன்.

குடும்பத் தலைவனான அவர், தன் பொறுப்புக் களை மனைவியின் தலையில் சுமத்திவிட்டு தன் வருமானத்தின் பெரும்பகுதியை குடிப்பதிலும், புகைப் பதிலும் கரைத்துக்கொண்டு காரணமின்றி அடித்துக் கொடுமைப்படுத்துவதிலும் உடலுறவு கொள்வதிலும் தான் ஆண் என்பதை அடையாளப்படுத்திக்கொண்டு ஊதாரித்தனமாய் வாழும் ஊத்தைவாளி பிரகிருதியை என்னதான் செய்வது?

எனக்குள் எழுந்த கோபாவேஷம் மாஸ்டரை அடித்துத் துவைத்துப்பிழிய வேண்டும் போல....

பிள்ளைகள் குய்யோ முறையோவென அழுது கொண்டிருந்தனர். வசந்தாவின் தலையிலிருந்து இரத் தம் வடிந்துகொண்டிருந்தது. என்னிலும் பார்க்க மாஸ் டரின் மகள் இந்நாட்டு மொழி அதிகம் பேசுமென்ப தால் ஆம்புலன்ஸிற்குப் போன் செய்வித்தேன். நானும் என் மனைவியும் சேர்ந்து வசந்தாவைத் தூக்கி மேலாடையை மாற்றி வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லத் தயார்படுத்தினோம்.

'இந்த ஆண்மாரிய நீ கைதொட்டு தூக்கியிட்ர நீயே கொண்டுபோய் வைச்சிரு. இனி எனக்குத் தேவையில்லை.'

என்மனைவி மாஸ்டரை வார்த்தைகளால் வெட் டி னாள். குத்தினாள். நானும் தாறுமாறாய் ஏசி அடிக் கப் போனேன்.

'நீயே கை ஓங்கறயா என்னை அடிக்க?' எதிர் பாராத அதிர்ச்சியுடன் கேட்டார்.

'காரணம் நீங்கதான். ஒப்புக்கொள்ளுறீங்களா?'

மாஸ்டர் மௌனமானார்.

ஆம்புலன்ஸ் வந்தது.

கூடவே அவசர போலீஸும் வந்தது. ஸ்ட்ரச் சரில் வைத்து ஆம்புலன்ஸில் ஏற்றினார்கள். முறைப் பாட்டிற்கும், மொழிபெயர்ப்புக்குமாக மகளையும் ஏற்றி ஆம்புலன்ஸ் பறந்தது.

போலீஸ் மாஸ்டரிடமும் எங்களிடமும் வாக்கு மூலம் பெற்றனர்.

(நன்றி புதியபார்வை)








படிப்பகம்

www.padippakam.com




# ரதீக்கா ஜுவலறி



22 கரட் தங்கம்

அதிஸ்டக் கற்கள்

புத்தம் புதிய சிங்கப்பூர் நகைகள்

பூவையரின் புன்னகைக்கு மேலும் மெருகூட்டுவது ரதீக்காவின் பொன்னகைகள்

**Tel: (416) 492-GOLD / (416) 492-4653**

**2190 Warden Ave., Scarborough, Canada**



வேலணை மத்திய மகாவித்தியாலயப் பழைய மாணவர் சங்க
'கலாதீபம் 99' கலைவிழாவிற்கு

## இந்திய கலைக்கல்லூரி-கனடா

தமது நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்கின்றது.

**இந்திய கலைக் கல்லூரி**

**14 James Edward Drive**
**Markham Ontario**
**L3S 1Y8**



**Tel: (905) 472-1022**




படிப்பகம்

www.padippakam.com



# TEAM OF CONSULTING SERVICES

## TAX SERVICE

கடந்த ஆண்டுகளில் பூர்த்தி செய்யாத வரிப் பத்திரங்களை பூர்த்தி செய்து கொடுத்தல்!

எதிர்கால வருமான வரி சேமிப்பு ஆலோசனை வழங்குதல்.

கட்டிய வருமான வரியை கூடிய அளவில் மீளப் பெற்றுக் கொடுத்தல்.

## AUTOMOBILE ACCIDENT CLAIM

வாகன விபத்துக்கு உள்ளானோர்களக்குத் தகுதியான சட்ட ஆலோசகரை ஒழுங்குசெய்து கொடுத்தல்.

விபத்துக்குள்ளாகியவர்களுக்கான சம்பள இளப்பீடு, உரிய நஷ்டஈடு உரிய நேரத்தில் பெற்றுக்கொடுத்தல்.

அனுபவம்-திறமை-நன்மதிப்பு

## EDUCATION SAVING PLAN

அரச அங்கீகாரம்பெற்ற புலமைப்பரிசில்திட்டம்

Registered Education Saving Planஇல் உங்கள் பிள்ளைகளுக்கு சேமிப்பை உருவாக்குவதன்மூலம் பிள்ளைகளின் உயர்கல்வி ஒளிமயமாகும்.

RESPஇல் சேமிப்பை உருவாக்குதன் மூலம் அரசின் 20% நன்கொடையை $400வரை வருடம் ஒன்றுக்குப்பெறமுடியும். நிதிவைப்புகள் அனைத்தும் அரச உத்தரவாதமுள்ள நிதிவைப்புக்களில் சேமித்து வைக்கப்படும்.

## MORTGAGE REAL ESTATE

வீடு வாங்கத் தேவையான நிதியை வங்கிகளூடாக குறைந்த வட்டி வீதத்தில் பெற்றுக்கொடுத்தல்.

குறைந்த வட்டி வீதத்தில் உங்கள் வீட்டு Mortghageஐ புதுப்பித்துக்கொடுத்தல்.

வீடு வாங்குவதற்கு முன்பே Mortgageஐ ஒழுங்குசெய்து கொடுத்தல்.

வீடு வாங்குவதற்கோ அல்லது விற்பதற்கோ தகுதியான தமிழ் முகவர்களை ஒழுங்குசெய்து கொடுத்தல்.

வீடு வாங்குவது சம்பந்தமான ஆலோசனை பெறுதல்.

நம்பிக்கை-நாணயம்-உத்தரவாதம்

**தொடர்புகளுக்கு: Yogi Yogarajah**

**Tel: (905) 277-5996** **Cell: (416) 725-6167**



படிப்பகம்

www.padippakam.com



# தீவகம்-கல்விநிலை

Dr. கா.குகபாலன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
யாழ். பல்கலைக்கழகம்

மனிதன் உயிர் வாழ்வதற்கு உணவு, உடை, உறையுள் என்பன அத்தியாவசியப்படுவது போல அவன் திருப்திகரமான வாழ்க்கை நடாத்துவதற்கு கல்வி அவசியமானது மட்டுமல்லாது மனிதனது அடிப் படை உரிமைகளுள் ஒன்றாகவுமுள்ளது. பொதுவாகத் தீவகமக்களின் கல்வி வளர்ச்சியில் திண்ணைப்பள்ளி, நிலாப்பள்ளி, கோவிற்பள்ளி, பட்டறைப்பள்ளி, குரு குலக்கல்வி எனப் பல்வேறு வகைப்பட்ட கல்வி முறை கள் காணப்பட்டிருந்தன. இக்கல்வி முறைகளானது தீவகப்பகுதிக்கு மட்டுமல்லாது தமிழர் கல்வியின் வளர்ச்சியோடும் தொடர்புடையது.

தீவுப்பகுதி கல்வி வளர்ச்சியில் குருகுலக்கல்வி யும், திண்ணைப் பள்ளியும் முக்கியத்துவம் பெற்றிருந் தன. குறிப்பாக இக்கல்வியானது ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் வசதியான நேரத்தில் கற்கும் முறையாகவிருந்தது. பெற்றோர்கள் அவ்வாசிரியருக்கு பணமாகவோ அன்றில் பொருட்களாகவோ ஊதியம் வழங்கிவந்ததாகத் தெரியவருகின்றது.கற்றோரின் இல் லங்கள் கல்விச்சாலைகளாகக் காட்சியளித்தன. குரு-சிஷ்ய தொடர்புமுறை இறுக்கமாகப் பின்பற்றப்பட்டு வந்துள்ளது. திண்ணைப்பள்ளியில் முதலில் எழுத வாசிக்கக் கற்றுக்கொடுத்தபின்னர் இலக்கியம், இலக் கணம், புராணங்கள் போதிக்கப்பட்டன. குறிப்பாக நெடுந்தீவில் பிராடி, மகாவிலடி, காட்டுப் பூவரசடி, கந்தசாமி கோவிலடி, ஆஸ்பத்திரியடி போன்ற இடங் களில் திண்ணைப்பள்ளிகள் இயங்கி வந்தன எனத் தெரிவிக்கின்றபோதிலும் கல்வி கற்பித்தோரின் பெயர் களைத் தெரிவிக்கத் தவறுகின்றனர். நயினாதீவில் நாகமணிப் புலவரின்பேரன் வேலாயுதம் என்பவராலும் க.வேலுப்பிள்ளை என்பவராலும் மேற்படி திண்ணைப் பள்ளிகள் நடாத்தப்பட்டன. தற்போது நாகபூசணி வித்தியாலயம் அமைந்துள்ள இடத்தில் திண்ணைப் பள்ளி இயங்கியதாக தெரிவிக்கப்படுகிறது. அனலை தீவில் குழந்தை உபாத்தியாயர் ஒரு திண்ணைப்பள் ளியை நடாத்தினார். வேலணை மேற்குப்பகுதி சைவ மும் தமிழும் செழித்து வளர்ந்த பகுதியாகக் காணப் படுகின்றது. ஆறுமுகநாவலரின் கல்வியுடன் கூடிய நண்பர்கள் இப்பகுதியில் இருந்திருக்கின்றனர். இங்கு வி.கந்தப்பிள்ளை, செ.கனகசபாபதி போன்றோர் திண் ணைப்பள்ளி மூலம் மாணவர்களை உருவாக்கியவர் களில் இருவராவர். சைவம் வளர்ந்த இடமாதலால் கோவிற்பள்ளிகள் அமைத்துப் புராணங்கள், இராமாய ணம், மகாபாரதம், போன்றவற்றைப் பாட்டும் பயனு மாக மக்களுக்கு முறைசாராக் கல்வியடிப்படையில் தம்பு உபாத்தியார், நாகலிங்க உபாத்தியார் போன் றோர் வழங்கிவந்தனர். வேலணை வங்களாவடியில் வேலாயுதம் என்பவரும் வேலணை கிழக்கில் வேலுப் பிள்ளை என்பவரும் திண்ணைப்பள்ளியினை நடாத்தி வந்துள்ளனர். புங்குடுதீவில் திண்ணைப்பள்ளி, கோவிற்பள்ளிகள் காணப்பட்டபோதிலும் அதனை நடாத்தியவர்கள் யார் என்பதை அறியமுடியவில்லை. புங்குடுதீவு மேற்கிலுள்ள அமெரிக்கன் மிஷன் பாடசாலை ஆரம்பத்தில் ஒரு திண்ணைப்பள்ளிக் கூடமாகவே இருந்துள்ளது என்பர்.

தீவுப்பகுதியில் கல்விநிலை முனைப்பெடுத்து வளர்ந்து வந்தமைக்குச் சைவ உணர்வுடன் கூடிய அறிவினை வழங்குவதன் வாயிலாக ஆசிரியப் பரம்பரைஉருவாவதற்கு பெருந்தொண்டாற்றிய சைவச் சான்றோரின் தன்னலமற்ற பணியே காரணமென்றால் மிகையாகாது. இத்தகைய முறைசாராக் கல்வியினூ டாகஇலக்கியம், இலக்கணம், இதிகாசம், புராணங்கள் போன்றவற்றில்மிகத்திறமை வாய்ந்த பலரைத் தீவகம் பெற்றிருந்தது.

ஐரோப்பியரின்வருகையால் முறைசார்ந்த கல்வி அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும் மேல் நாட்டுக்கல்வி, அரசதொழில், பதவியுயர்வு போன்றவற் றின் வாயிலாகமதம் மாற்றமும் வேகமாக நடைபெற்று வந்தது. அத்துடன் அதிகாரப்பலமும் மதமாற்றத்தி னைத்தூண்டியது. பொதுவாக போர்த்துக்கீசர், ஒல் லாந்தர் கல்விக்கான பொறுப்பினை மதகுருமாரிடம் ஒப்புவித்ததுடன் அரசு ஆதரவும் வழங்கியது. ஆங்கி லேயர் ஆட்சியில் பலமிஷனறிமாரின் முயற்சியால் பல பாடசாலைகள் தீவுப்பகுதி உட்பட யாழ்ப்பாண மாவட் டத்தில் நிறுவப்பட்டன. தீவுப்பகுதியில் முதன்முதலாக அமைக்கப்பட்ட பாடசாலை வங்களாவடிச் சந்திக்கு அண்மையிலுள்ள பாடசாலையாகும். இது 1833ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது. 1833-1836ஆம் ஆண்டிடைவெளியில் 5 மிஷனறிப் பாடசாலைகள் தீவுப்பகுதியில் நிறுவப்பட்டுள்ளன.

தீவுப்பகுதியில் 16 கிறிஸ்தவப்பாடசாலைகள் நிறுவப்பட்டிருக்கின்றன. அப்பாடசாலைகள் மூன்றி னைத்தவிர ஏனையவை சென்ற நூற்றாண்டின் பின்ன ரைப்பகுதிகளில் நிறுப்பட்டனவாகும். நெடுந்தீவு (2), ஊர்காவற்துறை (6), வேலணை (2), எழுவைதீவு (1), புங்குடுதீவு (3), மண்டைதீவு (3), ஆகிய கொத்தணி களில் இப்பாடசாலைகள் காணப்படுகின்றன. பொது வாக இப்பாடசாலைகளின் பரம்பலுக்கும் கிறிஸ்தவர்க ளின் பரம்பலுக்குமிடையில் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. ஊர்காவற்துறை கொத்தணிப் பகுதிகளிலேயே கிறிஸ்தவ பாடசாலைகள் அதிகமுள.

1872ஆம் ஆண்டு நிறுவப்பட்ட ஊர்காவற் துறை புனித அந்தோனியார் கல்லூரி ஆரம்பத்தில் ஆங்கிலப்பாடசாலயாகவே ஸ்தாபிக்கப்பட்டது. அக் காலத்தில் தீவகமக்களின் உயர்கல்வி மற்றும் ஆங்கி லக்கல்விக்கு இக்கல்லூரியே மிகப்பெரும் தொண் டினை ஆற்றியுள்ளது. தீவகப்பகுதிக்கும் யாழ்ப்பாணத் திற்குமிடையில் கடற்போக்குவரத்தினூடாகவே செல்ல வேண்டியிருந்ததால் அந்தோனியார் கல்லூரியை மாணவர்கள் தெரிவு செய்தனர். இக்கல்லூரியில் கற்ற மாணவர்கள் தேசிய ரீதியில் மிகவுயர்ந்த நிலையில் வாழ்ந்துள்ளனர்.

புனித அந்தோனியார் கல்லூரி 1950கள் வரை யாழ்ப்பாணத்திலுள்ள முன்னணி கிறிஸ்தவப் பாட சாலைகளுக்கிணையாக வளர்ச்சிபெற்றிருந்தது. பண் ணைப்பாடசாலைகளுக்கிணையாக வளர்ச்சி பெற்றிருந் தது. பண்ணைப்பாலத்திறப்பு, போக்குவரத்து வசதிக ளின் விரிவாக்கம், நகரில் இந்துப்பாடசாலைகளின் வளர்ச்சி, கிறிஸ்தவ மிஷனறிமார்கள் கல்வி வளர்ச்சி யில் ஆர்வம் குன்றியிருந்தமை, தனியார் பாடசாலை கள், அரசபாடலைகள் நிறுவப்பட்டமை போன்ற பல காரணங்கள் இக்கல்லூரி வலுவிழந்ததற்குரிய காரணிகளாகும். இருப்பினும் தற்போது இப்பாட சாலை 1ஏபி தரத்தினைக் கொண்டிருக்கின்றது.

தீவகத்தின் முதற்பெண்கள் பாடசாலையாக



படிப்பகம்

www.padippakam.com



ஸ்தாபிக்கப்பட்டது. ஊர்காவற்றுறை புனித மரியாள் பெண்கள் பாடசாலையேயாகும். இப்பாடசாலை தரம் 2ஐக் கொண்டது. சிறிய புஸ்பமகளிர் கன்னியர் மடம் வித்தியாலயமே தற்போது பெண்கள் பாடசாலைகளில் பெரிதாகும்.இது 1சி தரத்தினைக் கொண்டது. இவை தவிர ஏனைய பாடசாலைகள் தரம் 2, 3ஐக் கொண் டவையாகும்.

வேலணை வங்களாவடிச்சந்தியில் கிறிஸ்தவ மிசனரிமார் தற்போது வட்டுக்கோட்டையில் அமைந் திருக்கும் யாழ்ப்பாணக்கல்லூரியை அமைப்பதற்கு முயற்சிசெய்த போதிலும் உள்ளூர் மக்களின் எதிர்ப் பினால் அது கைக்கூடாமற் போனது. அதன் பின்னரே வட்டுக்கோட்டையில் அமைக்கப்பட்டது. கல்லூரி நிறு வப்பட்டிருக்கும் பட்சத்தில் மதமாற்றங்கள் ஏற்பட வழி வகுத்திருக்குமேயாயினும் தீவகமக்களின் கல்வி வளர்ச்சிக்குஇதுபெரிதும் தொண்டாற்றியிருக்கும் எனப் பலர் அபிப்பிராயப்படுகின்றனர்.

மிஷனரிப்பாடசாலைகள் இயங்கத் தொடங்கிய காலங்களில் இந்துக்களும் தமது பிள்ளைகளுக்கு அப்பாடசாலைகள் மூலமே கல்வியைப்பெற்றுக் கொடுத்தனர். மிஷனரிப்பாடசாலைகளின் வளர்ச்சி சைவசமயத்தவர்களின் மதமாற்றத்திற்கும் கலாசாரப் பண்புகளுக்கும் பெரிய சவாலாக அமையும் எனக் கருதிய சைவப்பெரியோர்கள் சைவப்பாடசாலைகளை நிறுவினர். தீவுப்பகுதியில் வேலணையில் 1880ஆம் ஆண்டு சைவப்பிரகாச வித்தியாசாலையை திரு.வி. கந்தப்பிள்ளை என்பவர் ஸ்தாபித்தார். இதுவே முதற் சைவப்பாடசாலையாகும். அக்காலச் சைவப்பெரி யோர்கள் பொதுமக்களுடன் இணைந்து காணிகளை வழங்கியும் கட்டடங்களைக் கட்டிக்கொடுத்தும் ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்காக பிடிய ரிசி பெற்றும்பாடசாலைகளைஇயங்கவைத்தனர். இதன் பின்னர் தீவுப்பகுதிகளில் சைவப்பாடசாலைகள் பல வற்றை நிறுவி னர். சைவப்பாடசாலைகளை நிர்வகிப் பதற்கு நிதிப்பிரச்சனையால் நிர்வாகிகள் சிரமப்படவே சைவவித்தியாவிருத்திச் சங்கம் இப்பாடசாலைகளை பொறுப்பேற்று நடாத்திவந்தது. சைவவித்தியாவிருத் திச் சங்கம் நெடுந்தீவில் 6பாடசாலைகளையும் நயி னாதீவில் 2பாடசாலைகளையும் மண்டைதீவு, அனலை தீவு, எழுவைதீவில் தலா ஒரு பாடசாலையையும் வேலணை தீவில் 11பாடசாலைகளையும் புங்குடுதீவில் 9 பாட சாலைகளையும் நிர்வகித்து வந்துள்ளது.

திரு.சி.டபிள்யூ. டபிள்யூ கன்னங்கரா கல்வி அமைச்சராகப்பணி புரிந்தபோது பாலர்கல்வி தொட்டு பல்கலைக்கழகம் வரை இலவசக் கல்வியினைப் போதிக்கவேண்டும் என்ற கோட்பாட்டிற்கிணங்க வசதி படைத்தோர் மட்டுமல்லாது ஏழைச்சிறார்களும் தாய் மொழிக்கல்வியையும் ஆங்கிலக்கல்வியையும், உயர் கல்வியையும் பெற்றுக்கொள்ளும் முகமாக மத்திய பாடசாலைகள் ஆரம்பிக்க வேண்டும் என்பதை வலியு றுத்தினார். அக்காலத்தில் தீவுப்பகுதியின் பிரதிநிதி யான திரு.வைத்திலிங்கம் துரைச்சுவாமியின் முயற்சி யால் 1945ஆம் ஆண்டு வேலணையில் மத்திய கல் லூரி ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலையானது புலமைப்பரிசில் சித்திபெறுவோரைக் கவர்ந்திழுத்த மையால் நன்மாணாக்கரைப்பெற்றுத்தீவகத்தின் கல்வி வளர்ச்சிக்குப் பெருந் தொண்டாற்றியுள்ளது. 1960களின் பிற்பகுதியில் இருந்து தீவக மாணவர்கள் நகர்ப்பாடசாலைகளில் அநுமதியைப் பெற்றுக்கொள் ளும் வாய்ப்பு அதிகரித்தமையாலும் நாட்டின் அரசியற் சூழ்நிலையாலும் சார்பு ரீதியாக இக்கல்லூரி தன் முதன்மைத் தன்மையை இழந்துவிட்டது. கடந்த சில வருடங்களுக்கு முன்னர், இக்கல்லூரியை உருவாக்கு வதில் ஆர்வம் கொண்டிருந்த சேர். வைத்திலிங்கம் துரைசுவாமியின் பெயரினைத் தாங்கி சேர் வைத்தி லிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயம் எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு தீவுகளின் கல்வி வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்ல கனிஷ்ட ஆங்கில வித்தியாலயங்கள் நிறுவப்பட்டன. புங்குடுதீவு, நயினாதீவு, மண்டைதீவு, நெடுந்தீவு ஆகிய இடங்களில் மேற்படி கனிஷ்ட மகா வித்தியால யங்கள் 1946ஆம் ஆண்டில் இயங்கத்தொடங்கின. இவை தவிர அரசாங்கத்தினால் பாடசாலைகள் அரி தாகக் காணப்படுமிடங்களில் கனிஷ்ட வித்தியாலயங் கள் ஆங்காங்கே நிறுவப்பட்டன.

தாய்மொழிக் கல்விக் கொள்கைக்கிணங்க 1958ஆம் ஆண்டு உயர் வகுப்புக்களில் தாய்மொழி மூலம் கல்வி கற்பிக்கப்படத் தொடங்கியது. 1960ஆம் ஆண்டு அரசாங்கம் சகல பாடசாலைகளினது நிர்வா கத்தையும் உரிமையினையும் பொறுப்பேற்றது. அதா வது தனியார் பாடசாலைகள், மதரீதியில் அமைந்த பாடசாலைகள் ஆகியவற்றையே பொறுப்பேற்றது. தீவுப்பகுதியில் புனிதஅந்தோனியார் கல்லூரி தவிர்ந்த ஏனையபாடசாலைகள் யாவும்அரசின் உடமையாயிற்று. காலப்போக்கில் அக்கல்லூரரியையும் அரசு பொறுப் பேற்றது.

1991ஆம் ஆண்டு கல்வித்திணைக்கள நிர் வாக அறிக்கையின்படி தீவகத்தில் 62 பாடசாலை களும் 16236 மாணவர்களும் 610 ஆசிரியர்களும் கடமையாற்றினர். மாணவர் ஆசிரியர் விகிதம் 26. 6:1 ஆகும். பாடசாலைகளை நான்கு பிரிவுகளாக வகைப் படுத்தலாம். 1ஏபி, 1சி, 2, 3 தரங்கள் என்பனவே அவையாகும்.

1991ஆம் ஆண்டு கல்வியாண்டில் 1ஏபி தரத் தினைக்கொண்ட பாடசாலைகள், அங்கு கல்விபயின்ற மாணவர்கள், கற்பித்த ஆசிரியர்கள், ஆசிரியர் மாணவர் விகிதம் என்பன பின்வருமாறு,

அட்டவணை 1

### 1ஏ பி பாடசாலைகள்

| பாடசாலைகள் | மாணவர்கள் | ஆசிரியர் | மா/ஆ விகிதம் |
|---|---|---|---|
| புனித அந்தோனியார் கல்லூரி | 480 | 17 | 28.2 |
| சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி ம.ம. வித்தியாலயம் | 1094 | 40 | 27.4 |
| புங்குடுதீவு மகாவித்தியாலயம் | 623 | 21 | 29.7 |

ஆதாரம்: நிர்வாக அறிக்கை, கல்வித்திணைக்களம் 1991

மேற்படி1ஏபி பாடசாலைகள் க.பொ.த. (உ/த) த்தில் விஞ்ஞானம், கலை வர்த்தகம் ஆகிய வகுப்புக் களை கொண்டமைந்தது குறிப்பிடத்தக்கது.

1சி பாடசாலைகள் க.பொ.த. (உ/த) வகுப் பில் கலை, வர்த்தகம் ஆகிய பிரிவுகளைக் கொண்ட மைந்ததாகும். இப்பாடசாலைகளின் விபரங்கள் பின் வருமாறு அமைந்துள்ளது.

அட்டவணை 2

| பாடசாலைகள் | மாணவர்கள் | ஆசிரியர் | மா/ஆ விகிதம் |
|---|---|---|---|
| நெடுந்தீவு மகாவித்தியாலயம் | 310 | 17 | 18.2 |
| கரம்பன்சண்முகநாதன் ம.வி. | 372 | 17 | 21.9 |
| சிறிய புஸ்பமகளிர் கன்னியர் மடம் மகாவித்தியாலயம் | 383 | 15 | 25.5 |
| நயினாதீவு மகாவித்தியாலயம் | 281 | 12 | 23.4 |
| மண்டைதீவு மகாவித்தியாலயம் | 406 | 22 | 18.5 |



படிப்பகம்

www.padippakam.com



ஆதாரம்: நிர்வாக அறிக்கை, யாழ். கல்வித் திணைக்களம் 1991.

இவற்றைவிடத் தரம் இரண்டு, தரம் மூன்று பாடசாலைகள் கைவிடப்பட்ட கொத்தணி அமைப்பின் பிரகாரம் பின்வருமாறு அமைந்துள்ளது.

அட்டவணை 3

தரம் 2, தரம் 3 பாடசாலைகள்

| பிரிவு | தரம் 2 | தரம் 3 |
|---|---|---|
| நெடுந்தீவு | 02 | 07 |
| ஊர்காவற்துறை | 03 | 05 |
| வேலணை | 05 | 05 |
| நயினாதீவு | 03 | 04 |
| புங்குடுதீவு | 05 | 09 |
| மண்டைதீவு | 02 | 04 |
| மொத்தம் | 20 | 34 |

ஆதாரம்: நிர்வாக அறிக்கை, யாழ். கல்வித்திணைக்களம் 1991.

இப் பாடசாலைகளின் தரம் 2இல் க.பொ.த. சாதாரண தரவகுப்புக்கள்வரை உண்டு. தரம் 3 பாடசாலைகள் க.பொ.த. சாதாரணதர வகுப்புக்களுக்குக் குறைவான வகுப்புக்களைக்கொண்டமைந்ததாகும்.

**இன்றைய கல்விநிலை**

கடந்த அரைநூற்றாண்டு காலமாக தீவகத்தின் கல்வி வளர்ச்சி இருவழிகளிற் சிறப்படைந்து காணப்பட்டது.

1. யாழ்ப்பாண நகரத்திலும் குடாநாட்டுப் பாடசாலைகளிலும் கல்விபயில்வதன் வாயிலான கல்வி வளர்ச்சி.

2. தீவகப் பாடசாலைகளில் ஏற்பட்ட கல்வி வளர்ச்சி என இருவகைப்படும்.

அதாவது அரச ஊழியர்கள், ஆசிரியர்கள், மற்றும் வசதிபடைத்தவர்கள் தமது பிள்ளைகளின் கல்வியினைத் தீவுப்பகுதிக்கு வெளியிலுள்ள பாடசாலைகள் மூலம் கணிசமான பெறுபேறுகளைப் பெற்று வருகின்றனர். குறிப்பாக யாழ். இந்துக்கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, யாழ் இந்து மகளிர் கல்லூரி வேம்படி மகளிர் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி, மத்திய கல்லூரி, மகாஜனக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி போன்ற கல்லூரிகள் தீவக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக மருத்துவர்களையும், பொறியியலாளர்களையும் மற்றும் கலைப்பட்டதாரிகளையும் ஏனைய துறைசார் வல்லுநர்களையும் தீவகத்திற்கு வழங்கியுள்ளன.

தீவகப் பாடசாலைகளைப் பொறுத்தவரை புனித அந்தோனியார் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இக்கல்லூரி தீவகமக்களின் கல்விக்கும் உயர்வுக்கும் அரும்பெரும் தொண்டாற்றியுள்ளது. ஆனால் காலப்போக்கில் வேலணை மத்திய கல்லூரியின் வளர்ச்சி, யாழ்.குடாநாட்டுக்குச் செல்லும் பண்பு அதிகரித்துக்காணப்படல், பிரபல்யமிக்க ஆசிரியர்களின் இடப்பெயர்வு போன்ற பல காரணிகள் இக்கல்லூரியின் வளர்ச்சியினைப் பாதித்துள்ளன என்றே கூற வேண்டும். 1970கள் வரை விஞ்ஞான, மற்றும் கலைத்துறைகளுக்குக் கணிசமான மாணவர்களை அனுப்பிய போதிலும் படிபப்படியாக இது குறைந்து கொண்டு செல்கின்றது.

1960களில் வேலணை மத்திய கல்லூரி விஞ்ஞான, கலைத்துறைகளுக்கு மாணவர்களைத் தயார் செய்து அனுப்பிவந்தது. தற்போது இக்கல்லூரியில் இருந்து வருடம்தோறும் ஒருசில மாணவர்களே பல்கலைக்கழகம் செல்கின்றனர். புங்குடுதீவு மகாவித்தியாலயம் விஞ்ஞானத்துறையில் அக்கறை கொள்ளவில்லை.விஞ்ஞர்னக்கல்வியை கற்கவிரும்பும் மாணவர்கள் யாழ். நகரில் வேறு பாடசாலைகளிற் தம்மை இணைத்துக் கொள்கின்றனர். கலைத்துறைக்கல்வி போதிக்கப்படுகின்ற போதிலும் பல்கலைக்கழகத்திற்கு மிகச்சிறிய எண்ணிக்கையினரே நுழைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தகது.

1 சி தரத்தினைக் கொண்ட நயினாதீவு மகா வித்தியாலயம் சார்பு ரீதியாக பல்கலைக்கழகத்திற்கு கூடிய மாணவர்களை அனுப்பி வருகின்றது. குறிப்பாக வர்த்தகம், மற்றும் கலைத்துறைகளுக்கு இப் பாடசாலையில் இருந்து மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். மண்டைதீவு, நெடுந்தீவு மகாவித்தியாலயங்கள் 1970களில் ஒருசில மாணவர்களைப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிய போதிலும் தற்போது இந்நிலை குறைவடைந்து செல்கின்றது.

பொதுவாக ஒரு பாடசாலையின் வளர்ச்சி நிலையை ஆண்டு ஐந்திற்கான புலமைப்பரிசில் பெறுபேறுகள், க.பொ.த.(சா/த) பரீட்சைப்பெறுபேறுகள், க.பொ.த. (உ/த) பரீட்சை பெறுபேறுகள் என்பவற்றினூடாக வெளிப்படுகின்றன. தீவகப்பாடசாலைகள் மேற்குறித்த மூன்று பெறுபேறுகளிலும் ஏனைய கோட்டங்களோடு ஒப்பிடுமிடத்து பின்தங்கியதாகவே இருக்கின்றன. இத்தகைய நிலைக்கு பிரதான காரணிகளாக அமைவது பௌதீக, பண்பாட்டுக் காரணிகளே ஆகும். பௌதீக ரீதியாக இப்பிரதேசம் தனித்தனிக் கூறுகளாகக் காணப்படுகின்றமை கல்வி வளர்ச்சிக்கான பரந்த செயற்பாடுகளை மட்டுப்படுத்தி வைத்திருக்கின்றது. பண்பாட்டு ரீதியாக மூன்று காரணிகள் இப்பிரதேசக் கல்வி வளர்ச்சியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன.

1. பெற்றோர்
2. மாணவர்கள்
3. கல்வித்திணைக்களத்தினரும்ஆசிரியர்களும்

1. தீவுப்பகுதியில் 70 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழ்வாழ்ந்து வருகின்றனர். இவர்களால் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி ஊக்கம் கொடுக்கமுடியவில்லை. இவர்கள் மாணவர்களின் கல்வி வளர்ச்சி பற்றிப்பெரும் சிந்தனை கொண்டவர்கள் எனக் கூறமுடியாது. வசதி படைத்தவர்களும் அரச தொழில்களில் ஈடுபட்டவர்களும் தமது பிள்ளைகளை யாழ்ப்பாண நகரப்பாடசாலைகளிற் சேர்த்துவிடுகின்றனர். இவர்களில் கணிசமானோரே தீவுப்பகுதி மக்களின் கல்வி உயர்வுக்குக் காரணமாகவிருந்துள்ளனர். வளவாய்ப்புக்கள் குறைந்த தீவுப்பகுதிகளில் தொழில்வாய்ப்புக்கள் குறைவாகவிருப்பதால் கணிசமான குடும்பத்தலைவர்கள் வெளிமட்டங்களில்தொழில் புரிந்து வருகின்றனர். இந்நிலையில் பிள்ளைகளின் கல்வியில் குடும்பத்தலைவிபெரும் அக்கறை கொண்டவர்களாகவிருக்கவில்லை என்றே கூறவேண்டும்.

2. ஏனைய கோட்டங்களோடு ஒப்பிடுமிடத்து சார்பு ரீதியாகப் பாடாசலைகள் அதிகமாகவிருந்த போதிலும் கட்டடங்கள், நூல்நிலையங்கள், விளையாட்டுத்திடல்கள், தளபாடங்கள், கற்பித்தல் உபகரணங்கள் என்பன மிகவும் மட்டுப்படுத்தப்பட்டனவாக விருகின்றன. இவையும் கல்வி வளர்ச்சியைப் பாதிப்பன



படிப்பகம்

www.padippakam.com



வாகவுள்ளன. உதாரணமாக யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியும் புங்குடுதீவு மகாவித்தியாலயமும் அரசினால் வழங்கப்பட்ட தரத்தினைப் பொறுத்தவரை 1ஏபி பாடசாலை என்பது குறிப்பிடத்தக்கது.

3. விஞ்ஞானக் கல்விக்கான அத்திவாரம் தகர்க்கப்பட்டுள்ளது என்றே கூறவேண்டும். இதன் விளைவாகத்தீவகமாணவர்கள் கலைத்துறை, வணிகத் துறைக்கற்கை நெறிகளில் ஈடுபாடு கொள்ளவேண்டியுள்ளது.

4. மாணவர்களைப் பொறுத்தவரை பொதுவாக தீவகப் பாடசாலைகளிற் கற்பவர்கள் கல்விசார்புலமை குறைந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. கல்விசார்புலமையுள்ள மாணவர்கள் நகர் பாடசாலைகளுக்குச் சென்றுவிடுவதுதான் காரணம் என அத்துறையில் ஈடுபாடு கொண்டோர் தெரிவிக்கின்றனர். இந்நிலையாலேயே கல்விநிலை வீழ்ச்சியடைவதாகக் கொள்ளப்படுகின்றது.

5. மாணவர்கள் இடைவிலகல் யாழ்ப்பாண மாவட்டத்தின் ஏனைய கோட்டங்களோடு ஒப்பிடும் போது அதிகமாகவிருக்கின்றது. பெற்றோரின் நலிந்த பொருளாதாரநிலை பிள்ளைகள் தெரிவில் பார்க்க வேண்டிய நிர்ப்பந்தம், வெளிநாட்டுமோகம் அதிகரித்து இருத்தல், மாணவர்கள் தாம் கற்கும் வகுப்புக் கேற்ப தகுதியற்றிருத்தல், வீடுகளில் கல்வி கற்பதற்கான சூழல்காணப்படாமை போன்ற பல காரணங்களினால் ஆண்டு ஆறிலிருந்து படிப்படியாக ஆண்டு 11 வரை இடைவிலகல் அதிகரித்துச் செல்கின்றது. ஆண்டு 11இல் க.பொ.த. (சா/த) பரீட்சையின் பெறுபேறானது க.பொ.த(உ/த) வகுப்பைக்கற்பதற்கு ஏற்ற வகையில் கிடைக்கப் பெறாமையும் இடைவிலகல் அதிகரிப்பதற்கான காரணிகளிலொன்றாகும். உதாரணமாக யாழ்.நகர பாடசாலைகளில் 75-90 சதவீதமானவர்கள் உயர்வகுப்பில் பயிலக் கூடியதாகவிருக்க, தீவுப்பகுதிகளில் 10-15சதவீதமானவர்களே பயிலக் கூடிய வாய்ப்பினைப் பெறுகின்றனர்.

6. தகுதியான ஆசிரியர்களைப் பெற்றுக் கொள்வதில் காணப்படும் கஷ்ட நிலைகளும் கல்விநிலை சிறப்படையாமைக்குரிய காரணிகளில் முக்கியமானதாகும். தீவுப்பகுதி ஒரு கஷ்டப் பிரதேசமாகக் கருதப்படுகின்றது. இப்பிரதேசத்திற்கு வெளியிலிருந்து வரும் ஆசிரியர்கள் தமது கடமைகளை முழுமையாகச் செய்யத்தவறுகின்றனர். அதாவது அவர்கள் எவ்வளவிற்குச் சலுகைகள், உரிமைகள் இருக்கின்றதோ அவற்றைப் பூரணமாக அனுபவிக்கின்றனர். இந்நிலையாலர் மாணவர்களுக்கான கல்வி நிலை பாதிக்கப்படுகின்றது. அதுமட்டுமல்லாது உள்ளூர் ஆசிரியர்கள் யாவரும் முழுமையாக மாணவர்களின் கல்விக்குத் தம்மை அர்ப்பணிக்கின்றனர் எனக் கொள்ளமுடியாது.

7. கல்வித்திணைக்களமும் இந்தப் பின்தங்கிய பிரதேசக்கல்வி வளர்ச்சியில் பெருமளவில் அக்கறை கொண்டவர்களாகவிருக்கவில்லை முன்னேற்றமடைந்த மற்றும் நகரப்பாடசாலைகளின் வளர்ச்சியில் செலுத்தும் அக்கறை தீவுப்பகுதி போன்ற பின்தங்கிய பாடசாலைகளிற் செலுத்துவதில்லை. வளவாய்ப்புக்களைப் பின்தங்கிய பிரதேசங்களுக்குப் பகிர்ந்தளிப்பதிலும் பெரும் அக்கறை கொண்டவர்களாயில்லை.

## இடம்பெயர்நிலையும் கல்வியும்!

1991ஆம் ஆண்டு தீவுப்பகுதி ஸ்ரீலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட வேளை குடாநாட்டுடன் தரைப்போக்குவரத்தினைக் கொண்ட வேலணைத்தீவு, புங்குடுதீவு, மண்டைதீவு ஆகிய பகுதிகளிலிருந்து 95.0 சதவீதத்திற்கு மேற்பட்டோர் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கும் ஏனைய பகுதிகளுக்கும் வெளிநாடுகளுக்கும் இடப்பெயர்வினை மேற்கொண்டுள்ளனர். நயினாதீவு, அனலைதீவு, நெடுந்தீவு, எழுவைதீவு மக்கள் அவ்வப்பிரதேசங்களில் தவிர்க்க முடியாதநிலையில் தங்கவேண்டியேற்பட்டது. இதனால் அத்தீவுகளின் கல்விநிலை எவ்வாறுள்ளது என்பது பற்றி அறியமுடியாதுள்ளது. மக்கள் இடப்பெயர்வினை மேற்கொண்ட தீவுகளில் எஞ்சியிருக்கும் மாணவர்களின் கல்விநிலை பரிதாபத்திற்குரியது. மேற்படி பிரதேசங்களிலுள்ள மாணவர்களை ஒன்றிணைத்துப் புங்குடுதீவு மகாவித்தியாலயக்கட்டடத்தில் இளைப்பாறிய ஆசிரியர்களையும் அரசஊழியர்களையும்கொண்டு கல்விபோதிக்கப்படுவதாகத் தெரியவருகின்றது. அவர்களின் கல்வி வளர்ச்சியின் அடைவுகள் பற்றி விபரமாக எவற்றையும் அறியமுடியவில்லை.

புங்குடுதீவு, வேலணைத்தீவு, மண்டைதீவு ஆகியவற்றிலிருந்து இடப்பெயாவினை மேற்கொண்ட மாணவர்களைப் பொறுத்தவரை அவர்கள் தம் கல்விநிலையானதும் பரிதாபத்திற்குரியதாகவே காணப்படுகின்றது. ஏற்கனவே தீவகத்தில் அடிப்படை வசதிகள் குறைந்தநிலையிற் கல்வியைப்பெற்ற மாணவர்கள் எந்த விதமான வசதிவாய்ப்பற்ற, அனாதரவாக்கப்பட்ட சூழலில் தமது கல்வியைத் தொடரவேண்டிய நிலைக் குத்தள்ளப்பட்டுள்ளனர். இவர்கள் கல்வி கற்று வருவதைப் பொறுத்தவரை 4 வகைகளுக்குள் உட்படுத்திப் பார்ப்பது சிறப்பானது.

1. குடாநாட்டில் வேறுபாடசாலைகளில் இணைந்து, ஆனால் பெயரளவில் தனித்து இயங்குவது (வேலணை சரஸ்வதி வித்தியாசாலை-பெரியபுலம் மகாவித்தியாலயம்)

2. தனியார் கல்வி நிறுவனங்களில் இயங்குவது. (புங்குடுதீவு ஸ்ரீசித்தி விநாயகர் வித்தியாலயம்-தனியார் கல்வி நிலையம்)

3. மேலதிக வளவாய்ப்புள்ள பாடசாலைக் கட்டடங்களில் இயங்குவது (புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகாவித்தியாலயம்-யாழ். இந்து மகளிர் கல்லூரிர் விடுதி)

4. தனித்துக் கொட்டகை அமைத்து இயங்குவது. (வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி ம.ம.வி.னி அரசடி வீதி, யாழ்ப்பாணம்) என நான்கு பிரிவுகளாகப் பிரித்துக்கொள்ளலாம். இவ்வாறு இயங்கும் பாடசாலைகளில் கல்விக்கான வளவாய்ப்புக்கள் மிகக் குறைவே.

மேலும் தீவுப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மாணர்வகளிடையே இடைவிலகல் மிக அதிகமாகவிருக்கின்றது. தாம்கற்ற பாடசாலைகள் இடம்பெயர்ந்து வாழும் பகுதிகளுக்கு அண்மையில் இயங்காமை மாணவர்களுக்கான அடிப்படை வசதிகளை பெற்றோரால் வழங்க முடியாதளவிற்குப் பொருளாதாரக் கஷ்டங்கள், வெளிநாடுசெல்லல், பெற்றோரதும் மாணவர்களதும் உடல், உளத்தாக்கம் போன்ற பல்வேறு காரணிகளால் இடைவிலகல் அதிகரித்துள்ளது. மேலும் இடப்பெயர்வினை மேற்கொண்டவர்கள் யாவரும் ஒரேஇடத்தில் குடியிருப்பினை ஏற்படுத்திக் கொள்ளவில்லை. குறிப்பிட்ட சில மாணவர்கள் அவ்வப்பிரதேசப் பாடசாலைகளிலும் இணைந்துள்ளனர். 1991ஆம் ஆண்டு இடம்பெயர்வதற்கு முன்னர் தீவுப்பகுதியில் பாடசாலைகள் இயங்கிய காலத்தில் மாணவர்களின் வரவும் இடம்பெயர்ந்த பின்னர் அவ்வப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களின் வரவும் அட்டவணை 4இல் தரப்பட்டுள்ளது. அவற்றினைக் கவனத்திற்கெடுக்கும்போது மாணவர்கள் கணிசமான அளவில் அவ்வப்பாடசாலைகளை விட்டு இடை விலகியுள்ளனர் என்பது தெளிவாகின்றது.



படிப்பகம்

www.padippakam.com



1. தீவுப்பகுதியில் பாடசாலை இயங்கிய வேளையில் மாணவர்களது எண்ணிக்கை, யாழ்ப்பா ணக் கல்வித்திணைக்களத்தின் நிர்வாக அறிக்கை-1991லிருந்து பெறப்பட்டது.

2. தீவக இடம்பெயர்ந்தோர் நலன் காக்கும் கழகத்தினால் சேகரிக்கப்பட்ட தகவல்களிலிருந்து பெறப்பட்டது. எவ்வாறெனினும் மாணவர் இடை விலகல் தொடர்ச்சியாக அதிகரித்துக் கொண்டு செல்கின் றன.

அடுத்து இடம்பெயர்ந்த பாடசாலைகளில் மாணவர்கள் வரவுமிகக்குறைவாக இருந்த போதிலும் தொடர்ந்தும் அப்பாடசாலைகளை இயங்க வைப்பதில் கல்வித்திக்களத்தினர் அக்கறை கொண்டுள்ளனர். உண்மையில் தமது ஆரம்ப இடத்தில் கல்வி பயின்ற வர்களோடு ஒப்பிடுமிடத்து மிகக்குறைவான மாணவர் களே கல்வி பயில்கின்றனர். ஒருகூரைக்குள் ஒன்றுக்கு மேற்பட்ட பாடசாலைகள் இயங்குகின்றன. இதனால் ஆசிரிய வளம் வீணடிக்கப்படுகின்றது என்றே கூற வேண்டும்.

இடப்பெயர்வினை மேற்கொண்ட மக்கள் வாழ்ந்துவரும் பல குடியிருப்புக்களில் மாணவர்கள் மேல திக கல்வியினைப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பி னைப் பெற்றிருக்கவில்லை. நெருக்கமான குடியிருப்புக்களாலும் கல்வி கற்பதற்கான சூழல்காணப்படாமையா லும் போசாக்கற்ற உணவினை உட்கொள்வதனாலும் மாணவர்கள் கல்வியில் அக்கறை கொண்டவர்களாக விருக்கவில்லை என்பதைப் பல்வேறு அகதிமுகாம்களுக்கும் விஜயம் செய்தபோது அறியமுடிந்தது. தீவகமக்களின் கல்வி வளர்ச்சி அடைவதற்குரிய வாய்ப்புக்கள் குறைவடைந் துகொண்டே செல்கின்றன.
இதனை உணர்ந்து கல்வித்திணைக்களத்தினர், கல்வி மான்கள், பொதுஸ்தாபனங்கள், பெற்றோர்கள் யாவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய காலகட்டம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

PARIMALA
VARIETY & GIFT
இலங்கை இந்திய
மளிகைப் பொருட்கள்
பால் வகை
Photocopy Service
Lotto 6/49 Gift Items
Tel: (416) 412-6261
1890 Kennedy Rd. Scarborough ON(Kennedy & Ellesmere)
துரித பணமாற்றுச் சேவை
இலங்கை-இந்தியா-சிங்கப்பூர்
ஐரோப்பிய நாடுகளுக்கான
துரித பணமாற்றுச் சேவை
Tel: (416) 299-7013

கலாதீபம் 99
இனிதே நடைபெற
எமது
வாழ்த்துக்கள்...
ஈழநாடு
T.K. பரமேஸ்வரன்
பிரதம ஆசிரியர்
ஈழநாடு-கனடா
பழைய மாணவர்
Tel: (416) 654-9825
Fax: (416) 652-7493



படிப்பகம்

www.padippakam.com


# குடும்பப் பல் வைத்தியர்


**Dr. Vanathy Jeeva & Associates**

டாக்டர் (Mrs)வானதி ஜீவகுமார்

## அனைத்துப் பல்வைத்திய சேவைகள்

வாரத்தில் ஏழு நாட்களும்

- All insurance accepted
- Personal payment plans available
- Free consultation
- New patients welcome
- Seniors & Students discount given




**MISSISSAUGA**

**29C Dundas Street East**
**Mississauga ON**
**Hurontario/Dundas L5A 1V9**
**Tel: (905) 281-0273 / Fax: (905) 281-8792**



# நியூ ராஜன் சலூன்

குழந்தைகள் முதல் பெரியோர்வரை
தங்கள் அழகுத்தோற்றத்தை மேலும் அழகுபடுத்த

## *New Rajan Salon*

*Barber Beauty Salon*

**அழையுங்கள்: ராஜா**

பெரியவர்கள்: **$9.00**

**சிறுவர்கள்: $7.00**

முதியோருக்கு விசேட கழிவு உண்டு

**5010 Steeles Ave. West Unit 19**
**Kipling & Steeles**
**Toronto. ON M9P 5C6**

**Tel: (416) 741-1049**
**Pager:(416) 739-2393**




படிப்பகம்

www.padippakam.com




# NIRU DRIVING SCHOOL

- உங்களுக்கு வசதியான நேரத்தில் பயிற்சி வகுப்புக்கள்
- வீதிப் பரீட்சை நாளன்று பயிற்சியும் வாகன உதவியும்
- பலவருட அனுபவமும் பொறுமையும் உள்ள முழு நேரப் பயிற்சியாளர்
- வாகன காப்புறுதியில் விசேட கழிவுண்டு.

**Rajah Naganathan**
5 Sanromanoway, Suit # 1501
Downsview ON M3N 2Y4

**Tel: (416) 665-8481 Cell: (416) 460-4706**

# பாலசிவவர்த்தனி சுபாலயா



வேதாகம முறைப்படி திருமணம்,
புண்ணியகவாசனம், பூப்புனித நீராட்டு விழா,
கணபதி ஹோமம், லக்ஷிமி ஹோமம், நவக்கிரக ஹோமம்,
சிரார்த்தம், தொழில் வியாபார தோஷ பரிகாரங்களுக்கு
விசேட யந்திரங்கள் அமைத்துக் கொள்ளவும்
விசேட கைநூல்கள் கட்டிக் கொள்வதற்கும்....

✳✳✳✳✳✳

அழகிய மணமாலைகள், ஆண்டாள் மாலை, சடை நாகம்,
மலர்ச் செண்டு, மொத்தமாகவும், சில்லறையாகவும்
பூக்கள் பூஜைப் பொருட்கள் அனைத்திற்கும்,
மற்றும் ஜனன ஜாதகம் கணித்தல்,
விவாகப் பொருத்தம் பார்த்தல்,
ஆயுள் பலம் எழுதல், சுபமுகூர்த்த நிர்ணயம்,
தோஷபரிகாரம் அறிதல் அனைவற்றிகும் நாடுங்கள்.

புதிய அழகிய முத்து மணவறைகள், வில்லு மணவறை பெரிய குத்து விளக்கு, பூவாஸ், வாழைமரம், மணிமாலை மண்டப ஒழுங்குகள், ஆலாத்திப் பொருட்கள், நிறைகுடம், கொத்து, நிறைநாழி ஒரே இடத்தில் உரிய முறையில் நிறைவேற்றிக் கொள்ள அழையுங்கள்

**சிவஸ்ரீ. பாலஜெகனிவாசக் குருக்கள்** (கனேடிய திருமணப் பதிவாளர்-நல்லூர்)
**சிவஸ்ரீ. பாலதிருகுணாநந்தக் குருக்கள்** (கனடா ஸ்ரீ ஐயப்பன் ஆலய பிரதமகுரு)

**Tel: (416) 439-6578, (416) 816-7985 (416) 265-5836, Page: (416) 563-2264**




படிப்பகம்

www.padippakam.com





கடந்த ஒன்பது வருடங்களுக்குப் பின்னர் எமது கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப்போட்டி (21-03-1999)



பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி அன்று நடைபெற்ற உடற்பயிற்சி நிகழ்ச்சி (21.03.1999)



படிப்பகம்

www.padippakam.com



# ஒன்றுகூடல் 1999













படிப்பகம்

**BRACE FOR A**  **GREAT SMILE**



STRAIGHTENING THE TEETH

# DR. M. ILLANGO

General Practitioner Orthodontics

**EMERGENCY PAGER NO: (416) 608-5299**

## CONVENIENT LOCATIONS

**SCARBOROUGH**

**TUE, THU, SAT, SUN**
Ellesmere Prof.Budg
919 Ellesmere Road, Suit 102
**Tel: (416) 752-3455**

**MISSISSAUGA**

**MON, FRI, SAT**
3660 Hurontario St. 2nd Floor
(Hurontario / Burnenthope)
**Tel: (905) 272-3455**


**DOWN TOWN**

**MON**
Rosedale Medical Center
600 Sherbourne St, Suit 305
**Tel: (416) 967-9272**

**NEW LOCATION**

**3852 Finch Ave. East**
**Unit No: 303**
**Finch/Kennedy**
**Tel: (416) 292-7004**

www.padippakam.com

கல்லூரி மாணவர்களுக்கு போஷாக்கு உணவு வழங்கப்படுகின்றது.



மறைந்த காவலாளி அமரர் நா. ஆனந்தராஜாவின்
பெற்றோருக்கு அதிபர் நிதியுதவி வழங்கும் காட்சி.


படிப்பகம்

www.padippakam.com




1999இல் கல்லூரியும் அதன் அதிபர்-ஆசிரியர்களும்

படிப்பகம்

www.padippakam.com



# அமரர் பண்டிதர் க. இராசையா



ஸ்ரீவகத்தில் சரவணையைப் பிறப்பிடமாகக்கொண்ட அமரர் இராசையா அவர்கள், முதலில் பயிற்றப்பட்ட ஆசிரியராகவும் பின்னர் பண்டிதராகவும், பட்டதாரியாகவும் பட்டம்பெற்றுப் பல ஆண்டுகள் தொடர்ச்சியாக எமது கல்லூரியில் பணிபுரிந்தார். இவர் சிலகாலம் எமது கல்லூரியின் அதிபராகவும் சேவையாற்றினார்.

தமிழ்மொழியில் புலமைமிக்க இவர், தமிழ் இலக்கணத்தில் பாண்டித்தியமுடையவர். தமிழ் இலக்கியம், இலக்கணம் ஆகியவற்றைப் போதிப்பதில் துறைபோனவர். மாணவர் மனங்கொளத்தக்க வகையில் பாடங்களைப் போதிப்பதில் கைதேர்ந்தவர். கண்டிப்பும், கடமையுணர்வும் மிக்க வர். இவரிடம் தமிழ் கற்றவர்கள் தமிழில்பயிற்சியும் தேர்ச்சியும் பெற்றுவிளங்கு கிறார்கள். கல்லூரி வளர்ச்சிக்குத் தொண்டாற்றியவர்களில் குறிப்பிடத்தக்கவர்.

கல்லூரியின் பழைய மாணவர்களால் இன்றும் நினைவுகூரப்படும் ஆசான்களில் இவரும் ஒருவர்.

**-க. சிவராமலிங்கம்-**

## அமரத்துவமாது
## திருமதி சொர்ணம்மா சிவசுப்பிரமணியம்
### (குமாரசாமி ரீச்சர்)



யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் நடுநாயகமாக விளங்கும் லைடன் தீவிலே சரவணை என்னும் சிற்றூரில் திரு.திருமதி குமாரசாமி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியாக உதயமானவர் திருமதி சொர்ணம்மா சிவசுப்பிரமணியம் அவர்கள். இவர் தமது ஆரம்பக் கல்வியை யாழ். சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலையிலும் உயர்கல்வியை வேலணை மத்திய கல்லூரியிலும் கற்றபின் யாழ்.பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயின்று தான் கற்ற கல்லூரியிலேயே ஆசிரியையாகப் பணியாற்றும் பெரும் பேற்றைப் பெற்றார்.

தாமின்புறுவ துலகின்புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்.

அதாவது, கல்வி தனக்கு ஆனந்தத்தையும், தன்மூலம் பிறருக்கு ஆனந்தத்தையும் அளிக்கவல்லது என்ற உண்மையை அறிந்து அறிஞர்கள் போற்றுவார்கள் என்னும் வள்ளுவன் வாய்மொழிக்கிணங்க வாழ்ந்துகாட்டிய பெருமாட்டியாவார்.

சனி, ஞாயிறு விடுமுறைகளிலும் தன் அயராத முயற்சியினால் சரவணையிலிருந்து வேலணை மத்திய கல்லூரிக்கு நடந்துவந்து தன் வகுப்பு மாணவர்களுக்கு விசேட வகுப்புக்களை நடத்தி மாணவர் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டார். இதற்கு ஆதாரமாக இவரது மாணவர்கள் இவரது பெயரில் ஓர் ஞாபகார்த்தப் பரிசுத் திட்டத்தை நடாத்தி வருவதை குறிப்பிடலாம்.

இவர்தம் சகோதரி திருமதி பரமேஸ்வரி சுப்பிரமணியம் அவர்களும் இவரைப் போலவே வாழ்ந்து வந்தவர். அவர் பாதையிலேயே தானும் சென்று அழியாப் புகழ்பெற்றார். இவர்களை இவ்வரிய சந்தர்ப்பத்தில் நினைவுகூர வேண்டியது எமது கடமையாகும்.

**ஆ.ச.பத்மநாதன்**

ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், தொழிற்திணைக்களம்-வவுனியா



படிப்பகம்

www.padippakam.com




**EXECUTIVE COMMITTEE 1998-1999**

SEATED: (L-R) A. Gajendran, A. Aravinthanathan, S. Elancheliyan (President), K. Baskaran (Secretary), P. Panchalingam (Treasurer), M. Patkunasingam
STANDING: (L-R)P. Karunakaran, P. Jeyachelvan, P. Sivaram, R. Thiruvarooran, P.N. Magesan, K. Elanthirayan, S. Poologapooranan, N. Sountharanathan

படிப்பகம்

www.padippakam.com

**VELANAI MADYA MAHA VIDYALAYAM**
**OLD STUDENTS' ASSOCIATION - CANADA**

## EXECUTIVE COMMITTEE

**PATRON**
**Dr. K. Sittampalam**

**PRESIDENT**
**S. Elancheliyan**

**SECRETARY**
**K. Baskaran**

**TREASURER**
**P. Panchalingam**

**AUDITOR**
**E.K. Sivakumaran**

**COMMITTEE MEMBERS:**

A. Aravinthanathan
A. Gajendran
S. Poologapooranan
K. Elanthirayan
M. Sountharanathan
P. Sivaram
P. Karunakaran
M. Patkunasingam
P. N. Magesan
R. Thiruvarooran
P. Jeyachelvan

# 98-99



*Please Visit Our Website @*
**http://www.vmmvosa.on.ca**

படிப்பகம்

www.padippakam.com



LATE MR. A.K.K. ON

# "SCHOOL EXHIBITIONS"

**(Appearing in the Velanai M.M.V., Souvenir-1969)**

"A School Exhibition presupposes that the school has something original, novel, entertaining, and out of the ordinary to invite public inspection and hence public criticism too. The chief executants of the project are the students themselves, of course with the occasional counsel and guidance of their elders. These Exhibitions should not therefore be cavalierly dismissed as being a piece of window dressing to bolster up the reputation of the school, but as happy play way in education, acknowledged by common consent as a very effective and entertaining method of learning. It is trite to say that these exhibitions should also serve as a means of discovering and exploiting latent talent in the pupils. Just as in a Country Churchvard a 'mute inglorious Milton may dwell, some Cromwell guiltless of his country's blood" so amongst these young exhibitors there well may be a Michael Faraday, a Thomas Alva Edison, an Albert Einstein, a HerrVon Braun, an Oppenheimor a Dr. Ponnamperuma. Were not these geniuses school boys? And did any schoolmaster dare foretell how the sum total of human knowledge would be affected by these master minds? So if one or another of these exhibitors shall produce in the fullness of time at least one above the common run of men, then such exhibitions shall have more than served their purpose. To come to more prosaic matters. The Exhibition can also serve as the nucleus of an activity that may in later years blossom forth into an industry, which may eventually spell the way for the Nation's industrial expansion and economic emancipation."

**-T. N. PUNJAKSHARAM-**

# Late Mr. Subramaniam Ratnarajah

*It is not always that the demise of a person stuns and shocks the multitude of all ranks and of all walks of life as had been in the case of the untimely exit of the zonal Director of Education, Mr. S.Ratnarajah, a veritable human dynamo who like a vedhanti with the commitment of a commissar laboured round the clock to revamp many schools badly shattered by the ethnic turmoil before normalcy was restored.*

*Mr. Ratnarajah, even his bitterest critics would agree, had rendered signal service by all the pupils teachers to all the neglected schools. As the last English Director of Education of Sri Lanka, Dr. H. W. Howes once said that a director of Education is a servant of the servants of children is a servant of the servants of children whose every act and decision must be child centered, Mr.Ratnarajah had been a living testimony to this grand ideal. Unlike a Jack-in-Office more concerned with his power, position and prestige, he went about his duties cutting across all red-tame with a rare vision blended with rank humility and simplicity. Everyone with a grievance had direct access to him and everyone with a genuine grievance merited his attention and speedy redress.*

*In many ways he was an enlightened administrator of a rare vintage whose only guiding principle was to do all the good one could do to all people at all the times one could. A public Servant of his calibre who does not work to rule is a rare fund in our time and day when none will sweet but for promotion and having that do choke their service up. This was not the case with Mr. Ratnargjah who sweated for duty, not for need. The worth of the man and his nexus with all sectors of the public, the schools and the community was amply borne by the milling crowd at his funeral, the sincere homage and the touching homilies paid to the man by distinguished persons from all walks of life. These are pointers to his intrinsic worth as a man and a sincere servant of the community.*

*Himself a product of a Central School of Dr. C. W.W. Kannangara's vision to open portals of learning to all Darlings of Chill Penury, Mr. Ratnarajah. One of the beneficiaries himself was well and truly aware of the needs of poor, remote schools, so much so when the opportunity came his way, he set about working repay his debt to the Nation's poor children-the lame dogs to get over the stile!*

*As a teacher, Education officer and finally as a Zonal Director, he was inimitable-Non-paraeil by any standard. His loss will be felt for a long time to come.*

*May he smell sweet in his ashes and blossom in the dust. Om shanthi!*

**-T. N. PUNJAKSHARAM-**



படிப்பகம்

www.padippakam.com





*For all your Graphic Design and Printing Service needs*

ROYAL Graphic inc.

3031 Markham Road, Unit 30
Scarborough, Ontario
M1X 1L9

**Tel: (416) 293-9163**
Fax: (416) 293-9617

***Old Student of Velanai Madya Maha Vidyalayam***



படிப்பகம்

www.padippakam.com


# நன்றிக்குரியவர்களே...

நன்றி கூறுவது வெறும் சம்பிரதாயத்திற்கு மட்டுமல்ல. உங்கள் உதவிகளுக்கும் எங்கள் இதயங்களுக்குமான ஆத்மார்த்தமான புறப்பாடு என்பதை அனைவரும் அறிவோம். எனினும் நாங்கள் கூடி நிகழ்த்தும் இந்த விழா தெலைதூரம் நோக்கிய எமது பயணத்தின் மைல்கல் என்றால் அது மிகையாகாது.

இவ்விழாவும் மலரும் சிறப்பாக அமைய எமக்கு உதவியவர்கள் பலர். அவர்களுள் குறிப்பாக....

* எமது அழைப்பை ஏற்று வருகைதந்த பிரதம விருந்தினர் அவர்கள்,
* புலம் பெயர்ந்த மண்ணின் வர்த்தகப் பெருமக்கள்,
* பத்திரிகையாளர்கள், வானொலி நிலையத்தினர்,
* நிகழ்ச்சிகளை வழங்கிச் சிறப்பித்த அனைத்துக் கலைஞர்கள்,
* அச்சகத்தார், அச்சமைப்புக்கு உதவியோர்
* அட்டைப்படத்தை வடிவமைத்த digi Graphics & Studios ஸ்தாபனத்தார்.
* ஒலி, ஒளி அமைப்பாளர்கள், நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கிய அறிவிப்பாளர்கள்,
* கட்டுரைகள், கவிதைகள், சிறுகதை, வாழ்த்துக்கள் வழங்கியவர்கள்,
* மற்றும் சகல வழிகளிலும் எமக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த அனைவருக்கும்
* தமிழர் ஐக்கிய அமைப்பினர், 42ஆவது பிரிவு பொலிஸ் உத்தியோகத்தினர், ரொறன்ரோ கல்விச்சபையினர்
* இக்கலைவிழாச் சிறப்புறச் சகல வழிகளிலும் பங்களிப்பு நல்கிய அனைவருக்கும் வருகைதந்து சிறப்பித்த உங்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள்.

**வேலணை மத்திய மகாவித்தியாலயம்**
**பழைய மாணவர் சங்கம் -கனடா**



## கலை கலாச்சாரக் குழு

| | |
|---|---|
| ஆ. பாலேந்திரன் | சு. சந்திரகுமார் |
| பொ. சிவபாலன் | ம. சௌந்தரநாதன் |
| அ. இருதயநாதன் | ப. ஜெயச்செல்வன் |
| சி. மகாபூரணன் | சா. குமாரதாசன் |
| பா. ஸ்ரீபாலகாந்தன் | மு. ஜீவன் |


படிப்பகம்

www.padippakam.com


# Extra Exchange Co

## Free charge




SANS COMMISSION - KEIN GEBÜHREN - NO COMMISSION

**தங்க நாணயங்களை குறைந்த விலையில்
பெற்றுக் கொள்ளவும், வெளிநாட்டு நாணயங்களை கொமிஷனின்றி மாற்றிக்
கொள்ளவும் நாடுங்கள்.**

123, Bld Magenta, 75010 PARIS
Métro : Gare du Nord
Tél: 01 48 78 35 33
Fax: 01 48 78 35 33

www.padippakam.com


# New Kalyani
## CATERING





**உங்கள் நாவுக்கு ருசியூட்டும் வகையில் மிகவும் சிறந்த முறையிலும் ஒவ்வொரு நாளும் தயாரிக்கப்படும் பல்வகைப்பட்ட உணவு வகைகளை நேரில் வந்து பெற்றுக் கொள்ளளுங்கள். நீங்கள் விரும்பியவற்றை தொலைபேசி மூலம் ஓடர் செய்தும் பெற்றுக் கொள்ளலாம்.**

*சைவ உணவு வகைகள், இடியப்ப புரியாணி, சிக்கன் புரியாணி, தண்டுரி, அச்சாறு, இறால் டெவில், வட்டிலப்பம், கொத்து ரொட்டி, பலகார வகைகள் மற்றும் கட்லட், பற்றீஸ் எதுவானாலும் கூறுங்கள் செய்து தரப்படும். இடியப்பம், புட்டும் மீன்பொரியல், இட்லி, தோசை, மசாலா தோசை, கொத்து ரொட்டி வகைகள் உங்கள் நாவுக்கு சுவையூட்டும்.*

## NEW KALYANI CATERING

292 Markham Road (Markham/Eglinton) Scarborough, ON

**(416) 261-9774 or (416) 723-0289**

Cover Design: digi Graphics & Studios